# குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு
# 2012
# பிரதான தேடல்கள்

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, திட்டமிடல் அமைச்சு
ஆதரவு - ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்
இலங்கை

**ISBN : 978-955-577-906-7**

சனத்தொகைத் தொகைமதிப்பு மற்றும் மக்களியற் பிரிவு
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
இல. 16/7, அல்பேட் கிறசன்ட், கொழும்பு 07.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | +94 11 2695940 |
| தொலைநகல் | : | +94 11 2673657 |
| மின்னஞ்சல் | : | census@statistics.gov.lk |
| இணையத்தளம் | : | www.statistics.gov.lk |

# முன்னுரை

தீர்மானம் எடுப்பதற்கும் கொள்கைத் திட்டமிடலுக்கும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சரியான புள்ளிவிபரங்களை வழங்கிவருகின்றது. இவ்விடயத்திற்குப் பத்து வருடங்களுக்கொருமுறை நடாத்தப்படும் குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. இலங்கையில் 14ஆவது குடிசன வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 31 வருடங்களின் பின்னர் முழுநாடும் உள்ளடங்கும் வகையில் 2012ஆம் ஆண்டில் நடாத்த முடிந்தமை இலங்கை மக்கள் அனைவரதும் பாரிய சாதனையாகும்.

குடிசன, வீட்டுவசதித் தொகைமதிப்பின் தகவல்கள் பல கட்டங்களாகப் பரப்பாக்கம் செய்யப்பட்டு புதிய தகவல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வெளியீடுகள் எமது திணைக்களத்தின் விற்பனைக் கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளன.

இவ்வெளியீடானது, 2014 டிசம்பர் மாதம் நடைபெற்ற 2012 குடிசன மற்றும் வீட்டுவசதித் தொகைமதிப்பில் கண்டறியப்பட்ட மிக முக்கியமான தகவல்களை வெளியிடும் கருத்தரங்கிற்கு இணையாக வெளியிடப்பட்டதொன்றாகும். மேலும், இவ்வெளியீடானது தெரிவு செய்யப்பட்ட முக்கிய தலைப்புக்களில் பல மக்களியல் குறிகாட்டிகளை விசாலமாக ஆய்வு செய்து வழங்குகின்றது. இந்த வெளியீடானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் சனத்தொகைமதிப்பு மற்றும் மக்களியிற் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் மக்களியற் பிரிவின் சிறப்பறிஞர்களால் தயாரிக்கப்பட்டதாகும்.

குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பை நடாத்துதல் மிகவும் சிக்கலான செயற்பாடு என்பதுடன் இதற்காகக் கணிசமானளவு மனிதவளம் மற்றும் நிதி அவசியமானதாகும். ஆகையால் இந்தத் தகவல்களைச் சரியாகவும் பொறுப்புடனும் பயன்படுத்தி இலங்கை மக்களின் வாழ்வு மேம்பட இத்தகவல்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் தரவு பயன்படுத்துவோரின் பொறுப்பாகும்.

டீ.சீ.ஏ. குணவர்த்தன
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

2014/12/12



## ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதிய (UNFPA) வதிவிடப்பிரதிநிதியின் வாழ்த்துச் செய்தி

குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 2012 இன் பிரதான தேடல்களின் வெளியீட்டிற்கு அனுசரனை வழங்குவதில், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் பணிநேக்கு (UNFPA) ஒவ்வொரு உயிர் பிரசவத்தையும் உறுதிசெய்யத் தேவையான உதவிகளை வழங்கல், ஒவ்வொரு உயிர் பிறப்புக்களையும் பாதுகாத்தல் மற்றும் இளம் வயதினரின் திறன்கள் பூரணத்துவம் பெறவும் பங்காற்றும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி என்பதாகும்.

சனத்தொகையின் எண்ணிக்கையையும் நடத்தையையும் கண்டறியும், மக்கள் தொகைமதிப்பு தகவல்களின் ஆரம்ப மூலமாகும். உலகளாவிய ரீதியில், அதிக நாடுகளில், மக்கள் தொகைமதிப்பானது, நாட்டின் சனத்தொகையின் அங்கத்தவர்களின் தகவல்களை ஒழுங்குமுறையாக உள்வாங்கவும், பதிவுசெய்யவும் பல முக்கிய செயல்முறைகள் மக்கள் தொகைமதிப்பில் உள்ளன. இது ஆரம்ப தலைமுறையின் தளத்தை உருவாக்குகிறது ஆனால் தேசிய மற்றும் சர்வதேச அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய நகர்வு மற்றும் அபிவிருத்தித் திட்டமிடல்களுக்கு இந்த அடிப்படைத் தரவு தேவைப்படுகிறது.

மேலும், ஒரு மக்கள் தொகைமதிப்பானது முக்கிய ஆளுகை, பரவலாக்கம் மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான அடித்தளத்தின் முக்கிய பகுதியை வழங்குகிறது. கொள்கை வகுப்பாக்கம் மற்றும் பரந்த பிரிவுகளுக்கான திட்டமிடல்கள் மற்றும் ஆதார-அடிப்படையிலான கொள்கை உரையாடல்களுக்கான அடிப்படைகளை வழங்கவும் தொகைமதிப்புத் தரவு மற்றும் தகவல்கள், துணைநிற்கின்றன.

கடந்த 30 வருடங்களைக் கடந்து இடம்பெற்ற காரணத்தால் 2012 குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பானது, இலங்கையின் தற்கால வரலாற்றை நோக்கின் ஓர் மைல்கல்லாகும், முழுநாடும் தழுவிய தொகைமதிப்பூடான கண்டறிகைகள் தற்போது கைவசமுள்ளன. இது ஒரு நாடு தன் அபிவிருத்திப் பாதையை விரைவாக மாற்றியமைப்பதற்குரிய முக்கிய தருணமாகும். அதாவது, இத்தொகைமதிப்பின் தேடல்கள், சனத்தொகை நடத்தைகளின் நல்லதொரு புரிந்துணர்வு மற்றும் முக்கியமாக சரியான முதலீடுகளுக்கான உதவிகள், “தடுக்கமுடியாத இலங்கை” இன் எண்ணங்களைச் செயற்படுத்தும் கொள்கை முடிவுகள் ஆகியவற்றின் மாறுதல்கள் என்பவற்றை வழங்குகிறது.

2012 தொகைமதிப்பு நடவடிக்கைக்கு ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியம், பெருமிதத்துடன் துணைநின்றதுடன், எமது ஒத்துழைப்பு கொள்கைத் திட்டமிடலில் மக்களியல் பரிமாணங்களை ஒருங்கிணைக்கவும் நிதியறிக்கையாக்கத்திற்கும் தொடர்ச்சியாக உதவுகின்றது. எனவே கொள்கை வகுப்பாளர்கள் நாட்டின் அபிவிருத்தி உயர்வடைந்துள்ளமை மற்றும் மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளின் நிறைவு ஆகியவற்றைக் நன்கு எடுத்துரைக்க முன்வரவேண்டும்.

திரு. எலெய்ன் சிபெனலர்
ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதிய வதிவிடப் பிரதிநிதி, இலங்கை



## பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களமானது 14ஆவது குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பை 2012 இல் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. முழுநாடும் தழுவியவகையில் 31 வருடங்களின் பின் மேற்கொள்ளப்பட்ட இத்தொகைமதிப்பானது இலங்கையின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். எனவே இத்தொகைமதிப்பில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் தரவுப் பாவனையாளர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். குடிசன, வீட்டுவசதித் தொகைமதிப்புத் தகவல்கள், நாட்டின் மிகச் சிறிய அலகு மட்டத்தில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் ஆரம்பத் தரவு மூலமாகும். பல்வகைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்க, அபிவிருத்தித் திட்டங்களை மதிப்பீடு செய்ய மற்றும் கொள்கைத் திட்டமிடலாளர்களதும் ஆய்வாளர்களதும் பாவனைக்கும் குடிசன, வீட்டுவசதித் தொகைமதிப்பு மூலமான தகவல்கள் முக்கிய பங்களித்துச் செயலாற்றுகின்றன.

எந்தவொரு நாட்டிலும் குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பானது பாரியதொரு புள்ளிவிபர நடவடிக்கையாகும். எனவே, முடிவுகளை வெளியிடுவது தரவுப் பரீட்சிப்பு மற்றும் தரவு வகைப்படுத்தும் நடவடிக்கைகளில் தங்கியுள்ளது. தரவுகளின் பரப்பாக்கம் பல்வேறு கட்டங்களைக் கொண்டது. கணக்கெடுப்பாளர்களின் தொகுப்புக்களிலிருந்து இரு ஆரம்ப வெளியீடுகள் 2012 இல் வெளியிடப்பட்டுள்ளன. முடிவுகளை வெளியிடுவதை விரைவுபடுத்த 5 சதவீத மாதிரியிலிருந்து மேலும் பல தகவல்களடங்கிய வெளியீடு 2014 இல் வெளியிடப்பட்டுள்ளது. தொகைமதிப்பின் இறுதி அறிக்கை மற்றும் மாகாண மட்ட அறிக்கைகள் மிகவிரைவில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வெளியீடானது 2012 தொகைமதிப்பின் பிரதான தேடல்களின் பரப்பாக்கத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வெளியீட்டில் சனத்தொகை அளவு, வளர்ச்சி மற்றும் பரம்பல், விவாகம் மற்றும் கருவளம், கல்வி, எழுத்தறிவு, உள்நாட்டு இடம்பெயர்வு, தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிப்போர் மற்றும் இடர்பாடுள்ள சனத்தொகை ஆகிய விடயங்கள் உள்ளடங்குகின்றன. மேலும் சில முக்கிய வீட்டுவசதிகளின் நடத்தைகளும் இங்கு உள்வாங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாகக் கொள்கை வகுப்பாளர்ககளின் விசேட கவனத்திற்காக சனத்தொகை முகம்கொடுக்கும் சவால்கள், பிரச்சினைகள் மற்றும் கொள்கை முன்மொழிவுகள் என்பவற்றை உள்ளடக்கிய அத்தியாயம் இந்த அறிக்கையின் இறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்வெளியீட்டிலுள்ள பிரதான தேடல்கள் இலங்கை மக்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்த கொள்கை வகுப்பாளர்களுக்குப் பயனளித்துச் சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை வெற்றிகரமாக நடாத்துவதற்கும், இந்த மாநாட்டினை நடாத்துவதற்கும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA) வழங்கிய ஒத்துழைப்பிற்காக எனது இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் செயற்பாட்டிற்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய மக்களியல் தொடர்பான சிறப்பறிஞர்களுக்கும், திணைக்களத்தின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டீ. சீ. ஏ. குணவர்த்தன
பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்



## மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி

குடித்தனங்களின் நல்லிருப்பு மற்றும் செழிப்பிற்கான திட்டமிடல்களன்றி தேசத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முழுமைபெறாது. திட்டமிடல் நடவடிக்கைகள் மக்கள் விருப்புடன் பதிலளிக்க வேண்டும், இது மக்களியல் தரவுகளின் ஒருங்கிணைவிற்கு இன்றியமையாததாகும். இது எவ்வாறாயின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்களே முகவர்களாகவும் பயனாளிகளாகவும் உள்ளனர்.

எந்தவொரு நாட்டினதும் பரந்தளவிலான மக்களியல் மற்றும் சமூக-பொருளாதார புள்ளிவிபரங்கள் மற்றும் வீட்டுவசதி நிலைமைகள், நீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் ஆகியவற்றின் உண்மைத் தகவல்களை வழங்க தொகைமதிப்புக்களே பிரதான தரவு மூலமாகவுள்ளன.

இதுவே தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களமானது அதிகளவு செலவில் குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பை நிகழ்த்துவதற்கான முக்கியதொரு காரணமாகும். சர்வதேச தரங்களுக்கமைய, இலங்கையில் 10 ஆண்டுகளுக்கொருமுறை குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பை நிகழ்த்துவது முன்னேற்றகரமான அனுபவமாகும். தொகைமதிப்பின் இறுதிச் சுற்றானது மார்ச் 2012 இல் நடாத்தப்பட்டது.

இறுதித் தொகைமதிப்பின் மூலம் திரட்டப்பட்ட தரவுகளிலிருந்து பல அறிக்கைகள் தொடர்ச்சியாக ஏலவே வெளியிடப்பட்டுள்ளன. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களப் பதவியணியினர், திணைக்களத்திற்கு வெளியேயுள்ள உள்நாட்டுப் பல்கலைக்கழகம் மற்றும் ஆய்வு நிறுவனங்களைச் சார்ந்த சிறந்த பேராசிரியர்கள் போன்றோரால் பல்வேறு வடிவங்களில தலைப்புக்களின்கீழ் தொகைமதிப்புத் தரவுகள் ஆழமாக ஆராயப்பட்டுள்ளன. அக்கற்கைகளில் கண்டறியப்பட்ட முக்கியமான தகவல்களின் தொகுப்புக்கள் பல்வேறு மக்களியல் தலைப்புக்களின்கீழ் இவ்வெளியீட்டில் வழங்கப்பட்டுள்ளன. எமது நாட்டின் தெரிவுசெய்யப்பட்ட மக்களியல் நிலைமைகள் கடந்த சில தசாப்தங்களில் எவ்வாறு மாறியுள்ளன என்பதை விரிவாக விபரிப்பதுடன் இத்தகவல்கள் குறிப்பாக எமது அரசாங்கம் மக்களின் விருப்பிற்கிணங்க நிகழ்ச்சிகளையும், திட்டங்களையும் ஒழுங்காக முழுமைப்படுத்தவும் இவ்விடயங்கள் பயன்படும். தொகைமதிப்புத் தரவுகள் பல சமூகநிலைகளில் நியாயபூர்வமாக நிதி ஒதுக்கீடு செய்யவும் நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கும் கைகொடுக்கிறது.

தொகைமதிப்பின் பெறுமதியின் அதிகளவு நம்பகத்தன்மையின் உடனடித் தேவையொன்றுள்ளது. தொகைமதிப்பின் நம்பகத்தன்மையானது, தொகைமதிப்பின் எண்ணக்கருக்களை தரமான தகவல்களின் முக்கிய மூலமாக்கி முன்னிலைப்படுத்தும், பாராளுமன்ற உறுப்பினர்கள், கொள்கை வகுப்போர் மற்றும் குடிசார் சமூகம் மற்றும் தனியார்துறைப் பிரதிநிதிகள் போன்ற ஏனைய பங்குதாரர்கள், மற்றும் பல தொகைமதிப்புத் தரவுகளின் ஆற்றல்மிகு பயன்கள், விசேடமாக தேசிய வறுமைக் குறைப்புக் குறிக்கோள் சார்ந்தவை, அத்துடன் அவதானிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கான தேவைகள் போன்றவற்றைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

மேலும் இத்தருணத்தில் நான் குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2012 இல் பங்காற்றிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்புத் தரவுகளின் பரப்பாக்கத்திற்கு, ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியத்தால் வழங்கப்பட்ட உதவிகள் மிகவும் பாராட்டுக்குரியவை.

கலாநிதி அமர சத்தரசிங்க
மேலதிக பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்



## பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் பிரதானமான பொறுப்பு கொள்கை வகுப்போர், திட்டமிடலாளர்கள் மற்றும் ஏனைய தரவுப் பாவனையாளர்களுக்கு தொகைமதிப்பு, அளவீடு மற்றும் நிர்வாகத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பரப்பாக்கம் செய்வதாகும். இந்தப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக மூன்று தசாப்தங்களின் பின்னர் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் 14 ஆவது குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பானது தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

தொகைமதிப்புத் தகவல்கள் பல்வேறு கட்டங்களாக வெளியீடு செய்யப்படும். இதுவரை வெளியிடப்பட்டுள்ள தொகைமதிப்பு வெளியீடுகளுக்கு மேலதிகமாக இன்றைய தினம் உங்களின் கைகளுக்குக் கிடைப்பது 2012 தொகைமதிப்பின் இறுதித் தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்ட வெளியீடாகும்.

தொகைமதிப்புத் தகவல்களின் மூலம் ஒரு குறித்த கணத்தின் சனத்தொகையினரின், சனத்தொகை மற்றும் வீட்டுவசதிகளின் நடத்தைகளின் பன்முகத்தன்மை பிரதிபலிக்கப்படுகின்றன. இதற்கமைய குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை அறிந்து கொள்ள முடியும். தரவுப் பாவனையாளர்கள் சரியான தீர்மானங்கள் மேற்கொள்வதை இலகுபடுத்துவதற்காகத் தொகைமதிப்புத் தரவுகள் அளவு ரீதியான குறிகாட்டிகளாக மாற்றப்பட்டுள்ளதுடன் இந்த வெளியீட்டின் மூலம் பல குறிகாட்டிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பிழையின்றி விளங்கிக்கொள்ளல் சகல தரப்பினரதும் பொறுப்பாகும். இன்று நடைபெறும் மாநாடு இது தொடர்பில் உங்களை மேலும் ஊக்குவிக்கும் என்பது உறுதி.

இறுதித் தொகைமதிப்புத் தகவல்களின் மூலம் இந்த வெளியீட்டைத் தயாரிப்பதற்கு மற்றும் மாநாட்டினை வெற்றிகரமாக நடாத்துவதற்கு பங்காற்றிய மக்களியல் தொடர்பான சிறப்பறிஞர்களுக்கும் சனத்தொகைமதிப்பு மற்றும் மக்களியல் பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும் இதற்காக உதவி வழங்கிய ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்திற்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொகைமதிப்புத் தகவல்களை வெளியீடு செய்தலானது தொகைமதிப்பினைத் திட்டமிட்ட கணத்திலிருந்து பல்வேறு நபர்களின் கூட்டுமுயற்சி மற்றும் பொறுப்பு மிக்கதுமான நடவடிக்கையின் இறுதிப் பெறுபேறாகும். அந்த அனைவருக்கும் எனது கௌரவங்கள் உரித்தாகட்டும்.

திருமதி. ஐ. ஆர். பண்டார,
பணிப்பாளர்,
சனத்தொகை மற்றும் மக்களியல் பிரிவு
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

## பொருளடக்கம்

முன்னுரை ....................................................................................................................................III

ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதிய (UNFPA) வதிவிடப்பிரதிநிதியின் வாழ்த்துச் செய்தி........V

பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி ................................................................................ VI

மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி.......................................................................VII

பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி .....................................................................................................VIII

வரைபடங்களின் பட்டியல்.................................................................................................................X-XIII

அட்டவணைகளின் பட்டியல் ..............................................................................................................XIV

**அறிமுகம்** 1

சனத்தொகை அளவு, வளர்ச்சி மற்றும் பரம்பல் ...................................................................... 7

வயதுப் பால் கட்டமைப்பு....................................................................................................................15

இனத் தொகுதி மற்றும் சமய அடிப்படையிலான கட்டமைப்பு - 2012 ............................................23

விவாக அந்தஸ்து ..............................................................................................................................27

கருவளம் ..........................................................................................................................................35

எழுத்தறிவு .......................................................................................................................................43

கல்வி.................................................................................................................................................47

இடம்பெயர்வு.....................................................................................................................................51

உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகள் ...................................................................................63

வீட்டுவசதிகள் ..................................................................................................................................67

சனத்தொகை தொடர்பான சவால்கள், பிரச்சினைகள் மற்றும் உபாய மார்க்கங்கள்..................79

## வரைபடங்களின் பட்டியல்


வரைபடம் 1 : சனத்தொகையின் அளவு மற்றும் வளர்ச்சி 1971 - 2012 ..... 8

வரைபடம் 2 : மாவட்ட அடிப்படையில் சனத்தொகை அதிகரிப்பு 1981 - 2012 ..... 9

வரைபடம் 3 : மாவட்ட மட்டத்திலான சனத்தொகைப் பரம்பல் மற்றும் சனத்தொகை அடர்த்தி - 2012 ..... 10

வரைபடம் 4 : மாவட்ட மட்டத்திலான சனத்தொகை அடர்த்தி - 2012 ..... 11

வரைபடம் 5 : நகரங்களின் விசாலத் தன்மையும் பரம்பலும் - 2012 ..... 12

வரைபடம் 6 : மாவட்ட அடிப்படையில் நகராக்கம் ..... 13

வரைபடம் 7 : பால் (ஆண் பெண்) வீதாசாரம் 1981 - 2012 ..... 16

வரைபடம் 8 : வயதுக் கட்டமைப்பு 1981 - 2012 ..... 16

வரைபடம் 9 : விரிவான வயதுப் பிரிவுக்கமையச் சனத்தொகை 1981 - 2012 ..... 17

வரைபடம் 10 : தங்கியிருப்போர் வீதம் 1981 - 2012 ..... 18

வரைபடம் 11 : முதியோர் சனத்தொகை 1946 - 2041 ..... 18

வரைபடம் 12 : முதுமைச் சுட்டெண் ..... 19

வரைபடம் 13 : 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவயதுப் பிரிவுக்கமைய முதுமையடைதல் 1981 2012 2041 ..... 20

வரைபடம் 14 : முதுமைச் சனத்தொகையின் பால் வீதாசாரம் 1981 - 2012 ..... 20

வரைபடம் 15 : முதியோர் சனத்தொகையின் விவாக நிலைமை - 2012 ..... 21

வரைபடம் 16 : இன ரீதியான சனத்தொகைக் கட்டமைப்பு - 2012 ..... 24

வரைபடம் 17 : 1981, 2012 இடையில் இன ரீதியான சனத்தொகைக் கட்டமைப்பு ..... 24

வரைபடம் 18 : சமய அடிப்படையிலான கட்டமைப்பு - 2012 ..... 25

வரைபடம் 19 : 1981 - 2012 இடையில் சமய அடிப்படையிலான கட்டமைப்பு ..... 25

வரைபடம் 20 : விவாக அந்தஸ்திற்கமைய 15 வயது மற்றும் அதிலும் கூடிய ஆண் சனத்தொகையின் வீதாசாரம் - 2012 ..... 28

வரைபடம் 21 : விவாக அந்தஸ்திற்கமைய 15 வயது மற்றும் அதிலும் கூடிய பெண் சனத்தொகையின் வீதாசாரம் - 2012 ..... 28

வரைபடம் 22 : வயதுப் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய ஒரு போதும் விவாகம் செய்யாத சனத்தொகையின் வீதாசாரம் - 2012 ..... 29

வரைபடம் 23 : வயதுத் தொகுதி மற்றும் பிரிவுக்கமைய ஒரு போதும் விவாகமாகாத ஆண்கள் சனத்தொகையின் வீதாசாரம் - 2012 ..... 29

வரைபடம் 24 : வயதுத் தொகுதி மற்றும் பிரிவுக்கமைய ஒரு போதும் விவாகமாகாத பெண்கள் சனத்தொகையின் வீதாசாரம் - 2012 ..... 30

வரைபடம் 25 : பால் மற்றும் பிரிவுக்கமைய திருமணமாகும் சராசரி வயது - 2012................30

வரைபடம் 26 : இனத் தொகுதி அடிப்படையில் திருமண வயதின் சராசரிப் பெறுமதி - 2012 ......31

வரைபடம் 27 : பால் மற்றும் மாவட்ட அடிப்படையில் திருமணமாகும் சராசரி வயது - 2012......31

வரைபடம் 28 : பிரிவுக்கமைய எப்போதாவது திருமணம் செய்த பெண்கள் பிரசவித்த உயிருடன் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கையின் சராசரிப் பெறுமதி - 2012......36

வரைபடம் 29 : இனத் தொகுதிக்கமைய எப்போதாவது விவாகம் செய்த 50 வயதிலும் கூடிய மற்றும் 15 - 49 வயதிற்கிடைப்பட்ட பெண்களுக்கு எப்போதாவது பிறந்த உயிருடன் வாழும் குழந்தைகளின் சராசரிப் பெறுமதி - 2012 ......36

வரைபடம் 30 : பிரிவுகளுக்கமைய மொத்தக் கருவள விகிதாசாரம் - 2012 ......37

வரைபடம் 31 : பிரிவுக்கமைய கருவள விகிதாசாரத்தின் மாற்றம் 2005, 2011 ......38

வரைபடம் 32 : இனத்தொகுதிக்கமைய மொத்தக் கருவள விகிதாசாரம் - 2011 ......38

வரைபடம் 33 : பெண்களின் கல்வி மட்டத்தற்கமைய மொத்தக் கருவள விகிதாசாரம் மாற்றமடைதல் - 2005, 2011 ......39

வரைபடம் 34 : மாவட்ட அடிப்படையில் மொத்தக் கருவள விகிதாசாரம் - 2011......40

வரைபடம் 35 : வயதுச் சிறப்புக் கருவள விகிதாசாரப் பிறப்புக்கள் (ASFRs)......41

வரைபடம் 36 : மொத்தக் கருவள விகிதாசாரம் 1981 - 2011 ......42

வரைபடம் 37 : பால் மற்றும் மாவட்ட அடிப்படையில் எழுத்தறிவு வீதாசாரம் - 2012......44

வரைபடம் 38 : பிரிவு மற்றும் பால் அடிப்படையில் எழுத்தறிவு வீதாசாரம் - 2012......44

வரைபடம் 39 : பால் மற்றும் வயதுப் பிரிவு அடிப்படையில் மொழியறிவு - 2012......45

வரைபடம் 40 : வயதுப் பிரிவு மற்றும் மாவட்ட அடிப்படையில் கணினியைப் பயன்படுத்தும் ஆற்றல் ......45

வரைபடம் 41 : இணையத் தளத்திற்குள் பிரவேசித்தல் மாவட்ட அடிப்படையில் - 2012......46

வரைபடம் 42 : வயதுத் தொகுதி மற்றும் பிரிவு அடிப்படையில் முன்பள்ளி செல்லும் வீதாசாரம் - 2012 ......48

வரைபடம் 43 : வயதுத் தொகுதி மற்றும் மாவட்ட அடிபப்டையில் பாடசாலை செல்லும் விதாசாரம் - 2012......49

வரைபடம் 44 : பால் அடிப்படையில் 25 மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையின் கல்வி மட்டம் - 2012......50

வரைபடம் 45 : மாவட்ட அடிப்படையில் 25 மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையின் கல்வி மட்டம் - 2012 ....... 50

வரைபடம் 46 : மாகாண ரீதியிலான உள்நோக்கிய-இடம்பெயர்ந்தோரின் சதவீதப் பரம்பல் 2012 ....... 52

வரைபடம் 47 : மாவட்ட ரீதியான உள்நோக்கிய-இடப்பெயர்வின் வடிவங்கள் 1981, 2012 ....... 53

வரைபடம் 48 : மாகாண மற்றும் வசிக்கும் காலப்பகுதி அடிப்படையிலான உள்நோக்கிய-இடப்பெயவாளர்கள் - 2012 ....... 54

வரைபடம் 49 : மாவட்டத்தினுள் இடப்பெயர்வுக்கான காரணங்கள் அடிப்படையிலான உள்நோக்கிய-இடப்பெயர்வாளர்களின் பரம்பல் ....... 54

வரைபடம் 50 : இடம்பெயர்ந்தோர் மற்றும் இடம்பெயராதோர் சனத்தொகையின் வயது-பால் பரம்பல் - 2012 ....... 55

வரைபடம் 51 : மாகாண ரீதியில் வெளிநோக்கி இடம் பெயர்ந்தோரின் சதவீதப் பரம்பல் 1981, 2012 ....... 56

வரைபடம் 52 : மாவட்ட ரீதியிலான வெளிநோக்கிய-இடப்பெயர்வின் வடிவங்கள் 1981, 2012 ....... 56

வரைபடம் 53 : மாவட்ட ரீதியிலான தேறிய இடப்பெயர்வின் வடிவங்கள் 1981, 2012 ....... 57

வரைபடம் 54 : மாவட்டம் மற்றும் பால் ரீதியான தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிப்போர் சனத்தொகை ....... 59

வரைபடம் 55 : தற்போது வசிக்கும் நாடுகள் ரீதியாக வெளிநாடுகளின் தற்காலிகமாக வசிக்கும் இலங்கைச் சனத்தொகை ....... 60

வரைபடம் 56 : குடித்தனத் தலைவரின் கல்வித் தகைமை ரீதியாக குறைந்தது ஒருவராவது தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் குடித்தனங்களின் சதவீதம் ....... 61

வரைபடம் 57 : குடும்பக் கட்டமைப்பு ரீதியாக குறைந்தது ஒருவர் வெளிநாட்டில் வசிக்கும் குடித்தனங்களின் சதவீதம் ....... 61

வரைபடம் 58 : வகை மற்றும் வயது ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுடைய சனத்தொகையினரின் சதவீதம் ....... 64

வரைபடம் 59 : மாவட்ட ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாட்டின் தன்மை ....... 65

வரைபடம் 60 : வயதுப் பிரிவு மற்றும் பால் ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுடைய சனத்தொகையின் சதவீதம் - 2012 ....... 66

வரைபடம் 61 : மாவட்ட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் எண்ணிக்கை - 2012 ....... 69

வரைபடம் 62 : சுவர்களின் பிரதான மூலப்பொருள் ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012 ....... 71

வரைபடம் 63 : தரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பிரதான மூலப்பொருள் மற்றும் மாவட்ட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதங்கள் ........ 71

வரைபடம் 64 : கூரைக்காகப் பயன்படுத்தியுள்ள பிரதான மூலப்பொருள் ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 72

வரைபடம் 65 : நிர்மாணிக்கப்பட்ட பொருள்களின் வகை மற்றும் மாவட்ட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 73

வரைபடம் 66 : குடிநீர் பெறும் பிரதான மார்க்கத்தின் அடிப்படையில் குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 74

வரைபடம் 67 : மாவட்ட ரீதியாக பாதுகாப்பற்ற குடிநீரைப் பயன்படுத்தும் குடித்தனங்களின் சதவீதங்கள் - 2012 ........ 74

வரைபடம் 68 : சமையல் எரிபொருள் பாவனை ரீதியாக குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் ........ 75

வரைபடம் 69 : பிரதான வெளிச்சமூட்டும் மூலத்திற்கமைய குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 75

வரைபடம் 70 : மாவட்ட ரீதியாக வெளிச்சமூட்டுவதற்காக குடித்தனங்கள் மின்சாரத்தைப் (தேசிய கட்டமைப்புகள்) பயன்படுத்தும் சதவீதம் - 2012 ........ 75

வரைபடம் 71 : குடியிருப்புப் பிரிவு ரீதியாக குடித்தனங்களின் மலசலகூடப் பாவனையின் சதவீதப் பரம்பல் ........ 76

வரைபடம் 72 : திண்மக் கழிவுகளை அகற்றும் பிரதான முறை ரீதியாக குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 77

வரைபடம் 73 : கிடைக்கக்கூடிய, தொலைத்தொடர்பு வசதிகள் ரீதியாக குடித்தனங்களின் சதவீதங்கள் ........ 77

வரைபடம் 74 : மாவட்ட ரீதியாக கிடைக்கக்கூடிய, தொலைக்காட்சி மற்றும் வானொலி வசதிகள் - 2012 ........ 78

வரைபடம் 75 : மாவட்ட ரீதியாக கிடைக்கக்கூடிய, தொலைபேசி வசதிகள் - 2012 ........ 78

வரைபடம் 76 : மாவட்ட ரீதியாக கிடைக்கக்கூடிய, கணினி வசதிகள் - 2012 ........ 78

## அட்டவணைகளின் பட்டியல்

அட்டவணை 1 : பால் நிலைக்கமைய திருமணம் செய்யும் சராசரி வயதின் மாற்றம், 1971 - 2012 ........ 32

அட்டவணை 2 : மாவட்ட ரீதியான தேறிய இடப்பெயர்வு வீதம் - 1981, 2012 ........ 58

அட்டவணை 3 : நபர்கள் வசிக்கும் கட்டிடங்களின் எண்ணிக்கை - 2012 ........ 68

அட்டவணை 4 : வீட்டுக் கட்டமைப்பு ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 69

அட்டவணை 5 : வீட்டு உரிமை ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 70

அட்டவணை 6 : நிர்மாணித்த வருட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012 ........ 73

# அறிமுகம்

# அறிமுகம்

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு என்பது எந்தவொரு நாட்டிலும் மேற்கொள்ளப்படும் பாரிய கணக்கெடுப்பாகும். பொதுவாக உலக நாடுகளில் 10 வருடங்களுக்கு ஒரு முறை தெகைமதிப்பு நடாத்தப்படும். தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையின் 14 ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை 2012 இல் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் 31 வருடங்களின் பின்னர் மேற்கொண்டது.

## தொகைமதிப்பின் வரலாறும் வளர்ச்சிப் படிகளும்

- தொகைமதிப்பினை நடாத்தும் நீண்ட வரலாறு இலங்கைக்குக் காணப்படுவதுடன் முதலாவது தொகைமதிப்பு 143 வருடங்களுக்கு முன்னர் அதாவது, 1871 இல் நடாத்தப்பட்டது. தெற்காசிய நாடுகளுள் முதன் முறையாக நடாத்தப்பட்ட குடிசனத் தொகைமதிப்பு இதுவாகும்.
- அதன் பின்னர் 1931 வரையும் 10 வருடங்களுக்கு ஒரு முறை தொடர்ச்சியாகக் குடிசனத் தொகைமதிப்பு நடாத்தப்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தம் காரணமாக 1941 இல் நடாத்தப்படவிருந்த குடிசனத் தொகைமதிப்பு 1946 ஆம் ஆண்டு வரை பிற்போடப்பட்டது. அடுத்த தொகைமதிப்பு 1953 இலும் 1963 இலும் நடாத்தப்பட்டது. தொகைமதிப்பு “1” இல் முடிவடையும் சம்பிரதாயம் மீண்டும் 1971 இல் நிலை நிறுத்தப்பட்டு 1981 இல் அடுத்த தொகைமதிப்பு நடாத்தப்பட்டது.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலை காரணமாக 1991 ஆம் ஆண்டில் தொகைமதிப்பினை நடாத்த முடியவில்லை என்பதுடன் 20 வருடங்களின் பின்னர் 2001 இல் நடாத்தப்பட்ட தொகைமதிப்பு நாட்டின் 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களுக்கு மட்டும் எல்லைப்படுத்தப்பட்டது.
- 2012 தொகைமதிப்பானது 31 வருடங்களின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு உள்ளடங்கலாக முழு இலங்கையிலும் முழுமையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட தொகைமதிப்பாகும்.

## தொகைமதிப்பின் முக்கியத்துவம்

- தொகைமதிப்பு என்பது ஏதாவதொரு குறித்த காலப்பகுதியில் நாட்டின் சகல மக்களினதும் சமூக, பொருளாதார, மக்களியல் தகவல்கள் மற்றும் அவர்களின் வீட்டு வசதிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் ஒரே மூலமாகும்.
- தொகைமதிப்பின் அனைத்துத் தகவல்களும் தேசிய மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கொள்கை வகுப்பாக்கத்திற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படுவதுடன் நாட்டின் சிறிய நிருவாக அலகு மட்டத்திற்கமைய அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்ததைக் கண்டறிவதற்கும் பயன்படுத்தப்படும். சனத்தொகை தொடர்பான குறிகாட்டிகளை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஒப்பீடு செய்வதற்கும் தொகைமதிப்புத் தகவல்கள் பயன்படுத்தப்படும்.
- தொகைமதிப்பின் தகவல்கள், சனத்தொகைக் கட்டமைப்பு, சனத்தொகைப் பரம்பல், நகராக்கத் திட்டங்கள், குடிப்பெயர்வின் போக்கு, பொருளாதாரச் செயற்பாடுகள் கல்வி மற்றும் கொள்கை இலக்குகள் தொடர்பிலான ஆய்வுக் கற்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன் அபிவிருத்திக் குறிகாட்டிகளைத் தயாரிப்பதற்கும் பரந்தளவில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- தொகைமதிப்பின் தகவல்கள், தேர்தல் தொகுதியைத் தீர்மானித்தல், பிரதேச நிருவாக நடவடிக்கைகளுக்கு வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் நகரப் பிரதேசங்களை நிருணயம் செய்தல் போன்ற பல்வேறு நிருவாக நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
- தொகைமதிப்புக்காகத் தயாரிக்கப்பட்ட குடித்தனச் சட்டகம் விவசாயம் மற்றும் கைத்தொழில் தொகைமதிப்புக்களுக்கும் தொகைமதிப்புக்களுக்கிடையில் நடாத்தப்படும் மாதிரி அளவீடுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

## தொகைமதிப்பொன்றின் பிரதான கட்டங்கள்

இலங்கையின் 14 வது தொகைமதிப்புடன் தொடர்புடைய திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தொகைமதிப்பு பணிகளில் மூன்று பிரதான கட்டங்கள் உள்ளன.

1. **தேசப்படம் தயாரிக்கும் கட்டம்:** கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் தேசப்படத்தைத் தயாரித்து மிகச் சிறிய கணக்கெடுப்புப் பிரதேசமான தொகைமதிப்புக் கண்டத்தினை வேறுபடுத்தல் 2010ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.
2. **நிரற்படுத்தும் கட்டம்:** தேசப்படத்தினை ஆதாரமாகக் கொண்டு கட்டிடங்களை நிரற்படுத்தும் நடவடிக்கை 2011 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.
3. **கணக்கெடுக்கும் கட்டம்:** கணக்கெடுக்கும் கட்டம் இரண்டு சுற்றுக்களைக் கொண்டது. முதலாவது சுற்றில் தகவல் சேகரிக்கப்பட்டதுடன் அது 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 19 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. தொகைமதிப்புத் தினமான மார்ச் 20 ஆம் திகதியாகும் போது இடம்பெற்ற புதிய பிறப்புக்கள், இறப்புக்கள் மற்றும் வசிப்பிடம் மாற்றமடைதல் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு முதலாம் சுற்றில் சேகரிக்கப்பட்ட தகவல்களைத் திருத்தம் செய்தல் இரண்டாவது சுற்றில் மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுக்கும் நடவடிக்கைகளுக்காகக் கூலி அடிப்படையில் 80,000 அளவிலான தற்காலிகக் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## கணக்கெடுக்கும் முறை

- தொகைமதிப்பிலே 1871 தொடக்கம் 2001 வரை நடாத்தப்பட்ட முன்னைய தொகைமதிப்புக்களில் கணக்கெடுப்பு De - facto முறையை (நபர் தொகைமதிப்புத் தின இரவில் காணப்படும் இடத்திற்கமைய கணக்கெடுத்தல்) அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தது. இது யதார்த்தக் கணக்கெடுப்பு என அழைக்கப்பட்டது.
- இந்த முறையின் போது தொகைமதிப்பு இரவில் சில மணித்தியாலங்களில் திறந்த வெளியில் காணப்படும் நபர்களைக் கணக்கெடுப்பதற்கு அதிக எண்ணிக்கையான கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டது. இதனை பிரயோக ரீதியில் மேற்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. கொள்கை மற்றும் திட்டமிடல் பணிகளுக்காக அதிகமான தரவு பயன்படுத்துவோருக்கு வழமையான வசிப்பிடத்தைக் கொண்ட சனத்தொகையே தேவைப்பட்டது.
- இதற்கமைய தேசிய நிபுணத்துவ அறிவு மற்றும் சர்வதேச ரீதியாகப் பயன்படுத்தப்படும் முறைகளைப் பயன்படுத்தி வழமையான வசிப்பிடத்தை அடிப்படையாகக் கொண்ட De - jure முறைமை (சட்ட ரீதியான கணக்கெடுப்பு) 2012 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது. தொகைமதிப்புக் காலத்தினுள் நபரொருவர் ஓரிடத்தில் தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் அல்லது அதிலும் கூடிய காலம் வசித்தல் அல்லது ஆறு மாதத்திற்கு மேலாகத் தொடர்ச்சியாக வசிப்பதற்கு எதிர்பார்க்கும் இடம் வழமையான வசிப்பிடம் என வரைவிலக்கணப்படுத்தப்படும்.
- இந்த முறைமையை இலங்கையின் தொகைமதிப்பு வரலாற்றில் ஏற்பட்ட மிக முக்கியமான வளர்ச்சிப் படியெனக் கவனத்தில் கொள்ளலாம்.

## 2012 தொகைமதிப்பின் ஏனைய முக்கிய முன்னேற்றங்கள்

- கடந்த தொகைமதிப்புக்களில் தரவுகள் நபர்கள் மூலமே கணினிப் பதிவு செய்யப்பட்டது. அதற்காகக் குறிப்பிடத்தக்களவு வளங்கள் தேவைப்பட்டதுடன் அதிகமான காலமும் தேவைப்பட்டது. 2012 தொகைமதிப்பிலே தரவுகளை உள்வாங்குவதற்காக வினாக்கொத்துத் தரவு வருடல்(Scanning)முறை பயன்படுத்தப்பட்டது. இதன்போது OMR/ICR போன்றஇலக்கப் பிரதி விம்பங்கள் ஊடாக தரவுகள் உள்வாங்கப்படும்.

- முதன் முறையாக E-census தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி 2012 தொகைமதிப்பில் கொழும்பு மாநகர சபைக்குள் தெரிவு செய்யப்பட்ட சில வீடுகளில் தகவல் சேகரிப்பது பரீட்சார்த்த மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்போது இணையத்தினூடாக இலத்திரனியல் தரவு பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் போது தகவல்களின் இரகசியத் தன்மையினைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு பாதுகாப்பு படிமுறைகள் எடுக்கப்பட்டன.
- இதற்கு முன்னைய தொகைமதிப்புக்களில் பதிலளிப்பவர்களின் தொழில் மற்றும் கைத்தொழில்களைக் குறியீடு செய்வதற்கு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன் அதற்காக மிக அதிகமான காலம் செலவிடப்பட்டதுடன் வழுக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்பட்டன. 2012 தொகைமதிப்பில் குறியீடு செய்யும் செயற்றிறனை விருத்தி செய்யும் மிகப் பொருத்தமான குறியீட்டைத் தேடிக் குறியீடு செய்வதற்கு உதவும் மென்பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளடக்கப்படும் பிரதான தலைப்புக்கள்

**சனத்தொகை (29 வினாக்கள்)**

- மக்களியல் பண்புகள் (வயது, ஆண், பெண் விபரம், விவாக அந்தஸ்துப் போன்றன.)
- உள்ளகக் குடிப்பெயர்வு
- உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகள்
- கல்வி மற்றும் தொழில் தகைமைகள்
- கருவளம்
- தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கச் சென்றுள்ள நபர்கள்

**குடித்தனம் (11 வினாக்கள்)**

- குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கம்
- வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கம்
- மலசலகூட வசதிகள்
- தொடர்பாடல் வசதிகள்
- இணையத் தளத்தினுள் நுழைதல்

**வீட்டுக் கூறு (8 வினாக்கள்)**

- கூறின் தன்மை
- சுவர் தரை மற்றும் கூரையினை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பிரதான பொருட்கள்
- நிருமாணித்து முடிக்கப்பட்ட ஆண்டு

## தொகைமதிப்புப் பெறுபேறுகளை வெளியீடு செய்தல்


தொகைமதிப்பில் தகவல் சேகரித்தல் மற்றும் வகைப்படுத்தல் செயற்பாடுகள் மிகச் சிக்கலானது என்பதால் தொகைமதிப்புத் தரவுகளை வெளியீடு செய்வதற்குப் குறிப்பிடத்தக்களவு காலம் எடுக்கும். ஆகையால்தொகைமதிப்புப் பெறுபேறுகளை வெளியீடு செய்தல் கீழே குறிப்பிடப்படும் வகையில் பல கட்டங்களாக மேற்கொள்ளப்படும்.

- கணக்கெடுக்கும் உத்தியோகத்தரின் சாராம்சத்தைப் பயன்படுத்தி அடிப்டைப் பெறுபேறுகளை உள்ளடக்கிய அறிக்கை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது.
- கணக்கெடுக்கும் உத்தியோகத்தரின் சாராம்ச அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு "சனத்தொகை" மற்றும் "வீட்டு வசதிகள்" என்வற்றின் பண்புகளை உள்ளடக்கிப் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இரு அறிக்கைகள் 2012 ஒட்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்டன.
- அடுத்த அறிக்கை இறுதித் தொகைமதிப்பின் நூற்றுக்கு 5% மாதிரியொன்றை அடிப்படையாகக் கொண்டு 2014 மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.
- 14 ஆவது தொகைமதிப்பின் அடிப்படைத் தகவல்களை வெளியீடு செய்யும் மாநாடு இறுதித் தொகைமதிப்பு அறிக்கையை வெளியீடு செய்வதற்கு முன்னர் நடாத்தப்படும் அடுத்த படிமுறையாகும்.
- குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொடர்பான மாகாண அறிக்கை மற்றும் இறுதித் தொகைமதிப்பு அறிக்கை மிக விரைவில் வெளியிடப்படும்.

# சனத்தொகை அளவு, வளர்ச்சி மற்றும் பரம்பல்


# சனத்தொகையின் அளவு மற்றும் வளர்ச்சி

**வரைபடம் 1: சனத்தொகையின் அளவு மற்றும் வளர்ச்சி 1971 - 2012**




- 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குடிசனத் தொகைமதிப்பிற்கமைய இலங்கையின் சனத்தொகை 20,359,439 ஆகும். சனத்தொகை வருடாந்தம் படிப்படியாக அதிகரித்ததுடன் 1871 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2012 ஆம் ஆண்டாகும் போது இலங்கையின் சனத்தொகை எட்டு மடங்காக அதிகரித்துள்ளது.
- 1953 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பு விகிதாசாரம் தெளிவான வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 1981 - 2012 இன் காலப் பகுதிக்குள் சனத்தொகை அதிகரிப்பின் சராசரிப் பெறுமதி 1.1% என்றவாறு பதிவாகியுள்ளது.
- கடந்த காலங்களில் ஏற்பட்ட இந்த மாற்றங்களுக்குக் காரணம் பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீத மாற்றங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். 1946 இலங்கையின் பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், சனத்தொகை வளர்ச்சி வீதம் 1.7% இலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. 1946 இன் பின்னர் இறப்பு வீதம் மிக வேகமாக வீழ்ச்சியடைந்தது. அதன் பெறுபேறாக சனத்தொகை வளர்ச்சி வீதத்தின் பெறுமதி 2.0% இலும் கூடிய பெறுமதியாக அதிகரித்தது. 1960 இன் பின்னர் பிறப்பு வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. இந்தச் சம்பவங்களுடன் சனத்தொகை அதிகரிப்பு வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. தற்போது இலங்கையின் பிறப்பு மற்றும் இறப்பு வீதங்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் மேலும் வீழ்ச்சி ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

**வரைபடம் 2 : மாவட்ட அடிப்படையில் சனத்தொகை அதிகரிப்பு 1981 - 2012**




- 1981 - 2012 இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் வருடாந்த சனத்தொகை அதிகரிப்பு வீதம் 1.1 ஆகும். இந்தக் காலத்தினுள் நாட்டின் மாவட்டங்களுக்கிடையில் சனத்தொகை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பெறுமதி நூற்றுக்கு 2.0 இலிருந்து நூற்றுக்கு - 0.7 இற்கு இடைப்பட்ட வீச்சினுள் அமையப் பெற்றுள்ளது.

- இலங்கையின் உயர்ந்த சனத்தொகை வளர்ச்சி வீதத்தைக் கொண்ட மாவட்டம் வவுனியா என்பதுடன் அந்தப் பெறுமதி நூற்றுக்கு 2.0 ஆகும். இதற்குக் காரணம் யுத்த காலப்பகுதியின் போது கணிசமான மக்கள் அந்த மாவட்டத்திற்குக்குடிபெயர்ந்து யுத்தம் நிறைவடைந்த பின்பும் அவர்கள் இந்த மாவட்டத்தில் வசிப்பதாக இருக்கலாம்.


- அவ்வாறே அம்பாறை, கம்பஹா, மொணராகலை மாவட்டங்களிலும் சனத்தொகை வளர்ச்சி உயர்ந்த பெறுமதியைக்காட்டுகின்றது (1.7%).

- சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைந்த மாவட்டம் நுவரெலியா என்பதுடன் அது நூற்றுக்கு 0.6 ஆகும். தொழிலுக்காக அங்குள்ள மக்கள் வேறு பிரதேசங்களுக்குக் குடிபெயர்தல் இந்தப் பிரதேசத்தின் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாக இருப்பதற்குக் காரணமாகலாம். இதற்கு மேலதிகமாக மாத்தறை (0.8%) முல்லைத்தீவு கிளிநொச்சி மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களில் நூற்றுக்கு 0.7% போன்ற குறைந்த சனத்தொகை வளர்ச்சி வீதமும் பதிவாகியுள்ளன.

- யாழ்ப்பாணம் (-0.7%) மற்றும் மன்னார் (-0.2%) மாவட்டங்களில் எதிர்க்கணிய சனத்தொகை வளர்ச்சி வீதம் பதிவாகியிருப்பதுடன் இதற்கான பிரதான காரணம் யுத்த காலப்பகுதியில் பெரும்பாலானவர்கள் வேறு பிரதேசங்களுக்கு குடிபெயர்ந்தமையாக இருக்கலாம்.

## சனத்தொகைப் பரம்பல் மற்றும் அடர்த்தி

### வரைபடம் 3 : மாவட்ட மட்டத்திலான சனத்தொகைப் பரம்பல் மற்றும் சனத்தொகை அடர்த்தி - 2012




குறிப்பு: வரைபடத்தினுள் காணப்படும் அடைப்புக்குறிக்குள் சனத்தொகை கூடிய மாவட்டத்திலிருந்து குறைந்த மாவட்டம் வரை இலக்கமிடப்பட்டுள்ளது

- அதிகளவான சனத்தொகை கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. அது 2.3 மில்லியன்கள் என்பதுடன் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 11.4% ஆகும். கம்பஹா மாவட்டத்திலும் அதற்குச் சமமான சனத் தொகை பரம்பிக் காணப்படுவதுடன் அதன் எண்ணிக்கை 2.3 மில்லியன்களாகக் காணப்படுவதுடன் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 11.3% ஆகும்.

- அவ்வாறே குருணாகல் கண்டி களுத்துறை இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களிலும் ஒரு மில்லியனுக்கு அதிகமான சனத்தொகை காணப்படுகின்றன.


- மேலே குறிப்பிட்ட ஏழு மாவட்டங்களிலும் மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமான எண்ணிக்கையானோர் அதாவது 54.0% காணப்படுவதுடன்அவர்கள் இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் நான்கில் ஒரு பங்கிலும் குறைவான நிலப் பிரதேசத்தில் அதாவது நூற்றுக்கு 23.9% இல் பரம்பிக் காணப்படுகின்றனர்.

- வட மாகாணத்தில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாகக் குறைவான சனத்தொகைப் பரம்பல் பதிவாகியுள்ளன. முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களினது 100,000 இலும் குறைவானதாகும்.

- மாவட்டங்களுக்கிடையிலான சனத்தொகைப் பரம்பலின் ஏற்றத் தாழ்வுகளை கவனத்தில் கொள்வதற்காக கினிக் குணக வீதாசாரத்தினைப் (Gini concentration ratio) பயன்படுத்த முடியும். இதன் பெறுமதி 0 ஆகக் காணப்படுமிடத்து சனத்தொகைப் பரம்பலானது முழுமையாகச் சமமாகக் காணப்படுவதுடன், அதன் பெறுமதி 1 ஆகக் காணப்படுமிடத்து முழுமையான சமமின்மையை வெளிப்படுத்தும். 2012 ஆம் ஆண்டில் இதன் பெறுமதி 0.49 ஆகக் காணப்படுவதுடன் சனத்தொகைப் பரம்பலின் ஏற்றத் தாழ்வு நடுத்தரப் பெறுமதி என்பது இதனால் காட்டப்படுகின்றது. அதற்கமைய 1981 இல் கினிக் குணக வீதாசாரம்

0.52 ஆகும். இதற்கமைய 1981 - 2012 வரை சமத்துவமற்ற சனத்தொகைப் பரம்பலில் சிறு வீழ்ச்சியை வெளிக்காட்டுகின்றது.

### வரைபடம் 4 : மாவட்ட மட்டத்திலான சனத்தொகை அடர்த்தி - 2012





குறிப்பு: வரைபடத்தினுள் காணப்படும் அடைப்புக்குறிக்குள் சனத்தொகை கூடிய மாவட்டத்திலிருந்து குறைந்த மாவட்டம் வரை இலக்கமிடப்பட்டுள்ளது

- சனத்தொகை அடர்த்தி என்பதனால் கருதப்படுவது ஒரு சதுர கிலோ மீற்றருக்குள் வசிக்கும் நபர்களின் எண்ணிக்கையாகும். 2012 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 325 நபர்கள் ஆகும். 1981 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி 230 ஆகக் காணப்பட்டதுடன் 2012 ஆகும் போது 41% ஆன அதிகரிப்பை வெளிக்காட்டுகின்றது.
- இலங்கையின் மாவட்டங்களுக்கிடையில் சனத்தொகை அடர்த்தியில் பாரிய மாற்றங்கள் காணப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டதில் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 38 நபர்கள் என்பதுடன் அது இலங்கையின் சனத்தொகை அடர்த்தியில் பத்தில் ஒரு பங்கிலும் சற்று அதிகமாகும். ஆனால் கொழும்பு மாவட்டத்தில் ஒரு சதுர கிலோ மீற்றருக்குள் வசிக்கும் சனத்தொகை 3,438 என்பதுடன் அது இலங்கையின் சனத்தொகை அடர்த்தியில் பத்து மடங்கிலும் அதிகமாகும்.
- இதற்கு மேலதிகமாக மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தை அண்மித்துள்ள கம்பஹா மாவட்டத்தில் (1,719) உம் களுத்துறை மாவட்டத்தில் (775) உம் தென்மாகாணத்தில் காலி மாவட்டத்தில் (658) உம் மாத்தறை மாவட்டத்தில் (641) உம் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் (717) உம் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் (629) உம் என உயர்ந்த சனத்தொகை அடர்த்தியைக் காணக் கூடியதாகவுள்ளது.
- வட மாகாணத்தில் (யாழ்ப்பாண மாவட்டம் தவிர) கிழக்கு மாகாணத்தில் (மட்டக்களப்பு மாவட்டம் தவிர) மற்றும் வடமத்திய மாகாண மாவட்டங்களிலும் மற்றும் ஊவா மாகாணத்தில் மொணராகலை மாவட்டத்திலும் சனத் தொகை அடாத்தி ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமதியைக் கொண்டிருப்பதடன் அது ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 200 நபர்களிலும் குறைவானதாகும்.

## நகராக்கம் - 2012

- நாடொன்றின் நகராக்கத்தின் அளவு அந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கை நிலைமையினை மிகவும் தெளிவாக வெளிக்காட்டும் குறிகாட்டியாகும். எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக மிகவும் பொருத்தமான நகராக்க முகாமைத்துவம் அவசியமாகும்.
- நகராக்கத்தின் அளவு நிலைத்திருப்பது அதன் வரைவிலக்கணத்திற்கமையவாகும். தற்போது இலங்கையின் நகரப் பிரதேசங்கள் எனக் கவனத்தில் கொள்ளப்படுவது மாநகர சபை மற்றும் நகரசபைப் பிரதேசங்களாகும். 1987 இற்கு முன்னர் நகரப் பிரதேசங்கள் என சிறு நகர சபைகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 1987 இல் மாகாண சபைகள் அமைக்கப்பட்டதுடன் அந்த சிறு நகர சபைகள் பிரதேச சபைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டன. இந்த பிரதேச சபைகள் கிராமிய பிரிவுக்குள் உள்ளடக்கப்படும். அவற்றுள் சில பிரதேசங்கள் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் எனப் பெயரிடப்பட்டிருந்தாலும் இந்த நிலைமையினுள் சில பிரதேசங்களுக்கு நகரம் என்ற அந்தஸ்து இல்லாமல் போனது. இவ்வாறு நகரப் பிரதேசம் என்பதற்கான வரைவிலக்கணம் வேறுபட்டமைந்த காரணத்தால் அளவு குறை மதிப்பீடு செய்யப்பட்டதுடன் கடந்த வருடங்களுடன் நகராக்கத்தின் முன்னேற்றத்தினை ஒப்பீடு செய்வதில் இடர்பாடுகள் ஏற்பட்டன.
- இதனால் நகரப் பிரதேசங்களை வரைவிலக்கணப்படுத்தும் போது நிருவாக ரீதியான வகைப்படுத்தல்களின் அடிப்படையில் மட்டும் தங்கியிருக்காமல் சனத்தொகையின் பண்பு ரீதியான தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு மிகவும் பொருத்தமாக வரைவிலக்கணப்படுத்தல் அவசியமாகும்.
- தற்போது காணப்படும் வரைவிலக்கணப்படுத்தலுக்கமைய இலங்கையின் நகராக்க மட்டம் 2012 ஆகும் போது 18.2% ஆகும். நகரப் பிரதேசங்களைச் சரியாக வரைவிலக்கணப்படுத்தினால் இது மிகக் கூடிய பெறுமதியைக் கொண்டிருக்கும் என்பது தெளிவாகும்.

**வரைபடம் 5 : நகரங்களின் விசாலத் தன்மையும் பரம்பலும் - 2012**





- மொத்த நகரச் சனத்தொகையில் நூற்றுக்கு 15% கொழும்பு மாநகர சபையினுள் வசிக்கின்றனர்.
- இலங்கையில் அதிக சனத்தொகையினைக் கொண்ட 8 விசால நகரப் பிரதேசங்களாக கொழும்பு, கடுவலை, தெகிவளை, கல்கிஸ்சை, மொரட்டுவை, நீர்கொழும்பு, கோட்டை

மாநகர சபைகளும் கெஸ்பேவ, மஹரகம நகர சபைகளும் காணப்படுகின்றன. மொத்த நகரச் சனத்தொகையில் 50% ஆன அளவு இந்தப் பிரதேசங்களில் வசிக்கின்றனர். இந்தப் பிரதேசங்களில் அதிகளவு மேல் மாகாணத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். அதில் 7 கொழும்பு மாவட்டத்திற்கும் 1 பிரதேசம் கம்பஹா மாவட்டத்திற்கும் உரியதாகும். இலங்கையின் பிரதான நகரங்களின் வலயம் கொழும்பு மாவட்டத்தைச் சுற்றி ஒன்று சேர்ந்திருப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

- இலங்கையின் விசாலமான 8 நகரங்களை விட 56 நகரப் பிரதேசங்களில் 26 மிகவும் சிறிய நகரங்கள் என்பதுடன் அவற்றில் வசிக்கும் நகரச் சனத்தொகை 25,000 இலும் குறைந்த எண்ணிக்கையாகும். நகரச் சனத்தொகையில் 50% இந்தப் பிரதேசங்களுக்கு உரியதாகும்.
- இதன் மூலம் நகராக்கத்தின் ஏற்றத்தாழ்வு மிக்க பரம்பல் வெளிக்காட்டப்படும்.

### வரைபடம் 6 : மாவட்ட அடிப்படையில் நகராக்கம்





குறிப்பு: வரைபடத்தினுள் காணப்படும் அடைப்புக்குறிக்குள் சனத்தொகை கூடிய மாவட்டத்திலிருந்து குறைந்த மாவட்டம் வரை இலக்கமிடப்பட்டுள்ளது

- கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் நபர்களின் நான்கின் மூன்று பங்கினர் (77.6%) நகரப் பிரதேசங்களில் வசிக்கின்றனர். கிழக்கு மாகாணத்திற்குரிய மட்டக் களப்பு (28.7%) அம்பாறை (23.6%) திருகோணமலை (22.4%) உம் வடமாகாணத் திற்குரிய மன்னார் (24.5%) வவுனியா (20.2%) யாழ்ப்பாணம் (20.1%) ஆகிய மாவட்டங்கள் இலங்கையின் மொத்த நகராக்கப் பெறுமதியை விட கூடிய பெறுமதியைக் கொண்டிருக்கின்றன.
- இலங்கையின் தற்போது காணப்படும் நகராக்க வரை விலக்கணங்களுக்கு அமைய பொலன்னறுவை, மொணராகலை முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட் டங்களுள் நகரப் பிரதேசம் காணப்படாமை சிறப்பம்ச மாகும்.

# வயதுப் பால் கட்டமைப்பு

# பால் கட்டமைப்பு


### வரைபடம் 7: பால் (ஆண் பெண்) வீதாசாரம் 1981 - 2012




- 2012 ஆம் வருடத் தொகைமதிப்பிற்கமைய இலங்கையில் பெண்களின் சனத்தொகை ஆண்களின் சனத் தொகையை விட 646,000 அளவு அதிகமாகும்.
- கடந்த குடிசனத் தொகைமதிப்பு வருடங்களில் பால் வீதாசாரம் படிப் படியாகக் வீழ்ச்சியடைந்து 2012 இல் அது நூற்றுக்கு 93.8 ஆகப் பதிவாகியுள்ளது.
- ஆண்களுடன் ஒப்பிடுமிடத்து பெண்கள் உயர்ந்த ஆயுட்காலத்தைப் பெற்றிருத்தல் இந்த வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாகும்.


## வயதுக் கட்டமைப்பு

### வரைபடம் 8: வயதுக் கட்டமைப்பு 1981 - 2012





- வயதுப் பிரமிட் மூலம் காட்டப்படுவது ஒன்றிற்கொன்று வேறுபட்ட வருடங்களில் பிறப்பு இறப்பு மற்றும் குடிப்பெயர்வின் போக்கிற்கமைய சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பு வேறுபட்டு அமைந்திருப்பதையாகும். 1981 இல் பிரதானமாகச் சிறுவர் சனத்தொகையின் அதிகரிப்பின் காரணமாக பிரமிட்டின் கீழ்ப் பகுதி விரிவடைந்துள்ளது.
- 2012 ஆகும் போது சிறுவர் சனத்தொகைக்குச் சமமாக வேலை செய்யும் வயதுச் சனத்தொகை மற்றும் முதியோர் சனத்தொகை அதிகரித்துள்ளது.
- இந்த நிலமையின்கீழ் வயதுக் கட்டமைப்பின் வடிவம் மாற்றமடைந்து 2014 ஆகும் போது முதியோர் (மூப்படைந்த) சனத்தொகை அதிகரிப்பதனால் வயது பிரமிட் உருளை “பெரல்” வடிவத்திற்கு மாற்றமடையும்.

**வரைபடம் 9 : விரிவான வயதுப் பிரிவுக்கமையச் சனத்தொகை 1981 - 2012**




- வயதுக் கட்டமைப்பு 15 வயதிலும் குறைந்த (சிறுவர்) 15 - 59 வயதிற்கிடைப்பட்ட (வேலை செய்யும் வயதுச் சனத்தொகை) 60 வயது அல்லது அதிலும் கூடிய (முதியோர் சனத்தொகை) என விரிவான வயதுத் தொகுதிகளாகப் பிரிக்க முடியும். இந்த வயதமைப்பு நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும்
- 1981 இல் சிறுவர் சனத்தொகையின் வீதாசாரம் நூற்றுக்கு 32.5 ஆகக் காணப்பட்டதுடன் 2012 ஆகும் போது இந்தப் பெறுமதி குறைவடைந்து நூற்றுக்கு 25.2 வரை குறிப்பிடத் தக்க அளவினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1981 இல் முதியோர் சனத்தொகை நூற்றுக்கு 6.6 ஆகக் காணப்பட்டதுடன் 2012 ஆகும் போது அது இரண்டு மடங்காகி நூற்றுக்கு 12.4 வரை அதிகரித்துள்ளது. 1981 இல் வேலை செய்யும் சனத்தொகை நூற்றுக்கு 58.2 ஆகக் காணப்பட்டதுடன் 2012 ஆகும் போது நூற்றுக்கு 62.4 வரை அதகரித்தது.
- வேலை செய்யும் வயதுச் சனத்தொகை அதிகரிப்புடன் சிறுவர் சனத்தொகையின் வீழ்ச்சி மற்றும் முதியோர் சனத்தொகையின் அளவினை முகாமை செய்யக்கூடிய மட்டமொன்றில் காணப்படுமாயின் பொருளாதார அபிவிருத்திக்குச் சார்பான மக்களியல் வெகுமதி (Demographic dividend) இலங்கைக்குக் கிடைக்கப் பெறும்.
- மக்களியல் வெகுமதி என்பது வேலை செய்யும் வயதுச் சனத்தொகையுடன் ஒப்பிடுமிடத்து சிறுவர் சனத்தொகையில் குறைந்த அதிகரிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விரைவான பொருளாதார அபிவிருத்தியாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் வேலை செய்யும் சனத்தொகையால் பராமரிக்க வேண்டிய தங்கியிருப்போரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதனால் பொருத்தமான பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளின் மூலம் நாட்டின் அபிவிருத்தியைத் திட்டமிட்டுக் கொள்ளக் கூடிய புதிய பாதையொன்றைத் திறந்து கொள்ள முடியும். சனத்தொகை முதிர்ச்சியடைதல் அதிகரிக்கும் பட்சத்தில் வேலை செய்யும் வயதுச் சனத்தொகை குறைவடைவதனால் மக்களியல் வெகுமதி எதிர்ப் பெறுமதியைக் கொண்டிருக்கும். அதற்கமைய மக்களியல் வெகுமதி என்பது நிலைமாறும் சந்தர்ப்பமாகும். இலங்கைக்கு இந்த மக்களியல்நிலைமாறல் ஏற்பட்டுள்ளதுடன் அது 1990 தசாப்தத்தின் முன்னரைப் பகுதியிலிருந்து 2030 தசாப்தத்தின் முன்னரைப் பகுதி வரையான 40 வருட அளவிலான காலப்பகுதியில் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


**வரைபடம் 10 : தங்கியிருப்போர் வீதம் 1981 - 2012**




- தங்கியிருப்போர் வீதம் மூலம் வயதுக்கட்டமைப்பு மற்றும் பிரதான வயதுப் பிரிவுகளுக்கிடையிலான தொடர்பினை எளிய அளவீட்டின் மூலம் காட்டலாம்.
- மொத்தத் தங்கியிருப்போர் வீதம் எனக் காட்டப்படுவது 15 வயது மற்றும் 59 வயதிற்கிடைப்பட்ட வேலை செய்யும் வயதுச் சனத்தொகையில் 100 நபர்களுக்குக் காணப்படும் 15 வயதிலும் குறைந்த மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களின் எண்ணிக்கை முழுத் தங்கியிருப்போர் வீதம் என அழைக்கப்படும். சிறுவர் தங்கியிருப்போர் வீதம் மற்றும் முதியோர் தங்கியிருப்போர் வீதத்தின் மூலம் முறையே வேலை செய்யும் வயதுச் சனத்தொகையில் 100 பேருக்கு காணப்படும் சிறுவர் மற்றும் முதியோர் எண்ணிக்கை காட்டப்படும்.
- 2012 ஆம் ஆண்டில் வேலை செய்யும் வயதுச் சனத்தொகையில் 100 பேருக்கு சிறுவர் மற்றும் முதியோர் தங்கியிருப்போர் வீதம் 60 ஆகும். அத்தங்கியிருப்போர் எண்ணிக்கை 60 என்பது காணப்படுவது முதியோர் தங்கியிருப்போர் 20 மற்றும் சிறுவர் தங்கியிருப்போர் 40 என்றவாறாகும். 1981 தொடக்கம் 2012 வரை சிறுவர் சனத்தொகை வீழ்ச்சியடைந்ததன் காரணமாக சிறுவர் தங்கியிருப்போர் எண்ணிக்கை நூற்றுக்கு 61 இலிருந்து நூற்றுக்கு 40 வரை வீழ்ச்சியினைக் காட்டுவதுடன் அதற்குச் சமாந்திரமாக முதியோர் தங்கியிருப்போர் எண்ணிக்கை நூற்றுக்கு 11 இலிருந்து நூற்றுக்கு 20 வரை அதிகரித்திருப்பது முதியோர் சனத்தொகையில் அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதொன்றாகும். இதன் தேறிய பெறுபேறாக மொத்தத் தங்கியிருப்போர் எண்ணிக்கை 1981 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதிக்குள் 72 இலிருந்து 60 வரை வீழ்ச்சியடைந்திருப்பதுடன் அது அக்காலப் பகுதிக்குள் நூற்றுக்குப் 16 வீதமான வீழ்ச்சியாகும்.


## முதுமையடைதல்

**வரைபடம் 11 : முதியோர் சனத்தொகை 1946 - 2041**




- 2012 இல் 60 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகை 2.5 மில்லியன்கள் என்பதுடன் அது மொத்த சனத்தொகையில் அது நூற்றுக்கு 12.4 ஆகும். 1946 தொடக்கம் 1981 வரையான 35 வருட கால எல்லைக்குள் முதுமையடைதல் நூற்றுக்கு 5 மற்றும் நூற்றுக்கு 7 ஆகியவற்றுக்கு இடையில் காணப்பட்டதுடன் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் முதுமையடைதல் மிக வேகமாக ஆரம்பமாகியது.
- 1981 இல் நூற்றுக்கு 6.6 வீதமான முதியோர் சனத்தொகை 2012 இல் நூற்றுக்கு 12.4 ஆகக் காணப்பட்டது. அதாவது 1981 தொடக்கம் 2012 ஆகும் போது முதியோர் சனத்தொகை இரு மடங்காகியுள்ளது. எதிர்வுகூறலுக்கமைய மீண்டும் முதியோர் சனத்தொகை 2041 இல் இரட்டிப்பாகும். அப்போது அதன் பெறுமதி நூற்றுக்கு 24.8 ஆகும். அவ்வாறாயின் 2041 ஆகும் போது 4 பேரில் ஒருவர் முதியோர் சனத்தொகைக்குரியராகக் காணப்படுவார்.
- கருவள வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுதல் மற்றும் ஆயுட்கால எதிர்பார்ப்பு அதிகரிப்பு என்பன இந்த முதுமையடைதலில் அதிகரித்துச் செல்லும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

**வரைபடம் 12 : முதுமைச் சுட்டெண்**





- முதிர்ச்சிச் சுட்டெண் மூலம் சிறுவர் சனத்தொகைக்குச் சமாந்திரமாக முதுமையடைந்த நபர்களின் மாற்றம் வெளிக்காட்டப்படும். அதாவது 15 வயதிலும் குறைந்த சனத்தொகையில் 100 பேருக்கு காணப்படும் 60 வயது அல்லது அதிலும் கூடிய நபர்களின் எண்ணிக்கை முதுமைச் சுட்டெண் எனக் கருதப்படும்.
- 2012 ஆம் ஆண்டில் 15 வயதிலும் குறைந்த சிறுவர்கள் 100 பேருக்கு 60 வயதிலும் கூடிய நபர்கள் 49 பேர் பதிவாகியுள்ளனர். இது 1981 இல் காணப்பட்ட பெறுமதியான 19 ஐ விட இரு மடங்கு அதிகமாகும். 2041 இற்கான மதிப்பீடு செய்யப்பட்ட முதுமைச் சுட்டெண் எண்ணிக்கை 163 ஆகக் காணப்படும். இது 2012 இலும் பார்க்க மூன்று மடங்கிலும் அதிகமான அதிகரிப்பாகும்.
- சிறுவர் சனத்தொகையின் எண்ணிக்கைக்குச் சமமாக முதுமைச் சனத்தொகை அதிகரித்துச் செல்லல் இவ்வாறு முதுமைச் சுட்டெண் அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. 1980 இன் பின்னர் இத்துறையின் அதிகரிப்பினைத் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது.

## வரைபடம் 13 : 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவயதுப் பிரிவுக்கமைய முதுமையடைதல் 1981 2012 2041




- 2012 ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 7.6 வீதம் 60 - 69 இற்கிடைப்பட்ட வயதுப் பிரிவுக்குள் உள்ளடங்குவதுடன் அது முதுமைச் சனத்தொகையின் நூற்றுக்கு 61 ஆகும். உயர்ந்த முதியோர் வயதுப் பிரிவு அதாவது 80 வயதிலும் கூடிய வயதுப் பிரிவு மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 1.3 என்பதுடன் முதியோர் சனத்தொகையில் நூற்றுக்கு 11 ஆகும். இது 2041 ஆகும் போது மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 4.1 வரை அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதுடன் அது மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 17 ஆகும்.
- இந்த உயர்ந்த முதுமைச் சனத்தொகையின் அதிகரிப்பு இலங்கையின் முதுமையடைவதில் காணப்படக் கூடிய முக்கிய பண்பாகும்.

## வரைபடம் 14 : முதுமைச் சனத்தொகையின் பால் வீதாசாரம் 1981 - 2012





- 2012 இல் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சனத்தொகையில் பெண் களின் எண்ணிக்கை ஆண் களின் எண்ணிக்கையை விட 289,000 அதிகமாகும். 2012 இல் பால் வீதாசாரம் அதாவது அந்த வருடத்தில் பெண்கள் 100 பேருக்கு காணப்படும் ஆண்களின் எண்ணிக்கை 79 ஆகக் காணப்படுவதுடன் மொத்த சனத்தொகைக்கான இந்தப் பெறுமதி 94 ஆகும். 60 - 69 வயதுப் பிரிவுக்கான பால் வீதாசாரம் 84 ஆகும் 80 வயதிலும் அதிகமான வயதுப் பிரிவின் பால்

விகிதாசாரம் 65 ஆகப் படிப்படியாகக் குறைவடைந்துள்ளது.

- முதியோர் சனத்தொகையின் பால் விகிதாசாரம் 1981 - 2012 காலப் பகுதிக்குள் விரைவாக வீழ்ச்சியடைந்துள்ளது.
- பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு ஆண்களை விட அதிகம் என்பதால் முதியோர் சனத்தொகையின் அதிகமான பிரதிநிதித்துவம் பெண்கள் பக்கத்திற்குக் கிடைத்துள்ளது.

### வரைபடம் 15 : முதியோர் சனத்தொகையின் விவாக நிலைமை - 2012





- முதியோர் சனத்தொகையின் விவாக அந்தஸ்தானது வயோதிபமடைந்தவர்கள் வாழ்வதற்கான விதிமுறைகள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது மற்றும் அவர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு நிறைந்த சிறந்த வாழ்க்கையொன்றை வாழ்வதற்கு திட்டமிடுதல் மற்றும் அடுத்தவர்களின் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் முக்கியமானதாகும்.
- 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 5 நபர்களிற்கு ஒருவர் அதாவது நூற்றுக்கு 20.9 வீதம் தாரமிழந்வராவார். முதியோர் சனத்தொகையில் விதவைகளின் எண் ணிக்கை தபுதாரர்களின் (மனைவியை இழந்த ஆண்கள்) எண்ணிக்கையை விட ஐந்து மடங்கினால் அதிகரித்துள்ளது. உயர்ந்த வயதுப் பிரிவுகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையில் தாரமிழந் தவர்களின் வீதாசார இடைவெளி அதிகரித்துள்ளது.
- பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருத்தல், ஆண்களின் திருமணமாகும் வயது அதிகமாகக் காணப்படுதல் போன்ற பல்வேறு காரணிகளின் காரணமாக அதிகமான பெண்கள் விதைவைகளாக வெளிக்காட்டப்பட்டுள்ளனர்.
- தமது கணவனின் உதவியின்றி சமூகத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் பெண்கள் தொடர்பில் சமூகம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும்.

# இனத் தொகுதி மற்றும் சமய அடிப்படையிலான கட்டமைப்பு - 2012


# இனத் தொகுதி அடிப்படையிலான கட்டமைப்பு

### வரைபடம் 16 : இன ரீதியான சனத்தொகைக் கட்டமைப்பு - 2012




- இலங்கையின் மொத்த சனத்தொகையில் 74.9 அதாவது சனத்தொகையில் நான்கில் மூன்று சிங்களவர்களாவர். எஞ்சிய சனத்தொகையில் நூற்றுக்கு 11.2 இலங்கைத் தமிழர் நூற்றுக்கு 9.3 இலங்கை முஸ்லிம் நூற்றுக்கு 4.1 இந்தியத் தமிழர் என்பதுடன் நூற்றுக்கு 0.5 ஏனைய இனத் தொகுதிகளுக்குரியதாகும்.


### வரைபடம் 17 : 1981, 2012 இடையில் இன ரீதியான சனத்தொகைக் கட்டமைப்பு




- 1981 - 2012 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சிங்கள இனத்தவர் 0.9 வீதத்தினாலும் முஸ்லீம் இனத்தவர் 2.3 வீதத்தினாலும் அதிகரித்துள்ளனர். ஆனால் இலங்கைத் தமிழர்கள் 1.5 வீதத்தினாலும் இந்தியத் தமிழர்கள் 1.4 வீதத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளனர்.


## சமய அடிப்படையிலான கட்டமைப்பு

### வரைபடம் 18: சமய அடிப்படையிலான கட்டமைப்பு - 2012




- இலங்கையின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 70.1 வீதம் பௌத்தர்கள் என்பதுடன் நூற்றுக்கு 12.6 இந்துக்களும் நூற்றுக்கு 9.7 இஸ்லாமியர்களும் நூற்றுக்கு 6.2 உரோமன் கத்தோலிக்கர்கள் என்பதுடன் எஞ்சிய 1.4 ஏனைய கிறிஸ்தவர்களாவர்.

### வரைபடம் 19: 1981 - 2012 இடையில் சமய அடிப்படையிலான கட்டமைப்பு





- 1981- 2012 இடைப்பட்ட காலப் பகுதிக்குள் பௌத்தர்கள் 0.8 வீதத்தினாலும் இஸ்லாம் மார்க்கத்தினர் 2.2 வீதத்தினாலும் அதிகரித்துள்ளதுடன் இந்து மற்றும் உரோமன் கத்தோலிக்கச் சமயத்தினைப் பின்பற்றுபவர்கள் முறையே 2.9 வீதம் மற்றும் 0.7 வீதத்தினால் குறைவடைந்துள்ளனர்.


# விவாக அந்தஸ்து

## விவாக அந்தஸ்து

### வரைபடம் 20: விவாக அந்தஸ்திற்கமைய 15 வயது மற்றும் அதிலும் கூடிய ஆண் சனத்தொகையின் வீதாசாரம் - 2012




### வரைபடம் 21: விவாக அந்தஸ்திற்கமைய 15 வயது மற்றும் அதிலும் கூடிய பெண் சனத்தொகையின் வீதாசாரம் - 2012





- 15 வயதிலும் கூடிய ஆண் சனத்தொகையில் நூற்றுக்கு 30 ஒரு போதும் விவாகம் செய்யாதவர்கள் என்பதுடன் அதற்கமைவாக பெண்கள் சனத்தொகை நூற்றுக்கு 22 ஆகும்.
- தொகைமதிப்பு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் திருமாணமான ஆண்கள் சனத்தொகையின் வீதாசாரமாகிய நூற்றுக்கு 68 இல் நூற்றுக்கு 2.7 சம்பிரதாய பூர்வமான திருமணம் செய்தவர்களாவர்.
- தொகைமதிப்பு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் திருமாணமான பெண்கள் சனத்தொகையின் வீதாசாரம் மற்றும் சம்பிரதாய பூர்வமான திருமணம் செய்த பெண்களின் சனத்தொகை வீதாசாரம் என்பன ஆண்களின் சனத்தொகை வீதாசாரத்திற்கு சமமாகும்.
- இலங்கையில் 15 வயதிலும் கூடிய சனத்தொகையில் நூற்றுக்கு 1 வீதமானவர்கள்

விவாகரத்து/ பிரிந்து வாழும் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டாலும் இலங்கையில் விவாகரத்து/ பிரிந்து வாழும் எண்ணிக்கையில் அதிகரிப்பை வெளிக்காட்டுகின்றது.


- விதவைகளின் வீதாசாரம் (8.7%) தபுதாரர்களின் வீதாசாரத்திலும் (1.3%) பார்க்கக் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### வரைபடம் 22: வயதுப் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய ஒரு போதும் விவாகம் செய்யாத சனத்தொகையின் வீதாசாரம் - 2012





- பொதுவாக சகல வயதுப் பிரிவுகளிலும் ஒரு போதும் விவாகம் செய்யாத நபர்களின் வீதாசாரம் பெண்களை விட ஆண்களிடையில் அதிகமாகும்.
- 15 - 19 இடைப்பட்ட வயதுப் பிரிவில் ஒரு போதும் விவாக மாகாத ஆண் சனத்தொகையின் வீதாசாரம் நூற்றுக்கு 98 என்பதுடன் அதற்கமைவாக பெண்கள் சனத்தொகையின் வீதா சாரம் ஆண்களின் வீதாசாரத்தைவிட 10 அலகுகளால் குறைவானதாகும்.
- 20 - 34 இடைப்பட்ட வயதுப் பிரிவில் ஒரு போதும் விவாகமாகாத ஆண்களின் சனத்தொகை பெண்களின் சனத்தொகையை விட மிக உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக 30 - 34 வயதுச் சனத்தொகைப் பிரிவில் ஒருபோதும் விவாகம் செய்யாத ஆண்களின் சனத்தொகை வீதாசாரம் நூற்றுக்கு 20 என்பதுடன் இவ்வயதுப் பிரிவில் பெண்களின் சனத்தொகை வீதாசாரம் நூற்றுக்கு 10 ஆகும்.
- கருவளக் கால எல்லை முடிவில் (வயது 45 - 49 ஆண்டுகள்) 6 வீதம் மற்றும் 5 வீதமான ஆண்களும் பெண்களும் முறையே திருமணமாகாது உள்ளனர்.

### வரைபடம் 23: வயதுத் தொகுதி மற்றும் பிரிவுக்கமைய ஒரு போதும் விவாகமாகாத ஆண்கள் சனத்தொகையின் வீதாசாரம் - 2012





- ஒருபோதும் விவாகமாகாத 15 - 19 வயதுத்தொகுதிக்குள் அடங்கும் ஆண்கள் சனத்தொகையின் வீதா சாரத்தில் அவர்கள் வசிக்கும் பிரிவிற்கமைய (நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டம்) குறிப்பிடத்தக்க மாற்றங்கள் வெளிக்காட்டப்படவில்லை.
- எவ்வாறாயினும் ஒரே வயதுப் பிரிவுப் (15-19) பெண்களின் சதவீதம் மாறுபடுகிறது. நகரப் பிரதேசப் பெண்களின் சதவீதம் உயர்வாகப் பதவிவாகியுள்ளது.
- ஆண் பெண் ஆகிய இரு சாராருக்குக்காகவும் சகல வயதுப் பிரிவுகளிலும் ஒருபோதும் விவாகமாகாத சனத்தொகையின் வீதாசாரம் நகரப் பிரிவினுள் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதுடன் குறைந்த பெறுமதி பெருந்தோட்டப் பிரிவில் காணப்படுகின்றது. இந்தப் போக்கினை குறிப்பாக 20 - 24 வயதுப் பிரிவு மற்றும் 25 - 29 வயதுப் பிரிவில் பெண்கள் சனத்தொகைக்கிடையில் தெளிவாக காணக்கூடியதாகவுள்ளது.

**வரைபடம் 24 : வயதுத் தொகுதி மற்றும் பிரிவுக்கமைய ஒரு போதும் விவாகமாகாத பெண்கள் சனத்தொகையின் வீதாசாரம் - 2012**





- 20 - 24 வயதுப் பிரிவில் ஒரு போதும் விவாகமாகாத நகரப் பெண்கள் சனத்தொகை நூற்றுக்கு 68 ஆகும். அதற்கமைவாகப் பெருந்தோட்டப் பிரிவில் இந்த வீதாசாரம் நூற்றுக்கு 47 ஆகும்.
- கருவளக் கால எல்லை நிறைவின் பின்னரான (45 - 49 வயதுப் பிரிவில்) ஒரு போதும் விவாகமாகாத ஆண்கள் மற்றும் பெண்கள் சனத்தொகை கிராம மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளுடன் ஒப்பிடுகையில் நகரப் பிரதேசத்தில் உயர்ந்த பெறுமதியைக் காட்டுகின்றது.
- 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குடிசனத் தொகைமதிப்புக்கமைய ஆண்கள் மற்றும் பெண்கள் திருமணமணம் செய்யும் வயதின் சராசரி பெறுமதி முறையே 27.2 வயது மற்றும் 23.4 வயதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**வரைபடம் 25 : பால் மற்றும் பிரிவுக்கமைய திருமணமாகும் சராசரி வயது - 2012**




- பொதுவாக 2012 ஆம் ஆண்டினுள் ஆண்கள் மற்றும் பெண்களின் திருமண வயதுச் சராசரியின் வித்தியாசம் 3.8 வருடங்களாகும்.
- நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டம் ஆகிய மூன்று பிரிவுகளுள் ஆண்களின் சராசரித் திருமண வயதின் உயர்ந்த பெறுமதி (28.1 வருடங்கள்) நகரப் பிரிவில் பதிவாகியுள்ளதுடன் அதில் குறைந்த பெறுமதி (26.2 வருடங்கள்) பெருந்தோட்டப் பிரிவில் பதிவாகியுள்ளது.
- பெண்கள் மற்றும் ஆண்களின் சராசரித் திருமண வயதுகளுக்கிடையிலான குறைந்த வித்தியாசப் பெறுமதி நகரப் பிரிவில் காணப்படுவதுடன் அதில் கூடிய வித்தியாசம் கிராமியப் பிரிவில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

### வரைபடம் 26 : இனத் தொகுதி அடிப்படையில் திருமண வயதின் சராசரிப் பெறுமதி - 2012





- இலங்கையில் பிரதான இனத்தொகுதிகளுக்கிடையில் பெண்களின் திருமணமாகும் வயதின் உயர்ந்த சராசரி இலங்கைத் தமிழர் சனத் தொகையில் (24.4 வயது) பதிவாகியுள்ளதுடன் அதற் கடுத்த உயர்ந்த பெறுமதி (23.4 வயது) சிங்களச் சனத்தொகையில் பதிவா கியுள்ளது. ஆண்களுக்கான திருமண வயதின் குறைந்த சராசரிப் பெறுமதியை இலங்கைச் சோனகர் சனத் தொகை வெளிக்காட்டுகின்றது.

- 2012 ஆம் ஆண்டு தொகைமதிப்புப் பெறுபேறுகளுக்கமைய இலங்கைச் சோனகரில் ஆண்கள் மற்றும் பெண்கள் திருமணம் செய்யும் சராசரி வயதின் குறைந்த பெறுமதி வெளிக்காட்டப்பட்டிருப்பதுடன் அந்தப் பெறுமதி ஆண்களுக்காக 26.4 வயதாகவும் பெண்களுக்காக 22.7 வயதாகவும் காணப்படுகின்றது.

- பெண்கள் மற்றும் ஆண்களின் திருமணமாகும் சராசரி வயதில் பாரிய வித்தியாசம் சிங்களச் சனத்தொகையில் பதிவாகியுள்ளது. அதாவது கணவன் பொதுவாகத் தமது மனைவியை விட 4 வயது மூத்தவராவார்.

### வரைபடம் 27 : பால் மற்றும் மாவட்ட அடிப்படையில் திருமணமாகும் சராசரி வயது - 2012



- 2012 ஆம் ஆண்டில் ஆண்களின் திருமணமாகும் சராசரி வயதின் உயர்ந்த பெறுமதி யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளதுடன் அதன் குறைந்த பெறுமதி திருகோணமலை, புத்தளம், முல்லைத்தீவு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் பதிவாகியுள்ளது.
- மகளிரின் திருமணமாகும் சராசரி வயதின் உயர்ந்த பெறுமதி கொழும்பு, வவுனியா மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளது. அதன் குறைந்த பெறுமதி மொணராகலை மாவட்டத்திலும் ஏனைய குறைந்த பெறுமதிகள் முறையே பொலனன்றுவை, அநுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் பதிவாகியுள்ளன.
- மகளிர் மற்றும் ஆடவரின் திருமணமாகும் சராசரி வயதுக்கிடையில் குறைந்த வித்தியாசம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது கணவன் மனைவியை விட 2½ வருடங்கள் மூத்தவராவார். அவ்வாறே அதில் உயர்ந்த வித்தியாசம் மொணராகலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் அங்கு கணவன் மனைவியை விட 5 வயது மூத்தவராவார்.

**அட்டவணை 1 : பால் நிலைக்கமைய திருமணம் செய்யும் சராசரி வயதின் மாற்றம், 1971 - 2012**

| Year | Source | Male (years) | Female (years) | Difference (years) |
|---|---|---|---|---|
| 1971 | தொகைமதிப்பு | 28.0 | 23.5 | 4.5 |
| 1975 | உலக கருவள அளவீடு | 28.2 | 25.1 | 3.1 |
| 1981 | தொகைமதிப்பு | 27.9 | 24.4 | 3.5 |
| 1987 | மக்களியல் சுகாதார அளவீடு | - | 24.8 | - |
| 1993 | மக்களியல் சுகாதார அளவீடு | - | 25.5 | - |
| 1994 | மக்களியல் அளவீடு | 28.3 | 24.7 | 3.6 |
| 2000 | மக்களியல் சுகாதார அளவீடு | - | 24.6 | - |
| 2001 | தொகைமதிப்பு | 27.6 | 23.8 | 3.8 |
| 2006-07 | மக்களியல் சுகாதார அளவீடு | - | 23.5 | - |
| 2012 | தொகைமதிப்பு | 27.2 | 23.4 | 3.8 |

- 1971 இல் இலங்கையில் பெண்கள் திருமணம் செய்யும் வயது பொதுவாக 23.5 வடங்களாகும்.
- பெண்கள் திருமணம் செய்யும் சராசரி வயது தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. 1971 இல் 23.5 வருடங்களாகக் காணப்பட்ட திருமணச் சராசரி வயது 1994 இல் 24.7 வருடங்கள் வரை அதிகரித்துள்ளது.
- இந்த அதிகரிப்புப் பெண்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகக் காணப்பட்டாலும் ஆண்களின் திருமணமாகும் சராசரி வயது குறைந்த அளவிலேயே அதிகரித்துள்ளது. அதாவது 1971 இல் 28 வயதாகக் காணப்பட்டதுடன் 1994 ஆகும் போது 28.3 வயதாகவே அதிகரித்துள்ளது.
- 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை மக்கள் உயர்ந்த கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்தல் மற்றும் அக்காலப் பகுதியில் உயர்வாகக் காணப்பட்ட உயர்ந்த தொழிலின்மை மற்றும் பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாக திருமணத்திற்கான முக்கிய தேவைகளான சீதனம், வீட்டு வசதிகள் மற்றும் திருமணச் சடங்குகளுக்கான நிதியைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட பிரச்சினைகள் போன்ற விடயங்கள் இலங்கையில் திருமணங்கள் தாமதமாவதுடன் தொடர்புடைய காரணங்களாகக் காணப்பட்டன.
- அவ்வாறு காணப்பட்டாலும் ஆயிரத்துத் தொள்ளயாயிரத்துத் தொண்ணூறு (1990) தசாப்தங்களின்


முன்பகுதி தொடக்கம் இலங்கையில் பெண்கள் மற்றும் ஆண்களின் திருமணமாகும் சராசரி வயது ஒரினத் தன்மை கொண்டதாக வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளதுடன் 2012 ஆகும்போது அது ஆண்களுக்காக 27.2 வருடங்களாகவும் பெண்களுக்காக 23.4 வருடங்களாகவும் காணப்படுகின்றது.

- 2006/2007 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மக்களியல் மற்றும் சுகாதார அளவீட்டிற்கமைய பெண்கள் திருமணம் செய்யும் சராசரி வயது 23.5 வருடங்கள் என்பதுடன் அது 1971 இல் காணப்பட்ட பெறுமதிக்குச் சமமாகும்.
- 2012 இல் நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் புதிய தரவுகள் மூலம் மகளிர் மற்றும் ஆடவர்களின் திருமண வயதுச் சராசரியில் மேலும் விழ்ச்சியினைக் காட்டுவதுடன் அது பெண்களுக்காக 23.4 வருடங்களாகவும் ஆண்களுக்காக 27.2 வருடங்களாகவும் காணப்படுகின்றது.
- தற்போதைய நூற்றாண்டினுள் நிலவும் மிகவும் சமநிலையான பால் விகிதாசாரம் மற்றும் ஆண்கள் அதிகளவில் வெளிநாட்டு வேலைகளுக்காகச் செல்லல் காரணமாக ஆண்களின் தொழிலின்மை வீழ்ச்சியடைதல் திருமணச் சராசரி வயது குறைந்த பெறுமதியை எடுப்பதற்கு பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாகக் குறிப்பிட முடியும்.
- மேலும் விடயங்களைத் தேடியறியும் போது முதிர்ச்சியடைவோருக்குச் சமாந்திரமாக ஆண் மற்றும் பெண் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிப்பதன் காரணமாக பெருந்தொகையான இளைஞர்களுக்கு தமது திருமணத்திற்கான சீதனம் மற்றும் ஏனைய செலவுகளுக்கான நிதியினை இளவயதிலேயே சேகரித்துத் கொள்ள முடியுமானதாக இருத்தல் மற்றும் வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வேலை செய்யும் மக்களிடமிருந்து கிடைக்கும் நிதி இந்த திருமணச் சராசரி வயது குறைந்த பெறுமதியைக் கொண்டிருப்பற்கான முக்கிய விடயங்களாகக் காட்ட முடியும்.
- காலம் கடந்த திருமணங்களால் ஏற்படும் எதிர்விளைவுகள் தொடர்பிலான தெளிவுபடுத்தல்கள் அதிகரிப்பதன் காரணமாக ஏற்பட்ட மனப்பாங்கு மாற்றங்கள் மற்றும் கருத்தடை செய்யும் சேவை நிலையங்கள் அரசின் மூலம் தடைசெய்யப்படல் என்பன இலங்கையின் திருமணமாகும் சராசரி வயது குறைவடைவதற்குப் பங்களிப்புச் செய்யும் காரணங்களாகக் குறிப்பிட முடியும்.

# கருவளம்

## எப்போதாவது பிறந்த பிள்ளைகள்


### வரைபடம் 28: பிரிவுக்கமைய எப்போதாவது திருமணம் செய்த பெண்கள் பிரசவித்த உயிருடன் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கையின் சராசரிப் பெறுமதி - 2012




- எப்போதாவது திருமணமான 15 வயதிலும் கூடிய பெண்களில் பெரும்பான்மையானோர் அவர்களின் வாழ் நாளில் இரண்டு குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்கள் எனப் பதிவாகியுள்ள துடன் தமது வாழ் நாளில் ஏழு குழந்தைகள் அல்லது அதிலும் அதிகமாகப் பிரசவித்தவர்களின் வீதாசாரம் குறைவாகப் பதிவாகியுள்ளது.

- 2012 ஆம் ஆண்டுத் தொகைமதிப்புக்கமைய 15 வயது அல்லது அதிலும் அதிகமான எப்போதாவது திருமணம் செய்த பெண்களில் அண்ணளவாக நூற்றுக்கு 7 வீதமானோர் அது வரைக்கும் குழந்தைகளைப் பிரவசிக்கவில்லை எனப் பதிவாகியுள்ளது. உரிய இந்த வீதாசாரம் நகரப் பிரதேசத்தில் வசிக்கும் பெண்களிடம் உயர்ந்த பெறுமதியைக்கொண்டிருக்கின்றது.
- பெருந்தோட்டப் பிரிவின் பெண்கள் அதிக பிறப்புக்களை 3 மற்றும் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினைப் பிரசவித்துள்ளார்கள் எனப் பதிவாகியுள்ளதுடன் நகரப் பிரதேசத்தில் பெரும்பான்மையான பெண்கள் 2 வரையான குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர்.
- எவ்வாறாயினும் இந்த முழுமையான போக்கினை 6 மற்றும் 7 குழந்தைப் பிறப்புக்களைக் கொண்ட தொகுதிகளில் காணமுடியாதுள்ளது. அதாவது இங்கு வயது கூடிய கிராமியப் பெண்களுக்கு அதே வயதையொத்த நகர மற்றும் பெருந்தோட்டப் பெண்களிலும் பார்க்க அதிக எண்ணிக்கையான உயிர்ப் பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

### வரைபடம் 29: இனத் தொகுதிக்கமைய எப்போதாவது விவாகம் செய்த 50 வயதிலும் கூடிய மற்றும் 15 - 49 வயதிற்கிடைப்பட்ட பெண்களுக்கு எப்போதாவது பிறந்த உயிருடன் வாழும் குழந்தைகளின் சராசரிப் பெறுமதி - 2012





- இந்த எப்போதாவது திருமணமான பெண் களில் 50 வயது மற்றும் அதிலும் கூடியதும் 15 - 49 வயது ஆகிய இரு வயதுத் தொகுதியினரையும் ஒப்பிடுமிடத்து கடந்த மற்றும் நிகழ்காலக் கருவளம் அதன் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருப்ப துடன் இனத்தொகுதிக் கமைய அவற்றின்

மாற்றம் வரைபடம் 29 இல் காட்டப்பட்டுள்ளது.

- சகல இனத்தொகுதியிலும் 50 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு எப்போதாவது பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 15 - 49 வயதிற்கிடைப்பட்ட பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையினை விட விசேடமான அதிகரிப்பினை வெளிக்காட்டுகின்றது.
- குழந்தைகளைப் பிரசவிக்கும் வயதில் காணப்படும் எப்போதாவது திருமணமான பெண்களுக்கிடையில் கூடிய கருவள வீதப் பெறுமதியை வெளிப்படுத்துவது இலங்கை முஸ்லீம் இனத்தொகுதியாகும். இவர்கின் இளவயது அதாவது 15 - 49 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவுக்கான கருவளம் 2.4 உயிர்ப் பிறப்புக்கள் என்பதுடன் முதியோர் வயதுப் பிரிவான 50 வயதிலும் அதிகமான வயதுப் பிரிவுக்கான கருவளம் 4.5 உயிர்ப் பிறப்புக்களாகும்.
- மேலும் எப்போதாவது திருமணமான 50 வயதிலும் கூடிய மற்றும் 15 - 49 வயதுக் கிடைப்பட்ட சிங்கள பெண்களின் கருவளம் முறையே 3.5 மற்றும் 1.9 உயிர்ப்பிறப்புக்கள் எனப் பதிவாகியுள்ளது.
- 2012 ஆம் ஆண்டினுள் பிள்ளைகளைப் பிரசவிக்க கூடிய வயதுப் பிரிவினுள் (15 - 49) காணப்படும் பெண்களுக்குப் பிறந்த குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை சிங்களப் பெண்களிடையே பதிவாகியுள்ளது.

## கருவள வீதாசாரம்


**வரைபடம் 30: பிரிவுகளுக்கமைய மொத்தக் கருவள விகிதாசாரம் - 2012**




- கடந்த காலங்களில் இலங்கையின் கருவள மட்டத்தின் அதிகரிப்புக்கு வயதுப் பிரிவிற்கான சிறப்புக் கருவள விதாசார மட்டங்களில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அமைந்துள்ளன.
- வயதுப் பிரிவின் சிறப்புக் கருவள விகிதாசாரத்தினைப் பயன்படுத்திக் கணக்கிடப்பட்ட மொத்தக் கருவள விகிதாசாரம் (TFR) இலங்கையில் பெண்களின் கருவளத்தினைத் தனிக் குறிகாட்டியாகச் சாராம்சப் படுத்தியுள்ளது. அதாவது மொத்தக் கருவள விகிதாசாரத்தின் மூலம் கணக்கிடப்படுவது ஒரு பெண்ணுக்குக் குழந்தைகளைப் பிரசவிப்பதற்கு இயலுமான முழுமையான காலப் பகுதிக்குள் (15 - 49) அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளின் சராசரிப் பெறுமதியாகும்.
- 2012 ஆம் ஆண்டின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய 2011 இற்கு மதிப்பிடப்பட்ட மொத்தக் கருவள விகிதாசாரத்திற்கமைய ஒரு பெண் பிரசவித்த உயிர்ப் பிறப்புக்களின் எண்ணிக்கை 2.4 ஆகும்.


- உயர்ந்த மொத்தக் கருவள விகிதாசாரம் பெருந்தோட்டப் பிரிவில் (3.0) பதிவாகியுள்ளதுடன் குறைந்த பெறுமதி நகரப் பிரிவில் (2.1) பதிவாகியுள்ளது.
- நகரப் பிரிவில் மட்டும் கருவள விகிதாசாரம் மீளமைப்புச் செய்ய வேண்டிய மட்டத்தில் (Replacement Level) காணப்படுவதுடன் ஏனைய பிரிவுகளில் காணப்படும் பெண்களின் மொத்தக் கருவள விகிதாசாரம் உயர்ந்த பெறுமதியைப் பெற்றிருக்கின்றது.

### வரைபடம் 31 : பிரிவுக்கமைய கருவள விகிதாசாரத்தின் மாற்றம் 2005, 2011




- 2005 - 2011 ஆம் ஆண்டு வரை கருவள விகிதாசாரத்தில் ஏற் பட்ட மாற்றத்தைப் பிரிவுக் கமையப் பகுப்பாய்வு செய்தால் உயர்ந்த அதிகரிப்பு பெருந்தோட்டப் பிரிவில் வெளிக்காட்டப் பட்டிருக்கின்றது.
- 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 வரையான காலப்பகுதிக்குள் கிராமப் பிரிவில் பெண்களின் மொத்த கருவள வீதா சாரம் 2.3 இலிருந்து 2.5 வரை அதிகரிப்பைக் காட்டினாலும் அது பெருந்தோட்டப் பிரிவில் பெண்களின் கருவள வீகிதாசாரத்தின் அதிகரிப்பைப் போன்று கவனத்தில் கொள்ளத்தக்க பெறுமதியல்ல.
- மேலே குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் நகரப் பிரிவுப் பெண்களின் கருவள விகிதாசாரம் 2.2 இலிருந்து 2.1 வரையான சிறிய அதிகரிப்பைக் காணக் கூடியதாக இருக்கின்றது. எவ்வாறாயினும் இந்த வீழ்ச்சிப் போக்கு தேசிய மட்டத்திலான மொத்த கருவள விகிதாசாரத்தினை மீள்நிலைக்குக் கொண்டுவருதற்கான போக்கு பலமுடையதாக இல்லை.

### வரைபடம் 32 : இனத்தொகுதிக்கமைய மொத்தக் கருவள விகிதாசாரம் - 2011





- 2011 இல் இலங்கையின் பல்வேறு இனத்தொகுதி களுக்கிடையில் இலங்கை முஸ்லீம் இனத் தொகுதியினர் மொத்தக் கருவளத்தில் உயர்ந்த விகிதாசாரத்தினைப் பதிவு செய்துள்ளனர்.
- 2011 ஆம் ஆண்டில் இலங்கையில் சிங்களவர் மற்றும் இலங்கைத் தமிழர் ஆகிய இனத் தொகுதியினர் குறைந்த

மொத்த கருவள விகிதாசாரத்தைப் (2.3 உயிர்ப் பிறப்புக்கள்) பதிவு செய்துள்ளதுடன் அது பொதுவாக இலங்கை முஸ்லீம்களின் பெறுமதியை விட ஒரு உயிர்ப் பிறப்பினால் குறைவாகும்.

- இந்தியத் தமிழர் இனத் தொகுதியின் மொத்தக் கருவள விகிதாசாரம் (2.9 உயிர்ப் பிறப்புக்கள்) இலங்கை முஸ்லீம்களின் கருவள விகிதாசாரப் பெறுமதியுடன் ஒப்பிடுமிடத்து மட்டுமே இரண்டாம் இடத்தினைப் பெறுகின்றது.
- 2011 ஆம் ஆண்டில் ஏனைய இனத்தொகுதியினரான பறங்கியர் மலாயர் மற்றும் இலங்கைச் செட்டி ஆகியோரின் மொத்தக் கருவள விகிதாசாரம் 2.4 உயிர்ப்பிறப்புக்களாகப் பதிவாகியுள்ளன.


### வரைபடம் 33: பெண்களின் கல்வி மட்டத்தற்கமைய மொத்தக் கருவள விகிதாசாரம் மாற்றமடைதல் - 2005, 2011




- 2011 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட 5 கல்வி மட்டங்களில் உயர்ந்த மொத் தக் கருவள விகிதா சாரத்தை ஆரம்ப அல்லது இடைநிலைக் கல்வி மட்டத்தைப் பூரணப்படுத்திய பெண்கள் பதிவு செய்துள்ளதுடன் குறைந்த கருவள விகி தாசாரத்தை பாடசாலைக் கல்வியைப் பெற்றிராத பெண்கள் பதிவு செய் துள்ளனர்.


- 2005 ஆம் ஆண்டில் உயர்ந்த கருவள மட்டமான 2.8 உயிர்ப்பிறப்புக்கள் ஆரம்பக் கல்வி மட்டத்தைப் பூர்த்தி செய்த பெண்களிடம் பதிவாகியுள்ளதுடன் அது மீளமைப்புச் செய்ய வேண்டிய மட்டத்தினை விட விரும்பத்தக்க உயாந்த பெறுமதியைக் கொண்டுள்ளது.
- 2005 ஆம் ஆண்டு மற்றும் 2011 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் இடைநிலைக் கல்வி மட்டத்தைப் பூர்த்தி செய்த பெண்களின் மொத்த கருவள விகிதாசாரம் 2.6 இலிருந்து 2.7 வரை அதிகரித்துள்ளது.
- இந்த இரு காலப் பகுதிக்குள்ளும் கல்வி மட்டத்திற்கமைய மொத்தக் கருவள விகிதாசாரத்தை ஒப்பிடுமிடத்து பாடசாலைக் கல்வியைப் பெற்றிராத பெண்களின் கருவள விகிதாசாரம் மீளமைப்புச் செய்ய வேண்டிய மட்டத்திலும் பார்க்க மிகக் குறைந்த பெறுமதியைக் கொண்டிருத்தல் விசேட அம்சமாகும்.

**வரைபடம் 34 : மாவட்ட அடிப்படையில் மொத்தக் கருவள விகிதாசாரம் - 2011**





- 2011 ஆம் ஆண்டில் இலங்கையின் 25 நிருவாக மாவட்டங்களில் உயர்ந்த மொத்தக் கருவள விகிதாசாரத்தைத் திரு கோணமலை மாவட்டம் பதிவு செய்துள்ளது. ஆண்களிக் சராசரித் திருமண வயதின் குறைந்த பெறுமதி அந்த மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளமை மற்றும் அந்த மாவட்டத்தில் பெண்கள் திருமணம் செய்யும் சராசரி வயது முழு நாட்டின் சராசரி திருமண வயதுப் பெறுமதியை விட குறைவாகக் காணப்படுதல் இதற்குரிய முக்கிய காரணிகளாகக் குறிப்பிட முடியும்.
- பொதுவாக நுவரெலியா, அநுராதபுரம், அம்பாறை மற்றும் மொணராகலை போன்ற ஒப்பீட்ளவில் குறைந்த அபிவிருத்தியைக் கொண்ட மாவட்டங்களில் மொத்தக் கருவள விகிதாசாரப் பெறுமதி ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருக்கின்றது.
- எதிர்பார்த்ததைப் போன்றே குறைந்த மொத்தக் கருவள விகிதாசாரம் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.
- பொதுவாகப் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்டுள்ள கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் மொத்தக் கருவள விகிதாசாரப் பெறுமதி மீளமைப்பு மட்டத்தினை (2.1) விட குறைந்த பெறுமதியில் பதிவாகியுள்ளது. எஞ்சிய மாவட்டங்களில் இந்த விகிதாசாரம் மீளமைப்பு மட்டம் அல்லது அதிலும் உயர்ந்த பெறுமதிளைக் கொண்டிருக்கின்றது.

**வரைபடம் 35: வயதுச் சிறப்புக் கருவள விகிதாசாரப் பிறப்புக்கள் (ASFRs)**




- வயதடிப்படையிலான கருவளத்தின் போக்கானது குழந்தைகளைப் பிரசவிக்க ஆரம்பிக்கும் வயது, குழந்தை பிறப்பது நிறுத்தப்படும் வயது, குழந்தை பிறக்கும் இடைவெளி பெண்கள் மற்றும் காலத்திற்கேற்ப குழந்தை பிறப்புக்களின் மாற்றங்கள் தொடர்பிலான கருத்துக்களை வெளிப்படுத்தும்.
- 1993 மற்றும் 2000 ஆண்டு காலப் பகுதிக்குள் வயதுச் சிறப்புக் கருவளப் பெறுமதிகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளன. அந்தக் காலப்பகுதிக்குள் வயதடைந்த பெண்களைப் போன்று இளம் வயதுப் பெண்களினதும் கருவள வீதம் கணிசமான அளவினால் வீழ்சிசயடைந்துள்ளது.
- புதிய நூற்றாண்டின் ஆரம்பத்துடன் 45 - 49 வயதுப் பிரிவைத் தவிர ஏனைய வயதுப் பிரிவுகளினதும் கருவளத்தின் போக்கு எதிர்பார்க்கத அளவிற்கு அதிகரிப்பினை வெளிப்படுத்தியுள்ளது. 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட மக்களியல் மற்றும் சுகாதார அளவீட்டில் 25 – 29 வயதுப் பிரிவினது வயதுச் சிறப்பு கருவள விகிதாசாரப் பெறுமதி 1993 ஆம் ஆண்டின் மக்களியல் மற்றும் சுகாதார அளவீட்டின் கருவள விகிதாசாரப் பெறுமதியினை விட உயர்ந்ததாகும்.
- இலங்கையின் கருவளம்அதிகரித்திருந்தாலும் உயர்ந்த கருவள விகிதாசாரத்தை வெளிப்படுத்தும் வயதுப் பிரிவில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதுடன் கருவளத்தின் வயதுப் போக்கும் மாற்றமின்றி காணப்படுகின்றது.
- 2000 மற்றும் 2006 - 2007 ஆண்டுக் காலப் பகுதிக்குள் புதிய இள வயதுப் பெண்களின் அதாவது 15 - 19 வயதுப் பிரிவின் கருவள விகிதாசாரம் நூற்றுக்கு 3.7 இனால் அதிகரித்திருந்தாலும் புதிய தொகைமதிப்புத் தரவுகளின் மூலம் 2006 - 2007 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் புதிய இள வயதுப் பெண்களின் கருவள வீதமானது குறிப்பிடத்தக்க அதிகரிப்பை வெளிக்காட்டுகின்றது அது 12 சதவீதம்.
- அவ்வாறு இருப்பினும் அபிவிருத்தி அடைந்து வரும் அதிகமான நாடுகளில் இளவயதுப் பெண்களின் கருவளம் குறைவடைந்து செல்லும் போக்கினை வெளிக்காட்டி இருப்பினும் இலங்கையில் அதற்கெதிரான போக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## வரைபடம் 36: மொத்தக் கருவள விகிதாசாரம் 1981 - 2011





- 1960 ஆம் ஆண்டுத் தசாப்தம் தொடக்கம் கருவள விகிதாசாரம் வீழ்ச்சியடைய ஆரப்பித்ததுடன் 1981 இல் அது பெண்கள் பிரசவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 3.4 வரை வீழ்ச்சியடைந்தது.
- எவ்வாறாயினும் 1994 ஆம் ஆண்டாகும் போது இலங்கை மீளமைப்புப் கருவள விகிதாசாரத்தின் தீர்மானமிக்க கட்டத்தினை அடைந்தது. (2.1 உயிர்ப் பிறப்புக்கள்)
- கடந்த நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னர் தெற்காசிய வலய நாடுகளில் மீளளிப்புக்
- கருவள விகிதாசார மட்டத்தினை அடைந்துள்ள ஒரே நாடு இலங்கை ஆகும்.
- 1998 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்தக் கருவள விகிதாசாரம் 1.9 வரை வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 2005 மற்றும் 2011 அம் ஆண்டுகளில் அது முறையே 2.3 உயிர்ப் பிறப்புக்களிருந்து 2.4 உயிர்ப்பிறப்புக்கள் என்றவாறு அதிகரித்துள்ளது.
- பல்வேறு காரணங்களால் இலங்கையில் புதிய மக்களியல் போக்குத் தோற்றம் பெற்றுள்ளதுடன் அதிகரித்துள்ள கருவள விகிதாசாரம் விரும்பத்தக்கதொன்றாக மீளளிப்பு மட்டத்தனை விட உயர்வாக அமைந்துள்ளது. ஆனால் இந்த அதிகரிப்பு நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்குமா? இல்லையா? அல்லது மீளளிப்பு மட்டம் வரை மீண்டும் வீழ்ச்சியடைந்து செல்லக் கூடியதா? என்பதைப் மேலும் கவனமாக இருக்க வேண்டும்.
- 1991 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சனத்தொகைக் கொள்கை வெளியீட்டிற்கமைய முதன் முறையாக 2000 ஆம் ஆண்டாகும் போது மொத்தக் கருவள விகிதாசாரத்தை 2.1 உயிர்ப் பிறப்புக்கள் என்றவாறு பேணுவதற்கான குறிக்கோளை உச்ச நிலையில் வைத்துக்கொள்வதற்கு அளவு ரீதியான இலக்குகள் வகுக்கப்பட்டன.
- அவ்வாறே உரிய சனத்தொகை மற்றும் இனப்பெருக்கச் சுதாதாரக் கொள்கைகளின் அபிவிருத்தியானது இலங்கைச் சனத்தொகையின் நல்வாழ்வுக்கான பாதுகாப்பினை ஏற்படுத்தியுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

# எழுத்தறிவு

## மொழியறிவு


- இலங்கையின் மொத்த எழுத்தறிவு வீதாசாரம் நூற்றுக்கு 95.7 ஆகும். உயர்ந்த எழுத்தறிவு வீதாசாரம் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் குறைந்த எழுத்தறிவு வீதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

**வரைபடம் 37: பால் மற்றும் மாவட்ட அடிப்படையில் எழுத்தறிவு வீதாசாரம் - 2012**




**வரைபடம் 38: பிரிவு மற்றும் பால் அடிப்படையில் எழுத்தறிவு வீதாசாரம் - 2012**


- நகரப் பிரதேச (97.7%) மற்றும் கிராமப் பிரதேச (95.7%) எழுத்தறிவு வீதாசாரத்துடன்




ஒப்பிடுமிடத்து பெருந்தோட்டப் பிரிவின் எழுத்தறிவு சீதம் (86.1%) குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

- ஆண்கள் (96.9%) பெண்களை விட (94.6%) கூடிய எழுதத்றிவினைக் கொண்டுள்ளனர். பெருந்தோட்டப் பிரிவில் பெண்களின் எழுத்தறிவு வீதம் நூற்றுக்கு 80.9 ஆகப் பதிவாகியுள்ளது.


### வரைபடம் 39: பால் மற்றும் வயதுப் பிரிவு அடிப்படையில் மொழியறிவு - 2012




- இலங்கையரில் நூற்றுக்கு 80 என்ற உயர்ந்த வீதாசாரம் சிங்கள மொழியறிவைக் கொண்டிருப்பதுடன் ஆங்கில மொழியறிவு வீதம் (31%) ஆகவும் தமிழ் மொழியறிவு வீதம் (26%) ஆகவும் காணப்படுகின்றது.
- 15 - 24 வயதுப் பிரிவில் இளைஞர் யுவதிகளிடம் ஆங்கில மொழியறிவு உயர்ந்த மட்டத்தில் காணப் படுவதுடன் அது நூற்றுக்கு 43.7 வீதமாகும்.
- 10 - 14 வயதிற்கிடைப்பட்ட வயதுப் பிரிவுக்குரிய சிறுவர்களிடத்தில் தமிழறிவு (35%) உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருக்கின்றது.

## கணினி அறிவு

### வரைபடம் 40: வயதுப் பிரிவு மற்றும் மாவட்ட அடிப்படையில் கணினியைப் பயன்படுத்தும் ஆற்றல்





- 10 வயது அல்லது அதிலும் மேற்பட்ட சனத்தொகையில் நூற்றுக்கு 24.2 வீதமாயோருக்கு கணினியைப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ளது. நகரம் கிராமம் மற்றும் பெருந்தோட்டம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் முறையே நூற்றுக்கு 36.8, 22.1 மற்றும் 8.8 வீதமானோருக்கு கணினியைப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ளது.
- 10 வயது அல்லது அதிலும் மேற்பட்ட ஆண்களில் நூற்றுக்கு 26.5 வீதமானோருக்கு கணினியைப் பயன்படுத்தும் ஆற்றலுள்ளது. பெண்களுக்கான இந்தப் பெறுமதி நூற்றுக்கு 22.1 ஆகும்.
- கணினியைப் பயன்படுத்தும் ஆற்றல் 15 - 19 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் யுவதிகளிடம் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதுடன் இரண்டாம் இடத்தினை 10-14 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களிடத்தில் பதிவாகியுள்ளது.

- கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி தவிர்ந்த எனைய மாவட்டங்களுள் அதிகமான மாவட்டங்களில் 30 வயது மற்றும் அதிலும் அதிகமான சனத்தொகையினரிடம் கணினியைப் பயன்படுத்தும் ஆற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

### வரைபடம் 41: இணையத் தளத்திற்குள் பிரவேசித்தல் மாவட்ட அடிப்படையில் - 2012

- இலங்கையில் நூற்றுக்கு 10.9% ஆன வீட்டுக் கூறுகளுக்கு வீட்டிலிருந்தே இணையத்தளத்தினுள் நுழைவதற்கான வசதிகள் காணப்படுகின்றன.




- அது நகரப் பிரதேச வீட்டுக் கூறுகளுக்கிடையில் உயர்ந்த (நூற்றுக்கு 23.4) பெறுமதியைக் கொண்டுள்ளது.
- பெருந்தோட்டப் பிரிவின் வீட்டுக் கூறுகள் நூற்றுக்கு 7.7 வீதமானோர் பிரதானமாகத் தொடர்பாடல் மத்திய நிலையத்தின் மூலம் இணையத் தளத்திற்குள் பிரவேசிக்கின்றன.
- அரசாங்கத்தினால் இணையத் தளத்தினுள் பிரவேசிப்பதை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் “அறிவகம்” மத்திய நிலையங்களின் மூலமாக இணையத் தளத்திற்குள் பிரவேசித்தல் ஏனைய இரண்டு பிரிவுகளுடன் ஒப்பிடுமிடத்து நகரப் பிரதேசத்தில் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது.
- வீட்டிலிருந்தவாறே இணைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வீட்டுக் கூறுகளின் வீதாசாரம் (25.6%) கொழும்பு மாவட்டத்தில் உயர்ந்த மட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் கம்பஹா மாவட்டத்தில் (16.1 வீதம்), கண்டி மாவட்டத்தில (13.1 வீதம்), யாழ்ப்பாணம் மாவட்டத்தில (12.5 வீதம்) மற்றும் களுத்துறை மாவட்டத்தில (11.3 வீதம்) என்றவாறு பதிவாகியுள்ளன.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாண்மையான குடித்தனங்கள் தொடர்பாடல் மத்திய நிலையங்களின் வாயிலாக இணையத் தளத்திற்குள் பிரவேசிக்கின்றனர்.

# கல்வி


# கல்வி

## முன்பள்ளி செல்லும் பிள்ளைகள்

- இலங்கையில் பொதுவாகப் பிள்ளைகள் முன்பள்ளி கல்வியைப் பெறுவது 3 வயது பூர்த்தியடைந்த பின்னராகும். மூன்று வயதுப் பிள்ளைகளில் அண்ணளவாக நூற்றுக்கு 45 வீதம் முன்பள்ளி செல்வதாத் தொகைமதிப்புத் தகவல்கள் வெளிக்காட்டியுள்ளன.

- இலங்கையில் 4 வயதுப் பிள்ளைகளில் நூற்றுக்கு 85 வீதத்திலும் அதிகமானோர் முன்பள்ளிக்குச் செல்கின்றனர். எவ்வாறாயினும் ஏனைய இரண்டு பிரிவுகளுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பிரிவில் இந்தப் பெறுமதி நூற்றுக்கு 77 இலும் குறைந்த வீதாசாரப் பெறுமதியை வெளிப்படுத்துகின்றது.

**வரைபடம் 42 : வயதுத் தொகுதி மற்றும் பிரிவு அடிப்படையில் முன்பள்ளி செல்லும் வீதாசாரம் - 2012**




## பாடசாலைசெல்லும் பிள்ளைகள்

- 6 - 10 வயது மற்றும் 11 - 14 வயதுத் தொகுதிச் சிறுவர்களின் பெரும்பாண்மையானோர் பாடசாலை செல்கின்றனர். எனினும் இதில் குறைந்த வீதாசாரம் பெருந்தோட்டப் பிரிவு பிள்ளைகளிடம் பதிவாகியுள்ளது. 5 - 14 வயது சிறுவர்களுக்கு பாடசாலைக் கல்வி அரசாங்கத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டிருந்தாலும் பெருந்தோட்டப் பிரிவில் பாடசாலை செல்லும் வீதாசாரத்தை அதிகரிப்பதில் மேலும் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகும்.


- இலங்கையில் 5 வயதில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் விதாசாரம் நூற்றுக்கு 75 ஆகும். அதற்கு மேலதிகமாக முறையே 6 - 10 வயது மற்றும் 11 - 14 வயதுச் சிறுவர்களில் முறையே நூற்றுக்கு 96 மற்றும் நூற்றுக்கு 94 விதமானோர் பாடசாலை செல்கின்றனர்.

- 15 - 16 வயது மற்றும் 17 - 18 வயதுத் தொகுதிக்கான பாடசாலை செல்லும் விதாசாரம் நூற்றுக்கு 80 இலும் குறைவாகப் பதிவாகியுள்ளது. பெருந்தோட்டப் பிரிவில் பாடசாலை செல்லும் வீதாசாரம் ஏனைய பிரிவுகளை விட பின்னால் காணப்படுகின்றது. 15 - 16 வயது

மற்றும் 17 - 18 வயதுப் பிரிவுகளில் பாடசாலை செல்லும் வீதாசாரம் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றமையால் அந்த வயதுப் பிரிவுகளின் மேல் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

- 15 - 16 வயதுப் பிரிவில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை நுவரெலியா, புத்தளம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் காணமுடியுமென பெறுபேறுகள் வாயிலாக மேலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை செல்வதில் மாவட்ட மட்டத்திலான வேறுபாட்டினை பின்வரும் வரைபு வெளிப்படுத்துகின்றது.

**வரைபடம் 43 : வயதுத் தொகுதி மற்றும் மாவட்ட அடிபப்டையில் பாடசாலை செல்லும் விதாசாரம் - 2012**





## 25 வயது மற்றும் அதிலும் கூடிய சனத்தொகையின் கல்வித் தகைமைகள்


- தரம் 1 - 5 சித்தி, தரம் 6 -10 சித்தி, க.பொ.த. (சா.த) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி, க.பொ.த. (உ.த) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி, மற்றும் பட்டம் அல்லது அதிலும் கூடிய சித்தி பெற்றவர்களின் வீதாசாரம் முறையே 18.4, 39.6, 19.1, 14.3 மற்றும் 3.9 என்றவாறாகும். சனத்தொகையில் பெரும்பாலானோர் இடைநிலை மட்டம் வரை கல்வியைப் பூரணப்படுத்தியுள்ளமையை இந்தப் புள்ளிவிபரம் வெளிக்காட்டுகின்றது.

- 25 அல்லது அதிலும் மேற்பட்ட வயதுச் சனத்தொகையின் கல்வித் தகைமையினைக் கவனத்தில் கொள்ளும் போது நூற்றுக்கு 4.7 விதம் பாடசாலைக் கல்வியைப் பெறவில்லை என்பது தெரிய வந்துள்ளது. இந்த வீதாசாரம் பெண்களுக்காக நூற்றுக்கு 6.1 ஆகக் காணப்படுவதுடன் ஆண்களுக்காக நூற்றுக்கு 3.0 எனப் பதிவாகியுள்ளது.

## வரைபடம் 44 : பால் அடிப்படையில் 25 மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையின் கல்வி மட்டம் - 2012




## வரைபடம் 45 : மாவட்ட அடிப்படையில் 25 மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையின் கல்வி மட்டம் - 2012




- மாவட்ட அடிப்படையில் கவனத்தில் கொள்ளும் போது சகல மாவட்டங்களிலும் 25 மற்றும் அதற்குமேற்பட்ட சனத்தொகையில் பெரும்பாலானோரின் கல்வி மட்டம் தரம் 6 - 10 வரையான சித்தியாகும்.
- நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் க.பொ.த (சா.த) மற்றும் அதற்கு மேல் சித்தியடைந்த சனத்தொகையின் உயர்ந்த வீதாசாரத்தைக் காணக்கூடியதாக உள்ளது.
- சகல மாவட்டங்களிலும் பாடசாலைக் கல்வியை எவ் விதத்திலும் பெற்றிராத சிறிய விதாசாரத்தைக் காணக்கூடி யதாகவுள்ளது. அவ்வீதாசாரம் மட்டக்களப்பு (10.9) மற்றும் நுவரெலியா (10.2) ஆகிய மாவட்டங்களில் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருக்கின்றது.


# இடம்பெயர்வு

## இடப்பெயர்வு

- உள்நாட்டு இடம்பெயர்வு
- இந்த உள்நாட்டு இடப்பெயர்வுப் பகுப்பாய்விற்காக 2012 தொகைமதிப்பிலே ஒவ்வொரு நபர்களும் தற்போது வசிக்கும் மாகாணம், மாவட்டம் மற்றும் அவர்கள் முன்னர் வசித்த மாகாணம், மாவட்டம் தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இலங்கையில் பல தசாப்தங்களாக மாவட்டங்களுக்கிடையில் காணப்பட்ட சமமற்ற சனத்தொகைப் பரம்பலில் உள்நாட்டு இடப்பெயர்வு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இடப்பெயர்வின் திசை, வடிவம், அளவு மற்றும் துறைகள் தொடர்பில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.
- 2012 இல் நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய 2.7 மில்லியன்கள் சனத்தொகை (அதாவது மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 13.4 வீதம்) மாகாணங்களுக்கிடையிலான இடம்பெயர்ந்துள்ளார்கள் எனப் பதிவாகியுள்ளது.
- அவ்வாறே 4.0 மில்லியன்கள் அளவில் (மொத்த சனத்தொகையின் 20% வீதம்) அவ்வாறில்லாவிட்டால் ஒவ்வொரு ஐந்து பேருக்கும் ஒருவர் தமது வசிப்பிட மாவட்டத்தை குறைந்தது ஒரு முறையாவது மாற்றிக்கொண்டுள்ளனர்.
- உள்நாட்டு இடப்பெயர்வுப் போக்கு மூன்று வகைப்படும். அதாவது, உள்நோக்கிய-இடப்பெயர்வு, வெளிநோக்கிய-இடப்பெயர்வு மற்றும் தேறிய இடப்பெயர்வுப் போக்கு ஆகியவற்றுடன் அது தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள காரணிகள் பற்றியும் இதன் மூலம் விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

## இலங்கையில் மாகாண ரீதியிலான உள்நோக்கிய-இடப்பெயர்வுச் சனத்தொகை

**வரைபடம் 46: மாகாண ரீதியிலான உள்நோக்கிய-இடம்பெயர்ந்தோரின் சதவீதப் பரம்பல் 2012**





- மாகாணங்களுள் மிகச்சிறிய நிலப்பரப்பினைக் கொண்ட மேல்மாகாணத்திலேயே அதிகளவிலான உள்நோக்கிய இடப்பெயர்வு ஏற்பட்டுள்ளது.
- மாகாணங்களுக்கிடையிலான மொத்த இடப்பெயர்வில் மேல் மாகாணத்திற்கு எனைய மாவட்டங்களிலிருந்து இடம்பெற்றுள்ள உள்நோக்கிய இடப்யெர்வு நூற்றுக்கு 40 வீதமளவாகும்.

- 2012 ஆண்டில் அதிக உள்நோக்கிய இடப்பெயர்வு இடம்பெற்ற இரண்டாம், மூன்றாம் மாகாணங்களாக முறையே வடமேல் மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்தினை அடையாளங்காண முடியும். அந்த ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பட்டுள்ள உள்நோக்கிய இடப்பெயர்வு வீதாசாரம் முறையே நூற்றுக்கு 10.9 மற்றும் 10.8 ஆகும்.

## மாவட்ட ரீதியான உள்நோக்கிய-இடப்பெயர்வின் வடிவங்கள்


**வரைபடம் 47: மாவட்ட ரீதியான உள்நோக்கிய-இடப்பெயர்வின் வடிவங்கள் 1981, 2012**




- இலங்கையிலுள்ள மாவட்டங்களுள் அதிகளவான இடப்பெயர்வாளர்கள் கொழும்பு மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளனர். 2012 இல் கொழும்பு மாவட்டத்தில் 641,922 இடம்பெயர்ந்த சத்தொகை பதிவாகியுள்ளதுடன் அது இலங்கையின் மொத்த இடப்பெயர்வுச் சனத்தொகையில் நூற்றுக்கு 16.2 வீதம் ஆகும்.
- இடம்பெயர்ந்த சனத்தொகை அதிகமாகக் காணப்படும் இரண்டாவது மாவட்டமாக கம்பஹா காணப்படுவதுடன் கம்பஹா மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்த சனத்தொகையின் எண்ணிக்கை 613,070 ஆகும்.
- களுத்துறை, கண்டி மற்றும் குருணாகல் மாவட்டங்களைக் கவனத்தில் கொள்ளும் போது ஒவ்வொரு மாவட்டத்தையும் நோக்கி இடம்பெயர்ந்த சனத்தொகையின் எண்ணிக்கை 200,000 இற்கும் அதிகமானது என்பது தெளிவாகின்றது.
- 1981 உடன் ஒப்பிடுகையில் 2012 இல் ஏனைய அனைத்து மாவட்டங்களும் உள்நோக்கிய-இடப்பெயர்வாளர்களின் எண்ணிக்கையில் சிறிதளவு அதிகரிப்பைக் காட்டுகின்றன. (வரைபடம் 47)

## மாகாண ரீதியிலான உள்நோக்கிய-இடப்பெயர்வு மற்றும் வசிக்கும் காலப்பகுதி


### வரைபடம் 48: மாகாண மற்றும் வசிக்கும் காலப்பகுதி அடிப்படையிலான உள்நோக்கிய-இடப்பெயவாளர்கள் - 2012




- மேல்மாகாணத்தில் வசிக்கும் ஒவ்வொரு நான்கு பேருக்கும் ஒருவர்மாகாணங்களுக்கிடையில் இடம்பெயர்ந் தவராகக் காணப்படுகிறார்.
- ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுமிடத்து அதிக இடப்பெயர்வாளர்கள் மேல் மாகாணத்தில் (1,083,185) அதாவது, நீண்டகாலமாக இடம்பெயர்ந்தவர்கள் (10 அல்லது அதற்குக் கூடிய வருடங்கள்), நடுத்தரகாலமாக இடம்பெயர்ந்தவர்கள் (5 - 9 வருடங்கள்), குறுகியகால இடம்பெயர்ந்தவர்கள் (5 வருடங்களுக்கு உட்பட்ட) என்ற அனைத்து வகையான இடப்பெயர்வாளர்களும் கணிசமான அளவில் வசிக்கின்றனர்.
- வடமாகாணத்திலும் குறிப்பிடத்தக்களவு குறுகியகால உள்நோக்கிய இடப்பெயர்வு இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.
- இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடத்தில் நீண்டகாலமான உள்நோக்கிய இடப்பெயர்வு முறையே வடமத்தியமாகாணம், வடமேல்மாகாணம் மற்றும் மத்தியமாகாணம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது (வரைபடம் 48).

## மாவட்டத்தினுள் இடப்பெயர்வுக்கான காரணங்கள்

### வரைபடம் 49: மாவட்டத்தினுள் இடப்பெயர்வுக்கான காரணங்கள் அடிப்படையிலான உள்நோக்கிய-இடப்பெயர்வாளர்களின் பரம்பல்





- மாவட்டத்தினுள் இடப்பெயர்வுக்கான காரணங்கள் வரைபடம் 49 இல் தரப் பட்டுள்ளது. அதன்மூலம் அண்ணளவாக ஒவ்வொரு மூன்று இடப்பெயர்வாளருக்கும் ஒரு இடப்பெயர்வாளர் திருமணத்தினால் தனது வழமையாக வசிக்கும் மாவட்டத்தை மாற்றுகின்றமை தெரியவந்துள்ளது.
- ஒவ்வொரு ஐந்து இடப் பெயர்வாளர்களுக்கும் ஒரு இடப்பெயர்வாளர் தொழில்சார் காரணங்களால் தனது வழமையாக வசிக்கும் மாவட்டத்தை மாற்றுகின்றார். கொழும்பு, கம்பஹா மற்றும்

மட்டக்களப்பு மாவட்டங்கள் தொழில்சார் இடம்பெயர்வில் மிக உயர்ந்த சதவீதத்தை வெளிக்காட்டுகின்றன. (முறையே 43 சதவீதம், 31 சதவீதம் மற்றும் 22 சதவீதம்)

- குடும்ப உறுப்பினர்களின் இடப்பெயர்வின் காரணமாக அந்த இடப்பெயர்வாளர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக, அண்ணளவாக ஒவ்வொரு ஐந்து பேருக்கும் ஒருவர் (19%) தமது வழமையான வசிப்பிட மாவட்டத்தை மாற்றுகின்றனர்.
- மொத்த உள்நோக்கிய இடப்பெயர்வாளர்களின் நூற்றுக்கு 5.4 சதவீதமானோர் கல்விசார் தேவைகளின் நிமித்தம் தமது வசிக்கும் மாவட்டத்தை மாற்றுகின்றனர். மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் மொத்த இடப்பெயர்வாளர்களில் கணிசமான வீதம் (முறையே 14%, 11%. 11% மற்றும் 8%) கல்விசார் காரணங்களால் இடம்பெயர்ந்துள்ளனர்.
- பிரதானமாக, இடப்பெயர்வின் காரணத்தினால் அல்லது இடப்பெயர்வின் பின்னரான மீள்குடியேற்றத்தின் காரணத்தால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு இடம்பெயர்வு ஏற்பட்டுள்ளது.
- அம்பாறை, பொலன்னறுவை, அநுராதபுரம், மொணராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் சார்ந்த காரணங்களால் இடம்பெயர்ந்தவர்களை அவதானிக்க முடிகிறது.

## வயது, பால் ரீதியான உள்நோக்கி-இடம்பெயர்ந்தோர் சனத்தொகை


**வரைபடம் 50: இடம்பெயர்ந்தோர் மற்றும் இடம்பெயராதோர் சனத்தொகையின் வயது-பால் பரம்பல் - 2012**




- 2012 இன் இடம்பெயர்ந்த மற்றும் இடம்பெயராத சனத்தொகையின் வயது மற்றும் பால் ரீதியான பரம்பல் கூம்பில் (ிலசயஅனை) காட்டப்பட்டுள்ளது. (வரைபடம் 50)
- இடம்பெயராத சனத்தொகையுடன் ஒப்பிடுமிடத்து, ஆண், பெண் இருபாலருக்காகவும் இடம்பெயர்ந்த சனத்தொகையில் காணப்படும் சிறுவர்கள் மற்றும் பாடசாலை செல்லும் சிறுவர்களின் சனத்தொகை (19 வயதிலும் குறைந்த) ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமதியைத் தெளிவாகக் காட்டுகின்றது.
- இடம்பெயர்ந்த சனத்தொகையில் வேலை செய்யும் வயதுச் சனத்தொகை அதிகளவில் காணப்படுவதாக, இலங்கையின் வயதுப் பிரிவு ரீதியான இடம்பெயர்ந்த சனத்தொகையின் பரம்பல் வெளிக்காட்டுகின்றது. குறிப்பாக 25 - 29, 30 - 34 மற்றும் 35 - 39 என்ற வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் இருபாலரதும் அதிகமான இடப்பெயர்வு வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- சகல வயதுப் பிரிவுகளிலும் (19 வயதிற்குக் குறைந்த வர்கள் தவிர) பெண்களே ஆண்களை விட அதிகமாக இடம்பெயர்ந்துள்ளனர்.


## மாகாண ரீதியில் வெளி நோக்கிய-இடம்பெயர்வின் வடிவங்கள்

### வரைபடம் 51: மாகாண ரீதியில் வெளிநோக்கி இடம் பெயர்ந்தோரின் சதவீதப் பரம்பல் 1981, 2012




- 2012 சனத்தொகை மதிப்பீட்டிற்கமைய மத்திய மாகாணத்தில் அதிகளவான வெளி நோக்கிய இடப்பெயர்வு வீதாசாரத்தைக் (19.2%) காணக் கூடியதாகவுள்ளது.
- இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களில் அதிகமான வெளிநோக்கிய இடப்பெயர்வு முறையே தென் மாகாணம் (17.4%) மேல் மாகாணம் (15.4%) மற்றும் சப்பிரகமுவா மாகாணத்தில் (13.1%) இடம்பெற்றுள்ளமையை அடையாளம் காண முடியும்.
- குறிப்பிடத்தக்களவு வெளி நோக்கிய இடப்பெயர்வு வீதாசாரம் (10.7%) வடமேல் மாகாணத்திலும் பதிவாகியுள்ளது.

## மாவட்ட ரீதியிலான வெளிநோக்கிய-இடப்பெயர்வின் வடிவங்கள்





### வரைபடம் 52: மாவட்ட ரீதியிலான வெளிநோக்கிய-இடப்பெயர்வின் வடிவங்கள் 1981, 2012

- 1981 மற்றும் 2012 இன் வெளிநோக்கிய-இடப்பெயர்வின் அளவு வரைபடம் 52 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய கொழும்பு, வவுனியா, கண்டி, பதுளை, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் பாரியளவிலான வெளிநோக்கிய இடப்பெயர்வு ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.
- விவசாயச் செயற்றிட்ட குடியேற்றங்களைக் கொண்டுள்ள குருணாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்களவு வெளிநோக்கிய-இடப்பெயர்வை 2012 இல் அவதானிக்க முடிகிறது.

## மாவட்ட ரீதியிலான தேறிய இடப்பெயர்வின் வடிவங்கள்

**வரைபடம் 53: மாவட்ட ரீதியிலான தேறிய இடப்பெயர்வின் வடிவங்கள் 1981, 2012**




- தேறிய இடப்பெயர்வானது உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய இடம்பெயர்வுகளுக்கிடையிலான வித்தியாசமாகும். இது நேர்க்கணியமாகவோ (உள்நோக்கிய-இடம்பெயர்வு) எதிர்க்கணியமாகவோ (வெளிநோக்கிய-இடம்பெயர்வு) காணப்படலாம்.
- வரைபடம் 53 இற்கமைய 1981 தொடக்கம் 2012 காலப்பகுதியில், மேல்மாகாணத்தின் முன்று மாவட்டங்களிலும் தேறிய இடப்பெயர்வினது குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புப் போக்கைக் காட்டுகின்றது.
- இக்காலப்பகுதியில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் மிகப்பிரபலமான இடம்பெயர்வின் முடிவிடங்களாகத் திகழ்கின்றன.
- 1981 இல் அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மொணராகலை ஆகிய உலர்வலய மாவட்டங்கள் உயர்வான நேர்க்கணிய தேறிய இடப்பெயர்வைப் பதிவு செய்திருப்பினும் 2012 ஆகும்போது அதில் வீழ்ச்சிப் போக்கினைக் காணக் கூடியதாகவுள்ளது.
- 1981 உடன் ஒப்பிடுமிடத்து 2012 இல் நுவரெலியா, பதுளை மற்றும் மாத்தறை மாவட்டங்கள் உயர்வான எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வினை வெளிக்காட்டுகின்றன.

## தேறிய இடப்பெயர்வு வீதம்


### அட்டவணை 2: மாவட்ட ரீதியான தேறிய இடப்பெயர்வு வீதம் - 1981, 2012

| மாவட்டம் | 1981 | 2012 | மாவட்டம் | 1981 | 2012 |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 28.4 | 67.1 | முல்லைத்தீவு | 318.8 | 143.9 |
| கம்பஹா | 74.0 | 190.2 | மட்டக்களப்பு | -4.8 | -44.3 |
| களுத்துறை | -32.4 | 56.6 | அம்பாறை | 101.0 | 40.0 |
| கண்டி | -138.4 | -95.4 | திருகோணமலை | 141.1 | 65.8 |
| மாத்தளை | -41.6 | -48.8 | குருணாகல் | -18.6 | -20.6 |
| நுவரெலியா | -37.1 | -144.2 | புத்தளம் | 67.6 | 52.2 |
| காலி | -111.7 | -102.5 | அநுராதபுரம் | 160.8 | 54.7 |
| மாத்தறை | -161.2 | -198.7 | பொலன்னறுவை | 371.6 | 142.5 |
| அம்பாந்தோட்டை | -4.6 | -50.0 | பதுளை | -49.6 | -109.2 |
| யாழ்ப்பாணம் | -53.4 | 24.0 | மொணராகலை | 221.9 | 58.2 |
| மன்னார் | 150.9 | -36.1 | இரத்தினபுரி | 14.6 | -44.2 |
| வவுனியா | 263.5 | -697.7 | கேகாலை | -121.6 | -100.1 |

- குறிப்பு: கிளிநொச்சி மாவட்டம் 1981 இன் பின்னர் உருவாக்கப்பட்டமையால் இவ்வட்டவணையில் ஒப்பீட்டுக்காக உள்ளடக்கப்படவில்லை. ஒவ்வொரு மாவட்டச் சனத்தொகையிலும் ஒவ்வொரு ஆயிரத்திற்கும் காணப்படும் தேறிய இடப்பெயர்வாளர்களின் எண்ணிக்கை தேறிய இடப்பெயர்வு வீதமாகும்.
- 2012 இன் உச்ச எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வு வவுனியா மாவட்டத்தில் (-697.7) பகிவாகியுள்ளதுடன் இரண்டாவது உச்ச எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வானது மாத்தறை மாவட்டத்தில் (-198.7) பதிவாகியுள்ளது. நுவரெலியா, பதுளை, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் உச்ச எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வு பதியப்பட்டுள்ளது (முறையே -144.2, -109.2, -1.2.5 மற்றும் 100.1).
- 1981 இலிருந்து 2012 வரையான காலப்பகுதியில் நுவரெலியா, பதுளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வில் அதிகரிப்புப் போக்கைக் காட்டுகின்றன. (அட்டவணை 2).
- 1981 இல் பொலன்னறுவை, மொணராகலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதி உச்ச நேர்க்கணிய தேறிய இடப்பெயர்வு பதிவாகியிருப்பினும், 2012 இல் அந்த நேர்க்கணிய தேறிய இடப்பெயர்வு வீழ்ச்சியடையும் போக்கைக் காட்டுகின்றது.
- 1981 இல் நேர்க்கணிய தேறிய இடப்பெயர்வைக் கொண்டுள்ள வவுனியா, மன்னார் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்கள், 2012 இல் எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வு கொண்ட மாவட்டங்களாக மாறியுள்ளன.
- களுத்துறை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்கள் 1981 இல் எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வைக் கொண்டிருந்த மாவட்டங்களாகப் பதிவாகியிருந்தாலும் 2012 இல் நேர்க்கணிய தேறிய இடப்பெயர்வைக் கொண்டுள்ள மாவட்டங்களாக மாறியுள்ளன.

## தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிப்போர் சனத்தொகை


**வரைபடம் 54: மாவட்டம் மற்றும் பால் ரீதியான தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிப்போர் சனத்தொகை**




- 2012 குடிசன மற்றும் விட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகையினுள் (6 மாதங்களுக்கும் அதிகமாகத் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளோர்) நூற்றுக்கு 59 வீதம் ஆண்கள் என்பதுடன் நூற்றுக்கு 41 வீதம் பெண்களாவர். இதன் மூலம் வேறு நாட்டில் தற்காலிகமாக வசிக்கும் வெளிநாட்டவர்களில் ஆண்கள் சனத்தொகையின் அளவு பெண்கள் சனத்தொகையின் அளவை விட உயர்ந்த பெறுமதியைக் கொண்டுள்ளமை வெளிக்காட்டப்படுகின்றது.
- வெளிநாடுகளில் தற்காலிகமாக வசிக்கும் பெண்களின் மொத்த எண்ணிக்கையில் அண்ணளவாக 72 சதவீதமானோர் வசிக்கும் மாவட்டங்களைக் கவனத்தில் கொண்டால 9 மாவட்டங்கள் முக்கியத்துவமுடையனவாகும். அவையாவன, கம்பஹா (13.5 சதவீதம்), கொழும்பு (12.2 சதவீதம்), குருணாகல் (10.7 சதவீதம்), புத்தளம் (8.1 சதவீதம்), கண்டி (7.4 சதவீதம்), களுத்துறை (5.6 சதவீதம்), நுவரெலியா (4.8 சதவீதம்), காலி (4.7 சதவீதம்) மற்றும் அநுராதபுரம் (4.5 சதவீதம்) என்றவாறு முறையாகக் காட்டலாம்.
- வெளிநாடுகளில் தற்காலிகமாக வசிக்கும் ஆண்களின் மொத்த எண்ணிக்கையில் அண்ணளவாக நான்கில் மூன்று பங்கினர் (74.0 சதவீதம்) உள்ளடங்கும் மாவட்டங்களாக கம்பஹா (15.8 சதவீதம்), கொழும்பு (14.8 சதவீதம்), கண்டி (7.9 சதவீதம்), புத்தளம் (7.2 சதவீதம்), குருணாகல் (7.0 சதவீதம்), களுத்துறை (6.0 சதவீதம்), அம்பாறை (5.5 சதவீதம்), மட்டக்களப்பு (5.4 சதவீதம்) மற்றும் காலி (4.5 சதவீதம்) என்பவற்றை அடையாளம் காண முடியும்.

## தற்போது வசிக்கும் நாடுகள் ரீதியாக வெளிநாடுகளில் தற்காலிகமாக வசிப்போர் சனத்தொகை

**வரைபடம் 55: தற்போது வசிக்கும் நாடுகள் ரீதியாக வெளிநாடுகளின் தற்காலிகமாக வசிக்கும் இலங்கைச் சனத்தொகை**





- தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையருள் அதிகமானோர் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் இடப்பெயர்வாளர்களாக சில மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அந்த நாடுகளாக சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், லெபனான், ஜோர்தான், ஓமான் மற்றும் பஹ்ரெய்ன் போன்றன காணப்படுகின்றன.
- இவ்வாறு தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழும் அனைத்து இலங்கையரில் அண்ணளவாக 67 சதவீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளில் வசித்து வருகின்றனர்.
- தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் பெண்கள் சனத்தொகையில் நூற்றுக்கு 72 வீதமும் ஆண்கள் சனத்தொகையில் நூற்றுக்கு 63 வீதமும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கின்றனர். (வரைபடம் 55)
- வழமையாக வசிக்கும் மாகாண ரீதியாக தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் சனத்தொகை
- தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் 1/3 பங்கிலும் அதிகமானோர் (34.4 சதவீதம்) மேல் மாகணத்திற்கு உரித்தாவதுடன் இரண்டாவதும் மூன்றாவதுமாக, தற்காலிகமாக வெளிநாட்டில் வசிப்போரை அதிகமாக உருவாக்கியுள்ள மாகாணங்களாக முறையே வடமேல் மாகாணம் (16.1 சதவீதம்) மற்றும் மத்திய மாகாணம் (14.1 சதவீதம்) காணப்படுகின்றன.
- தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் கிழக்கு மாகாணத்திற்குரியவர்கள் நூற்றுக்கு 11 என்பதுடன் தென் மாகாணத்திற்குரியவர்கள் நூற்றுக்கு 8.2 வீதம் ஆகும்.
- வெளிநாடுகளில் தற்காலிகமாக வசிக்கும் மொத்த சனத்தொகையில் சப்ரகமுவா, வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்கள் முறையே 6.0 சதவீதம், 5.0 சதவீதம் மற்றும் 3.3 சதவீதத்தைக் கொண்டுள்ளன.

## தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழும் சனத்தொகையினரின் குடித்தனங்களின் பண்புகள்.


- 2012 இல் குறைந்தது ஒவ்வொரு பதினொரு குடித்தனங்களுக்கும் ஒரு குடித்தனத்தில் குறைந்த பட்சம் ஒருவராவது தற்காலிகமாக வெளிநாட்டில் வசிப்பதாகக் தெரியவந்துள்ளது.

**வரைபடம் 56: குடித்தனத் தலைவரின் கல்வித் தகைமை ரீதியாக குறைந்தது ஒருவராவது தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் குடித்தனங்களின் சதவீதம்**




- தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் நபர்கள் காணப்படும் குடித்தனங்களில் மூன்றில் இரண்டு பங்கிலும் அதிகமான குடித்தனங்களின் குடித்தனத் தலைவர்கள் க.பொ.த. சா/த இலும் குறைவான கல்வித் தகைமையைக் கொண்டுள்ளனர்.

**வரைபடம் 57: குடும்பக் கட்டமைப்பு ரீதியாக குறைந்தது ஒருவர் வெளிநாட்டில் வசிக்கும் குடித்தனங்களின் சதவீதம்**




- தற்காலிகமாக வெளிநாட்டில் வசிப்போரின் குடும்ப அமைப்பினைக் கவனத்தில் கொண்டால் கருக் குடும்பம் மற்றும் கூட்டுக் குடும் பங்களுக்கிடையில் பெரும்பாலும் சம பரம்பலைக் காணமுடியும். (முறையே 47 சதவீதம் மற்றும் 46 சதவீதம் ஆகும்.)

## தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிப்பதற்கான காரணங்கள்


- தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 85 சதவீதமானோர் தொழிலுக்காக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 60 சதவீதமானோர் ஆண்களாகவும் 40 சதவீதமானோர் பெண்களாகவும் காணப்படுகின்றனர்.
- தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 7 சதவீதமானோர் கல்விக்காக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 64 சதவீதமானோர் ஆண்களாகவும் 36 சதவீதமானோர் பெண்களாகவும் காணப்படுகின்றனர்.
- தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 94 சதவீதமானோர் 18 - 59 வயதுக்கிடைப்பட்டோராவர்

# உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகள்

## உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகள்

- நபர்களின் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான இடர்பாடுகள்
- உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுள்ள நபர்கள் என இங்கு கவனத்தில் கொள்ளப்படுவது, தமது அன்றாட நடவடிக்கைகளை எந்தவொரு முறையிலாவது மேற்கொள்ள முடியாமலும் மற்றும் ஓரளவு கஸ்டத்துடன் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களாவர்.
- உடல் ரீதியான மற்றும் உளரீதியான தனிப்பட்டோரின் செயல்பாட்டு இடர்பாடுகள் கடந்த 2012 தொகைமதிப்பில் 6 முக்கிய தலைப்புக்களில் சேகரிக்கப்பட்டன, அவையாவன பார்வை, கேள்மை, இடம்பெயராற்றல், நினைவாற்றல், நாளாந்த சுய நடவடிக்கை மற்றும் கருத்துக்களைப் பரிமாறல் என்பனவாகும்.
- மிகவும் வயது குறைந்த சிறுவர்களின் உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகளை அடையாளம் காண்பது கடினமானதாகும். ஆகையால் 2012 தொகைமதிப்பில் 5 வயதும் அதற்கு மேற்பட்டோரதும் தகவல்களே பெற்றுக் கொள்ளப்பட்டன.
- மொத்த சனத்தொகையில் 5 வயது மற்றும் அதற்குக் கூடியவர்களில் (18,615,577) ஆறு வகைகளில் ஏதாவதொரு வகையில் இடர்பாட்டைக் கொண்டுள்ளவர்கள் 1,617,924 (அல்லது 8.7 சதவீதம்) எனக் கூறப்படுகிறது. இதில், 43 சதவீதமானோர் ஆண்களும் 57 சதவீதமானோர் பெண்களுமாவர்.


**வரைபடம் 58: வகை மற்றும் வயது ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுடைய சனத்தொகையினரின் சதவீதம்**




- 5 வயது மற்றும் அதற்குக் கூடியவர்கள் முறையே 5.4, 2.1, 3.9, 1.8, 1.1 மற்றும் 1.0 சதவீதமானோர் முறையே பார்வை, கேள்மை, இடம்பெயராற்றல், நினைவாற்றல், நாளாந்த சுயநடவடிக்கை மற்றும் கருத்துக்களைப் பரிமாறல் போன்ற இடர்பாடுகளால் அவதியுறுகின்றனர்.

## மாவட்ட ரீதியாக செயல்பாட்டு இடர்பாட்டின் நிலை

**வரைபடம் 59: மாவட்ட ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாட்டின் தன்மை**





- உச்ச சதவீதமான இடர்பாடுள்ளவர்கள் காணப்படும் மாவட்டமாகக் கண்டி (10.1) காணப்படுவதுடன் அடுத்து நுவரெலியா (10.0) மற்றும் இரத்தினபுரி (10.0) மாவட்டங்கள் காணப்படுகின்றன. அதிகுறைந்த இடர்பாடுள்ளோரின் சதவீதம் கொழும்பிலும் (7.0) அடுத்து மட்டக்களப்பிலும் 7.2 சதவீதமாகவும் காணப்படுகிறது. வரைபடம் 59 ஆனது இடர்பாடுள்ள சனத்தொகையினரின் பரம்பலைத் தெளிவாகக் காட்டுகிறது.

## வயது ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாட்டின் தன்மை

- உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுள்ள சனத்தொகையினரின் சதவீதம் வயது அதிகரிப்புடன் உயர்வடைகிறது. ஆகையால் வயதானோர் சனத்தொகையினரின் உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகளைக் குறைவடையச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வரைபடம் 60: வயதுப் பிரிவு மற்றும் பால் ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுடைய சனத்தொகையின் சதவீதம் - 2012**




## பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் அடிப்படையிலான உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகள்

- பொதுவாக உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுடைய நபர்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கமைய 15 வயதிலும் அதிகமான அவ்வாறான இடர்பாடுகளைக் கொண்ட நபர்களில் நூற்றுக்கு 29 சதவீதமானோர் ஏதாவது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

- எஞ்சிய நூற்றுக்கு 71 சதவீதமானோர் பொருளாதாரச் செயற்பாடற்றவர்களாவர். இடர்பாடுள்ள சனத்தொகையில் பெரும்பான்மையானோர் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்றோராகப் பதிவாகியுள்ளனர்.

# வீட்டுவசதிகள்

## பின்னணி

- குடிசன, வீட்டுவசதிகள் கொகைமதிப்பே நாட்டின் வீட்டு வசதிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் ஆரம்ப மூலமாகும். வீட்டுக்கூறுகள். கூட்டுவசிப்பிடங்கள் (பணம் கொடுத்து தங்கும் வீடுகள், விடுதிகள், சிறைச்சாலைகள், முதியோர் இல்லங்கள் போன்றன) மற்றும் வசிப்பிடமல்லாத கட்டிடக்கூறுகள் (அலுவலகங்கள், திருத்தகங்கள், கடைகள் போன்றன) எனும் மூன்று வகைகளின் கட்டிடங்கள் யாவும், 2012 தெகைமதிப்பின்போது நிரற்படுத்தப்பட்டன. அத்துடன், மக்கள் வாழும் அனைத்து வகையான கட்டிடங்களில் வசித்த போதிலும் வீட்டுவசதிப் பண்புகள் மக்கள் தங்கியிருக்கும் வீட்டுக்கூறுகளில் மாத்திரமே சேகரிக்கப்பட்டன.

- தொகைமதிப்பு 2012 இல், வீட்டுவசதித் தகவல்கள் மற்றும் குடித்தனத் தகவல்கள் எனும் இரண்டு பிரதான தலைப்புகளின் கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. வீட்டுக்கூறானது மனிதர்கள் வசிக்கும், சுவர் போன்றவற்றால் ஏனைய இடங்களிலிருந்து வேறாக்கப்பட்டிருப்பதுன் தனியான நுழைவாயிலையும் கொண்ட இடமாகும். எனவே, ஒரு கட்டிடக்கூறில் பல வீட்டுக்கூறுகள் காணப்படலாம்.

- அத்துடன், ஒரு வீட்டுக்கூறினுள் பல குடித்தனங்கள் காணப்படலாம். குடித்தனத்தை தீர்மானிக்கும் பிரதான காரணியாக சமையல் விளங்குகிறது. குடித்தனமானது பலரைக் கொண்ட குடித்தனம் அல்லது தனியொருவரைக் கொண்ட குடித்தனமாக அமையலாம். தனது உணவு வசதிகளை தாமே மேற்கொண்டு தனியாக வாழும் ஒருவர் தனிநபர் குடித்தனம் எனப்படும். தமது சமையல் ஒழுங்குகளை ஒன்றாக மேற்கொண்டு வாழும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோரைக் கொண்ட குடித்தனம் பல நபர் குடித்தனம் எனப்படும்.


### வசிப்பிடங்களின் எண்ணிக்கை

**அட்டவணை 3: நபர்கள் வசிக்கும் கட்டிடங்களின் எண்ணிக்கை - 2012**

| வசிக்கும் வீட்டுக்கூறுகள் | கூட்டு வசிப்பிடங்கள் | வசிப்பிடமல்லாத கட்டிடக்கூறுகள் |
|---|---|---|
| 5,207,740 | 52,284 | 7,135 |

- 2012 தொகைமதிப்பின் பிரகாரம், இந்நாட்டில் மக்கள் வசிப்பதற்காகப் பயன்படுத்தும் கட்டிடக்கூறுகளின் மொத்த எண்ணிக்கை 5,267,159 ஆகக் காணப்படுகிறது.

### வரைபடம் 61: மாவட்ட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் எண்ணிக்கை - 2012




- வரைபடம் 61 இன் மூலம் மாவட்ட அடிப்படையில் வசிக்கும் வீட்டுக் கூறுகளின் பரம்பல் காட்டப்பட்டுள்ளது. வசிக்கும் வீட்டுக் கூறுகளின் அதிகமான எண்ணிக்கை கம்பஹா, கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களில் பதிவாகியுள்ளதுடன் உயர்ந்த பெறுமதி கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

## வீட்டின் கட்டமைப்பு

### அட்டவணை 4: வீட்டுக் கட்டமைப்பு ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012

| வீட்டுக் கட்டமைப்பு வகை | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| மொத்த வசிக்கும் வீட்டுக்கூறுகள் | 5,207,740 | 100 |
| ஒற்றைத்தளத் தனிவீடு | 4,416,584 | 84.8 |
| இரட்டைத்தளத் தனிவீடு | 376,764 | 7.2 |
| இரண்டிலும் அதிக தள தனிவீடு | 27,654 | 0.5 |
| சேர்ந்தவீடு/ துணைவீடு | 51,424 | 1.0 |
| தொடர்மாடி | 32,127 | 0.6 |
| கூட்டுரிமை வீடுகள்/ ஆடம்பர மாடிவீடுகள | 4,179 | 0.1 |
| இரட்டை வீடுகள் | 36,512 | 0.7 |
| வரிசைவீடுகள்/ லயன்கள் | 185,131 | 3.6 |
| குடிசை/ சேரி | 77,365 | 1.5 |

- நாட்டின் பெரும்பன்மையான (84.8 சதவீதம்) வீட்டுக்கூறுகள் ஒற்றைத்தளத் தனி வீடுகளாகக் காணப்படுகின்றன, அடுத்து 7.2 சதவீத இரட்டைத்தளத் தனி வீடுகளும், 1.5 சதவீத குடிசை/சேரிகளும் காணப்படுகின்றன. தொகைமதிப்புக் கணக்கெடுக்கும் காலங்களில் தோட்டமக்கள் பெரும்பாலும் வாழும் வரிசைவீடு/லயங்கள் 3.6 சதவீதமாக வெளிப்பட்டன. ஏனைய இரண்டுக்கு மேற்பட்ட தளங்களையுடைய தனி வீடுகள், தொடர்மாடி வீடுகள், கூட்டுரிமை வீடுகள் மற்றும் இரட்டை வீடுகள் போன்ற வகையான வீட்டுக்கூறுகள் மிகக் குறைந்த சதவீதத்தில் காணப்பட்டன.

- நுவரெலியாவிலுள்ள வீட்டுக்கூறுகளில் 31.2 சதவீதமானவை வரிசைவீடு / லயங்களாகக் காணப்படுகின்றன. அதி உயர் அளவான (44.5 சதவீதம்) குடிசை/ சேரிகள் காணப்படும் இடமாக முல்லைத்தீவு மாவட்டமும் அடுத்து கிளிநொச்சி (24.4 சதவீதம்) மாவட்டமும் காணப்படுகின்றன.

## குடித்தனங்கள்

- குடித்தனங்களின் எண்ணிக்கை 5,264,282 ஆகக் காணப்பட்டபோதிலும், இது வசிக்கும் வீட்டுக்கூறுகளின் எண்ணிக்கையை விட எண்ணிக்கையில் 56,542 ஆல் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் கருத்து ஒரு வீட்டுக்கூறில், ஒன்று அல்லது மேற்பட்ட குடித்தனங்கள் உள்ளன என்பதாகும். பெரும்பான்மையான வீட்டுக் கூறுகளில் (நூற்றுக்கு 97) ஒரு குடித்தனமே காணப்படுகின்றது.
- தொகைமதிப்பிலிருந்து குடித்தன உறுப்பினர்களின் சராசரி அளவு 3.8 ஆகக் காணப்படுவதுடன், இந்தச் சராசரியானது வசிக்கும் பிரிவுக்கமைய மாறுபடுகிறது. ஒரு குடித்தனத்தில் அங்கத்தவர்களின் சராசரி அளவு நகர்ப்புறங்களில் 3.9 ஆகவும், கிராமப்புறங்களில் 3.7 ஆகவும், பெருந்தோட்டப் பிரிவுகளில் 4.0 ஆகவும் காணப்படுகின்றன.

## வீட்டு உரிமை

**அட்டவணை 5: வீட்டு உரிமை ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012**


| வீட்டு உரிமை வகை | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| குடித்தனங்களின் மொத்தம் | 5,264,282 | 100 |
| குடித்தன அங்கத்தவர் ஒருவருக்குச் சொந்தமானது | 4,365,190 | 82.9 |
| வாடகை/ குத்தகை - அரசுக்குச் சொந்தமான | 116,871 | 2.2 |
| வாடகை/ குத்தகை - தனியாருக்குச் சொந்தமானது | 330,410 | 6.3 |
| வாடகையற்று வசிப்பது | 328,346 | 6.2 |
| அத்துமீறியது | 68,650 | 1.3 |
| ஏனையவை | 54,815 | 1.0 |

- குடித்தனங்களில் பெரும்பான்மையானவை, குடித்தன அங்கத்தவர் ஒருவருக்குச் சொந்தமானதாகும்.

## சுவர்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப்பொருள் ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகள்

- சுவர்களின் கட்டுமானத்திற்கான மூலப்பொருளாக, பெரும்பான்மையான வீட்டுக்கூறுகளுக்கு (53.1 சதவீதம்) செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, இருப்பினும் 33.8 சதவீதமான வீட்டுக்கூறுகளுக்குச் சீமெந்துக் கல் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுவர் அமைப்பதற்கு 5 சதவீதமான வீட்டுக்கூறுகளுக்குப் களிமண் பயன்படுத்தப்பட்டுள்ளது.


**வரைபடம் 62: சுவர்களின் பிரதான மூலப்பொருள் ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012**




## தரைக்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப்பொருள் ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகள்

- பெரும்பான்மையான வீட்டுக் கூறுகள் தரைகளை அமைப்பதற்காக (72.5 சதவீதம்) சீமெந்து பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கு 12.2 சதவீதம் ரெறாசோ, தரையோடு, கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 7.5 சதவீதமான வீட்டுக்கூறுகளுக்குக் தரைக்கான மூலப்பொருளாகக் களிமண் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வரைபடம் 63: தரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பிரதான மூலப்பொருள் மற்றும் மாவட்ட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதங்கள்**





- சகல மாவட்டங்களிலும், தரைகளுக்கான தளங்களை அமைக்க சீமெந்தையே பயன்படுத்துகின்றனர். எவ்வாறாயினும் கிளிநொச்சி (24.8 சதவீதம்), மொணராகலை (24.6 சதவீதம்) மற்றும் பதுளை (17.1 சதவீதம்) ஆகிய மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க வீட்டுக்கூறுகளின் சதவீதம் தரைகளுக்குக் களிமண்ணைப் பயன்படுத்தியுள்ளதுடன்

மறுபக்கத்தில் மேல் மாகாணத்திலுள்ள கொழும்பு (33.4 சதவீதம்), கம்பஹா (20.7 சதவீதம்) மற்றும் களுத்துறை (16.8 சதவீதம்) ஆகிய மாவட்டங்களில் குறிப்பிடத்தக்களவு வீட்டுக்கூறுகளின் சதவீதம் ரெறாசோ, தரையோடு மற்றும் கருங்கல் போன்றவற்றைப் பயன்படுத்தி, ஒப்பீட்டளவில் ஆடம்பர முறைகளில் தரைகளை அமைத்து, ஏனைய மாவட்டங்களை விட உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் காட்டுகின்றன.

## கூரைக்காகப் பயன்படுத்தியுள்ள பிரதான மூலப்பொருள் ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகள்

**வரைபடம் 64: கூரைக்காகப் பயன்படுத்தியுள்ள பிரதான மூலப்பொருள் ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012**




- பெரும்பான்மையான வீட்டுக்கூறுகள் கூரையினை அமைக்க (47.6 சதவீதம்) ஓடுகளையே பயன்படுத்தியுள்ளதுடன், அதற்கடுத்ததாக அஸ்பெஸ்ரஸ் கூரைத் தகடுகளும் (34.6 சதவீதம்), உலோகத் கூரைத் தகடுகளும் (10.5 சதவீதம்) பயன் படுத்தப்பட்டுள்ளன. கூரைகளை அமைப்பதற்குப் பெரும்பலும் ஓடுகளும், அஸ்பெஸ்ரஸ் தகடுகளும் பிரபல்யப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிகமானோர் நாட்டின் சூடான காலநிலைக்கு ஏற்றவகையில் பெரும்பாலும் ஓடுகள் பயன்படுத்தியிருக்கலாம்.


## கட்டுமானப் பொருள்களின் வகைக்கமைய வசிக்கும் வீட்டுக்கூறுகளின் மீள்-வகைப்படுத்தல்

- அனைத்து வசிக்கும் வீட்டுக்கூறுகளும் நிரந்தர, அரை-நிரந்தர, தற்காலிக மற்றும் வகைப்படுத்தப்படாத எனும் நான்கு உபபிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் கீழே காட்டப்படும் நியதிகளுக்கமைய இந்த வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வீட்டுக்கூறின் வகை | நிர்மாணத்துக்கான பிரதான மூலப்பொருள் | | |
|---|---|---|---|
| | சுவர் | தரை | கூரை |
| நிலையான | செங்கல் | சீமெந்து | ஓடு |
| | சீமெந்து துண்டுகள்/ கற்கள் | ரெறாசோ/தரையோடு/ கரங்கல் | அஸ்பெஸரஸ் |
| | கபூக் | மரம் | கொங்கிறீற் |
| | அமுக்கிய மணற்கற்கள் | கொங்கிறீற் | சிங் அலுமீனியத் தகடு |
| குறை-நிரந்தர | களி | ஏதாவது மூலப்பொருள் | ஏதாவது மூலப்பொருள் |
| திருத்தப்பட்ட | கிடுகு/பனையோலை | களி | உலோகத் தகடு |
| | கலகை/உலோகத் தகடு | மண் | கிடுகு/பனையோலை/ வைக்கோல் |
| வகைப்படுத்தப்படாத | ஏனையவை | ஏனையவை | ஏனையவை |

- வசிக்கும் மொத்த வீட்டுக்கூறுகளில் (5,207,740), நூற்றுக்கு 81.9 சதவீதக் கூறுகள் நிரந்தரக் கட்டுமானப் பொருள்களால் கட்டப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கு 17.2 சதவீதம் அரை நிரந்தரப் பொருள்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- நிர்மாணத்திற்கு கொழும்பும் (93.6 சதவீதம்), முல்லைத்தீவும் (35.0 சதவீதம்) முறையே அதி உச்சமானதும், அதி குறைந்ததுமான நிரந்தரக் கட்டுமானப் பொருள்களைப் பயன்படுத்தியுள்ளன. அரை நிரந்தரக் கட்டுமானப் பொருள்களை நுவரெலியா (60.7 சதவீதம்) மாவட்டம் உச்சமாகவும், அடுத்து முல்லைத்தீவு (53.8 சதவீதம்) மற்றும் கிளிநொச்சி (50.8 சதவீதம்) மாவட்டங்களும் பயன்படுத்தியுள்ளன.

**வரைபடம் 65: நிர்மாணிக்கப்பட்ட பொருள்களின் வகை மற்றும் மாவட்ட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012**




## வசிக்கும் வீட்டுக்கூறுகளின் வயது

**அட்டவணை 6: நிர்மாணித்த வருட ரீதியாக வசிக்கும் வீட்டுக்கூறுகளின் சதவீதப் பரம்பல் - 2012**


| நிர்மாணித்த வருடம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| Total | 5,207,740 | 100.0 |
| 2011 | 323,194 | 6.2 |
| 2010 | 236,190 | 4.5 |
| 2009 | 210,782 | 4.0 |
| 2008 | 205,037 | 3.9 |
| 2007 | 206,425 | 4.0 |
| 2006 | 210,202 | 4.0 |
| 2005 | 256,804 | 4.9 |
| 2004 – 2000 | 819,104 | 15.7 |
| 1999 – 1995 | 581,580 | 11.2 |
| 1994 – 1990 | 477,621 | 9.2 |
| 1989 – 1980 | 620,287 | 11.9 |
| 1979 or before | 1,060,514 | 20.4 |

- வீட்டுக்கூறொன்றின் வயதைக் கணிப்பிட நிர்மாணிக்கப்பட்ட ஆண்டு முக்கியமானதாகும். தற் போதைய வீட்டுக் கூறுகளில் 2.5 மில்லியன்கள் எண்ணிக்கையான நூ ற்றுக்கு 47.2 சதவீத விட்டுக் கூறுகள் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பூரணப்படுத்தப் பட்டுள்ளதாகத் தொகைமதிப்பு பெறுபேறுகள் மூலம் காட்டப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டில் மட்டும் 323,194 வீட்டுக் கூறுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (அட்டவணை 6)


## குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கத்தின் அடிப்படையில் குடித்தனங்கள்

- பாதுகாப்பான கிணறு, குழாய் மூலமான நீர் (பிரதான இணைப்பு), குழாய்க் கிணறு மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் ஆகியன பாதுகாப்பான குடிநீரெனக் கருதப்படுகிறது. குடித்தனங்களில் நூற்றுக்கு 31.4 சதவீதம் வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பான கிணறுகளில் குடிநீரைப் பெற்றுக்கொள்வதுடன் நூற்றுக்கு 14.7 சதவீதம் வீட்டு வளாகத்துக்கு வெளியே அமையப் பெற்றுள்ள பாதுகாப்பான கிணறுகளில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதாகத் தொகைமதிப்புத் தகவல்களுக்கமையத் தெரிய வந்துள்ளது. குழாய் நீரை (பிரதான இணைப்பு) சனத்தொகையில் நூற்றுக்கு 31.4 சதவீதமானோர் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான பிரதான மார்க்கமாகப் பயன்படுத்துவதாகப் பதிவாகியுள்ளது. (வரைபடம் 66).

**வரைபடம் 66: குடிநீர் பெறும் பிரதான மார்க்கத்தின் அடிப்படையில் குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012**





**வரைபடம் 67: மாவட்ட ரீதியாக பாதுகாப்பற்ற குடிநீரைப் பயன்படுத்தும் குடித்தனங்களின் சதவீதங்கள் - 2012**




- நுவரெலியா மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள நூற்றுக்கு 33.2 சதவீதமான குடித்தனங்கள் ஆறு, குளம் அல்லது ஓடைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பாதுகாப்பற்ற நீரை, குடிநீராகப் பயன்படுத்துகின்றன. (வரைபடம் 67)


## உணவு சமைக்கப் பயன்படுத்தப்படும் எரிபொருள் ரீதியாக குடித்தனங்கள்




**வரைபடம் 68: சமையல் எரிபொருள் பாவனை ரீதியாக குடித்தனங்களின் சதவீதப் பரம்பல்**


- பெரும்பான்மையான குடித்தனங்கள் (78.4 சதவீதம்) பிரதான எரிபொருளாக விறகைப் பயன்படுத்துவதுடன் நூற்றுக்கு 18.5 சதவீதம் எரிவாயுவை பயன்படுத்துகின்றனர். கொழும்பு மாவட்டத்திலுள்ள குடித்தனங்களில் நூற்றுக்கு 60.5 சதவீதம் எரிவாயுவைச் சமையலுக்காகப் பயன்படுத்துகின்றர்.

## வெளிச்சமூட்டும் மூலத்திற்கமைய குடித் தனங்கள்




**வரைபடம் 69: பிரதான வெளிச்சமூட்டும் மூலத்திற்கமைய குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012**

- மின்சாரம், மண்ணெண்ணெய் மற்றும் சூரியசக்தி ஆகியன பிரதான வெளிச்சமூட்டும் மூலங்களாக நாட்டில் பயன்படுத்தப் படுகின்றன. பெரும்பான்மையான குடித் தனங்கள் (87 சதவீதம்) வெளிச்சமூட்ட மின்சாரத்தை தேசிய கட்டமைப்பிலிருந்து பெற்றுக்கொள்வதுடன் நூற்றுக்கு 12.2 சதவீதம் மண்ணெண்ணெயை இதற்காகப் பயன்படுத்துகின்றனர். அண்ணளவாக நூற்றுக்கு 0.6 சதவீதக் குடித்தனங்கள் சூரியசக்தியை ஒளியூட்டப் பயன் படுத்துகின்றனர் (வரைபடம் 69).





**வரைபடம் 70: மாவட்ட ரீதியாக வெளிச்சமூட்டுவதற்காக குடித்தனங்கள் மின்சாரத்தைப் (தேசிய கட்டமைப்புகள்) பயன்படுத்தும் சதவீதம் - 2012**

- வரைபடம் 70 மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேசிய கட்டமைப் பிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் குடித்தனங்களின் விகிதாசாரம் காட்டப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தின் மொத்தக் குடித்தனங்களில் நூற்றுக்கு 97.7 சதவீதம் வெளிச்சமூட்டுவதற்காக, தேசிய கட்டமைப்பிலிருந்து மின்சாரத்தைப் பெறுகின்றன, ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய கட்டமைப்பிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்தும் குடித்தனங்கள் நூற்றுக்குப் 10 சதவீதத்திலும் குறைவாகும்.
- வெளிச்சமூட்டும் பிரதான மார்க்கமாகக் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மண்ணெண்ணெய்யை பயன்படுத்தப்படுவதுடன் அந்தச் சதவீதம் முறையே நூற்றுக்கு 78.9 மற்றும் நூற்றுக்கு 72.8 ஆகும். அவ்வாறே கிளிநொச்சி மாவட்டத்தின் குடித்தனங்களில் 11.1 சதவீதத்தினர் சூரிய சக்தியைப் பயன்படுத்துகின்றனர்.

## குடித்தனங்களின் மலசலகூட வசதிகள்

- நீரடைப்பு மலசலகூடங்கள் எமது நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புடைய மலசல கூடங்கள் ஆகும். பெரும்பான்மையான குடித்தனங்கள் (76 சதவீதம்) தமக்குரிய பிரத்தியேகமான நீரடைப்பு மலசலகூடங்களைப் பயன்படுத்துவதுடன் நூற்றுக்கு 10 சதவீதமான குடித்தனங்கள் வேறு குடித்தனங்களுடன் சேர்ந்து நீரடைப்பு மலசலகூடங்களைப் பயன்படுத்துகின்றனர்.
- நீரடைப்பு (கழிவுத் தொட்டி) மற்றும் நீரடிப்பு மலசலகூடங்களை முறையே 4.6 சதவீதம் மற்றும் 2.1 சதவீதமான குடித்தனங்கள் பயன்படுத்துகின்றன. நேரடியாகக் குழியுடன் இணைக்கப்பட்டவற்றை 2.6 சதவீதமான குடித்தனங்கள் நாட்டில் பயன்படுத்துகின்றனர்.
- இலங்கையில் அண்ணளவாக 1.7 சதவீதமான குடித்தனங்கள் எந்தவொரு வகைசார்ந்த மலசலகூடத்தையும் பயன்படுத்துவதில்லை. மலசல கூடத்தைப் பயன்படுத்தாத அதிகமான குடித்தனங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் (21.9 சதவீதம்) காணப்படுவதுடன் முல்லைத்தீவு (20.6 சதவீதம்) மற்றும் மட்டக்களப்பு (12.5 சதவீதம்) ஆகிய மாவட்டங்களிலும் அதிக வீதாசாரம் பதிவாகியுள்ளது.

**வரைபடம் 71: குடியிருப்புப் பிரிவு ரீதியாக குடித்தனங்களின் மலசலகூடப் பாவனையின் சதவீதப் பரம்பல்**





- அதற்கமைய நகர மற்றும் கிராமப் பிரிவுகளில் நூற்றுக்கு 85 சதவீதத்திற்கும் அதிகமான குடித்தனங்கள் தங்களுக்குரிய பிரத்தியேகப் பாவனைக்கான மலசலகூடங்களைக் கொண்டுள்ளன. பெருந்தோட்டப் பிரிவில் நூற்றுக்கு 73 சதவீத குடித்தனங்கள் தமக்குரிய பிரத்தியேக மலசலகூடங்களைப் கொண்டுள்ளன. (வரைபடம் 71)

## திண்மக் கழிவுகளை அகற்றுவதன் அடிப்படையில் குடித்தனங்கள்

- திண்மக் கழிவுகளை அகற்றுவதில் எரித்தல் (47.2 சதவீதம்) பிரதான முறையாகக் காணப்படுகிறது. வரைபடம் 72 இற்கமைய 23.3 சதவீதமான குடித்தனங்கள் வீட்டுச் சூழலில் திண்மக் கழிவுகளை அகற்றுவதுடன் 7.7 சதவீதமானவர்கள் திண்மக் கழிவுகளைப் பசளையாக்குவதாகவும் காட்டுகிறது. எவ்வாறாயினும், நுவரெலியா மாவட்டத்தில் நூற்றுக்கு 11.7 சதவீதமான குடித்தனங்கள் வீதி, ஆறு, அருவி மற்றும் காடுகளில் திண்மக் கழிவுகளை வீசுகின்றன.


**வரைபடம் 72: திண்மக் கழிவுகளை அகற்றும் பிரதான முறை ரீதியாக குடித்தனங்களின் சதவீதப் பரம்பல் - 2012**




- உள்ளூராட்சி சபைகள் நகரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் (நகர சபை போன்ற) முக்கிய பங்காற்றுகின்றன. இந்த முறைமையை நூற்றுக்கு 20.5 வீதமான குடித்தனங்கள் பயன்படுத்துகின்றன. சுற்றாடலைப் பேணுவதற்கு உதவும் காரணத்தினால் திண்மக் கழிவுகளை அகற்றும் முறை மற்றும் வினைத்திறன்கள் இங்கு கலந்துரையாடப்படும் ஏனைய முறைகளை விட மிக முக்கியமானதாகும். கொழும்பு மாவட்டத்தின் (68.8 சதவீதம்) திண்மக் கழிவுகளை அகற்றும் பிரதான முறையாக, உள்ளூராட்சி அதிகாரசபைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அம்பாறையில் அண்ணளவாக 41.1 சதவீதமான குடித்தனங்களும் மற்றும் மட்டக்களப்பில் 40 சதவீதமான குடித்தனங்களும், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாகவே திண்மக் கழிவுகளை அகற்றுகின்றன.

## தொலைத்தொடர்பு வசதிகள்

**வரைபடம் 73: கிடைக்கக்கூடிய, தொலைத்தொடர்பு வசதிகள் ரீதியாக குடித்தனங்களின் சதவீதங்கள்**





- இலங்கையின் குடித்தனங்களுள் வானொலி, தொலைக்காட்சி, நிலையான தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மேசைக் கணினி, மடிக் கணினி மற்றும் தொலைநகல் இயந்திரம் ஆகியவற்றை கொண்டுள்ள குடித்தனங்களின் விதாசாரங்கள் முறையே 68.9, 78.3, 42.4, 78.9, 15.0, 5.6, மற்றும் 0.4 ஆகும்.


- ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது கிளிநொச்சி மாவட்டத்தில் தொலைக்காட்சியைக் கொண்டுள்ள குடித்தனங்களின் வீதாசாரம் மிகக்குறைவாகக் (14.0) கணப்படுகின்றது. (வரைபடம் 74).

- நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு மாவட்டம் தொலைத்தொடர்பு சாதனங்களைப் போன்று கணினி இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதிலும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகிறது. (வரைபடம் 75 மற்றும் 76).


### வரைபடம் 74: மாவட்ட ரீதியாக கிடைக்கக்கூடிய, தொலைக்காட்சி மற்றும் வானொலி வசதிகள் - 2012




### வரைபடம் 75: மாவட்ட ரீதியாக கிடைக்கக்கூடிய, தொலைபேசி வசதிகள் - 2012




### வரைபடம் 76: மாவட்ட ரீதியாக கிடைக்கக்கூடிய, கணினி வசதிகள் - 2012



# சனத்தொகை தொடர்பான சவால்கள், பிரச்சினைகள் மற்றும் உபாய மார்க்கங்கள்

## நகராக்கம்

இலங்கையில் "நகராக்கம்" தொடர்பாகப் போதுமான வரைவிலக்கணங்கள் இன்மையால் நகரப் பிரதேசங்களைச் சரியாக அடையாளம் காண முடியாதுள்ளது. தற்போது இலங்கையில் மாநகர சபைகள் (MC) மற்றும் நகர சபைகளின் (UC) கீழ் உள்ளடங்கும் பிரதேசம் நகரப் பிரதேசங்கள் என அடையாளப்படுத்தப்படும். நகராக்கத்திற்கான வரைவிலக்கணங்கள் அடிக்கடி மாற்றம் செய்யப்படுவதனால் சில நகரங்களில் நகராக்கத் தன்மை ஏற்பட்டுள்ளதுடன் மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கு வெளியில் அமையப் பெற்றுள்ள நகராக்கத் தன்மை கொண்ட அதிகமான பிரதேசங்கள் இன்னும் கிராமியப் பிரதேசங்களாகவே அடையாளப்படுத்தபடுகின்றன. ஆகையால் நிருவாகத் தேவைகளை மட்டும் கவனத்தில் கொள்ளாது சனத்தொகையின் இலட்சணங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய வரைவிலக்கணம் "நகராக்கத்தைச்" சரியாக அடையாளம் காண்பதற்கு அவசியமாகும்.

இலங்கையின் நகராக்கத்திற்குள் உள்ளடங்கும் பெரும்பாலான பிரதேசங்கள் மேல் மாகாணத்திற்கு உரியதாகும். நகராக்கம் தொடர்பான வரைவிலக்கணத்தைத் திருத்தம் செய்தால் பாரியளவான நகராக்கம் மேல் மாகாண நகராக்கத்தினுள் முதன்மை நிலையை அடைவதற்கு வாய்ப்புள்ளது. மேல் மாகாணத்தில் காணப்படும் சுகாதாரம், கல்வி, வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் நிருவாக வசதிகள் காரணமான பெரும்பாலானவர்கள் இந்த மாகாணத்தை விரும்புகின்றனர். அரசாங்கம் நாடு பூராகவும் பரம்பிக் காணப்படும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நகரங்களை இணைத்து நகர வலையமைப்பை நிருமாணித்து அதன் மூலம் கிராமிய மக்களுக்கும் இந்த நகர வசதிகளை அண்மையில் கொண்டு சேர்க்கும் கொள்கை வேலைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. தற்போது காணப்படும் பிரதான நகரங்களும் அதற்குச் சமமாக அபிவிருத்தி செய்யப்படும். நகராக்கத்தின் ஏற்றத் தாழ்வுகளை படிப்படியாக நீக்கி நகராக்கத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மிக்க வகையில் நகரத்தை விருத்தி செய்தல் தொடர்பாக விசேட அவதானத்தைச் செலுத்தி அவ்வாறான கொள்கைகளைச் செயற்படுத்தி மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது.

## திருமணம் மற்றும் கருவளம்

இலங்கையில் ஆண்கள் மற்றும் பெண்கள் திருமணம் செய்யும் திருமணம் செய்யும் வயது குறைவடைந்துள்ளதுடன் அது பெண்களின் தொழில்படைக்குப் பங்களிப்புச் செய்வது தொடர்பில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. திருமணம் செய்யும் வயது குறைவடைந்துள்ளதன் காரணாகக் கருவளம் அதிகரித்துள்ளதுடன் அது மாற்றீட்டுக் கருவள மட்டத்தினை விட (Replacement level) அதிகரித்துள்ளது. நிகழ்கால மக்களியல் சூழலில் குறைந்த வயதுத் திருமணங்கள் அதிகரித்தல் அதாவது இளைய திருமணங்களின் அதிகரிப்பானது கருவளம் அதிகரித்தல் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாற்றீட்டுக் கருவள மட்டம் அதாவது மொத்தக் கருவள வீதாசாரம் (பொதுவாக பெண்ணொருவருக்கு இரு பிள்ளைகள் காணப்படும் - வுகுசுஸ்ரீ 2.1) மட்டத்தினை 2000 இல் அடைந்து கொள்வதற்காக அரசு முதன் முறையாக 1991 இல் சனத்தொகை பிரசவச் சுகாதாரக் கொள்கை ஒன்றைத் தயாரித்தது. அந்தக் கொள்கையினை அமுல்படுத்தியதன் பெறுபேறாக இலங்கைச் சனத்தொகையின் அந்த பிரவசச் சுகாதாரக் கொள்கைகளில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதுடன் அதன் தரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

2012 தொகைமதிப்பு நாட்டின் மொத்தக் கருவளம் சிறு அளவினால் அதிகரித்துள்ளதை காட்டுகின்றது. ஆனால் உயர் கல்வித் தகைமையுடைய பெண்களுக்குப் பிறந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கையின் சராசரிப் பெறுமதி குறைந்த கல்வித் தகைமையைக் கொண்ட பெண்களைவிடக் குறைவு என்பதைக் காட்டுகின்றது. இவ்வாறு ஏற்படப் காரணம் வேலை செய்யும் பெண்களுக்கு தமது குழந்தைகளைப் பராமரிப்பதற்குரிய வசதிகள் குறைவாகக் காணப்படுவதாக இருக்கலாம். இதற்கமைய உயர்ந்த கல்வியறிவு கொண்ட பெண்களின் அறிவு மற்றும் ஆற்றலினால் நாட்டிற்குப் பயனுள்ள சேவையை வழங்க நெகிழ்வுடைய வேலை

மணித்தியாலங்கள் (குடநஒை ாழரசள), வீட்டிலிருந்தவாறே வேலை செய்வதற்கான வசதிகள் போன்ற புதிய மாற்று நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட வேண்டும்.

## சனத்தொகை முதுமையடைதல்

தெற்காசிய வலய நாடுகளுள் விரைவாக முதுமையடையும் சனத்தொகை வாழும் நாடாக இலங்கை காணப்படுவதுடன் எதிர்வரும் சில தசாப்தங்களுள் முதுமையடையும் வேகம் மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறு சனத்தொகை வேகமாக முதுமையடைவதால் குறிப்பிடத்தக்க சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க நேரிடும். முதியோரைப் பராமரித்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தும் இந்நாட்டில், பாரம்பரிய குடும்பக் அமைப்பு சனத்தொகையின் புதிய வாழ்க்கைப் போக்கினை சந்தித்து படிப்படியாக வழக்கொழிந்து செல்லும் தன்மையைக் காட்டுவதால் இந்த காலப்பகுதிக்குள் முதுமையடைந்த விதவைகள் தனிமையாக வாழும் நிலை அதிகரிப்பதற்குரிய வாய்ப்புக்கள் காணப்படுவது தெளிவாகின்றது. இதற்கு மேலதிகமாக முதுமைச் சனத்தொகை உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கும் ஆபத்து நிலையும் அதிகமாகக் காணப்படுகின்றது. முதுமைச் சனத்தொகை உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கும் அவதான நிலை அதிகமென்பதால் குடும்பம் மற்றும் சமூகம் அவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். தொழில்படை மற்றும் அதன் உற்பத்தித் திறன் சனத்தொகை முதுமையடைவதன் காரணமாக எதாவதொரு பாதிப்புக்குள்ளாகின்றது. முதுமைச் சனத்தொகைக்கான சுகாதாரச் சேவைகளை வழங்கல் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமைகள் தொடர்பில் அரசாங்கத்தைப் போன்று குடும்பங்களுக்கும் பாரிய செலவினை மேற்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

சிறுவர்களுக்காக செலவு செய்யும் பொதுமக்களின் பணத்தின் அளவைக் குறைப்பதன் மூலம் முதியோர்களுக்கான செலவினை குறிப்பிட்டளவு நிருவகிக்க முடியும். மேலும் முதியோரால் தாம் வாழ்ந்த காலத்தினுள் அவர்களால் சேமிக்கப்பட்ட வளங்கள் மற்றும் செல்வங்களை அவர்களைப் பாராமரிக்கும் பிள்ளைகளுக்கு மாற்றம் செய்யப்படுவது இந்த நடவடிக்கைக்கு அரசினால் செலவு செய்ய வேண்டிய பணத்தினை மேலும் குறைத்துக் கொள்ளவதில் தாக்கம் செலுத்தும் காரணியாகக் காணப்படுகின்றது.

இதற்காகத் தற்போது அரசாங்கத்தின் மூலம் முதியோரைப் பராமரிப்பதற்காக பல்வேறு கொள்கைகள், சட்ட திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்காகக் கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதால் முதியோரை பராமரிக்கும் செயற்பாட்டினை வலுப்படுத்த முடியும்.

- முதியோருக்காகக் காணப்படும் வைத்திய சிகிச்சை நிலையங்களுக்கான வசதிகளை மேலும் உயர்த்தல்
- முதியோராப் பராமரிக்கும் பிள்ளைகளுக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் முதியோரைப் பராமரித்தல் தொடர்பில் அவர்களுக்குள்ள பொறுப்புக்கள் பற்றி தொடர்ச்சியாக தெளிவுபடுத்தல்
- முதியோரைத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கான கால எல்லையை மேலும் அதிகரிப்பதன் மூலம் அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல்
- சமூகத்தின் நல்வாழ்வுக்காகத் தமது வாழ்க்கை மூலம் பயன்மிக்க சேவையை வழங்குவதற்கும் மற்றும் அவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளவதற்கும் வாய்ப்புக்கள் மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தல்
- சமூகத்தில் தனிமைப்படுத்தப்படும் முதுமையடைந்த விதவைகளுக்காக அரசாங்கம்

விசேட கவனம் செலுத்தல்

- அன்றாடச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முடியாத வயோதிபச் சனத்தொகையினருக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

### மக்களியல் வெகுமதிகளின் பயனைக் பெற்றுக்கொள்ளல்

இலங்கை தற்போது மக்களியல் வெகுமதிகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாடாக மாற்றமடைந்துள்ளது. அது 2030 தசாப்பதங்களின் முன்னரைப் பகுதி வரை காணப்படும். இந்தக் கால எல்லைக்குள் சிறுவர் சனத்தொகையில் வீழ்ச்சியும் வேலை செய்யும் சனத்தொகையில் அதிகரிப்பும் முதியோர் சனத்தொகையை முகாமை செய்யக்கூடிய மட்டத்தில் காணப்படுவதனால் சரியான கொள்கை அமுலாக்கங்களை மேற்கொண்டால் வேகமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வதற்குரிய பின்னணியை உருவாக்கிக் கொள்ளலாம். தற்போது மொத்த வேலையின்மை மட்டம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருத்தல், வறுமை மட்டம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருத்தல், தனிநபர் வருமானம் படிப்படியாக அதிகரித்துச் செல்லல் என்பவற்றினூடாக இலங்கையானது இதற்கு வெற்றிகமாக முகங்கொடுத்துள்ளதென்பது தெளிவாகின்றது. அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள், கொள்கைகள் மற்றும் உபாய மார்க்கங்களுக்கு கீழ்வரும் விடயங்கள் தொடர்பிலும் அவதானத்தைச் செலுத்தல் பொருத்தமானதென்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

- இளைஞர் சனத்தொகைக்கான தொழில் வாய்ப்புக்களை இலகுபடுத்துவதன் மூலம் இளையோர் வேலையின்மை வீதத்தை மேலும் வீழ்ச்சியடையச் செய்தல்
- கல்வி, தொழில்கல்வி மற்றும் தகவல் தொழில் நுட்பம் மூலம் இளையோர் சனத்தொகையின் திறமைகளை அதிகரித்தல்
- ஆண்களின் தொழிற்படை பங்குபற்றலைப் போன்று அரைவாசியிலும் குறைவாகவுள்ள பெண்களின் தொழிற்படை பங்குபற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- தொழில்படையின் உற்பத்திற் திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

### கல்வி

### பெருந்தோட்டத் துறையின் எழுத்தறிவு வீதம்

- ஒட்டு மொத்தமான இலங்கையின் எழுத்தறிவு வீதம் உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தாலும் பிரதேச ரீதியில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு கொள்ளலாம். பெருந்தோட்டத்துறைப் பெண்களின் எழுத்தறிவு வீதத்தை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுமிடத்து மிகக் குறைந்தது என்பது தெளிவாகின்றது. இதற்கமைய அந்தப் பிரிவில் பெண்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்துதல் வேண்டும்.

### கணினி அறிவு

இலங்கையின் இளையோர் சனத்தொகையின் கணினி அறிவு வீதம் முதியோரை விட உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருக்கின்றது. இந்தச் அறிவினைச் செயற்றிறன் கொண்ட வகையில் இலங்கையின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் தற்போது கைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அதிகமான நடவடிக்கைகளை படிப்படியாக கணினித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. இது தற்போது பல்வேறு நிறுவனங்கள் மூலம் அடையாளங் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்ட வருகின்றது. கணினி அறிவின் பிரதேச ரீதியான வேறுபாட்டினை குறைத்துக் கொள்வதற்காக பன்மொழி ஆற்றலை விருத்தி செய்து கொள்ளல் அல்லது கணினியில் தேசிய மொழிகளில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஆற்றலை விருத்தி செய்தல் வேண்டும்.

## முன்பள்ளிக் கல்வி

நிகழ்கால இலங்கையில் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமான சமூகத் தேவையாகும். ஆனால் நாட்டின் முன்பள்ளிக் கல்வியில் முறைசார் தன்மை காணப்படவில்லை. இதனால் முன்பள்ளிகளுக்கான உரிய (தற்போது காணப்படும்) அறிவுறுத்தல்கள் மற்றும் தரத்தினை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அவற்றின் கல்வி நிலைமையினை பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் 5 வயதிலும் குறைவான சிறு குழந்தைகள் முன்பள்ளி செல்வது மேலும் அதிகரிப்பதால் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் மேலும் கவனம் செலுத்தி இந்த விடயத்தை மேலும் விரிவுபடுத்தல் வேண்டும். முன்பள்ளிகளுக்காக தரமான முன்பள்ளி, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் எனைய வசதிகளை அதிகரிக்க வேண்டும்.

## பாடசாலைக் கல்வி மற்றும் பாடசாலை இடைவிலகல்

தொகைமதிப்புத் தரவுகளுக்கமைய மட்டக்களப்பு மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 17 வயதிலும் குறைந்த பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலகும் தன்மை ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க மிக அதிகம் என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது. அதற்கமைய குறைந்த பட்சம் க.பொ.த (உ.த) வரையாவது பாடசாலை செல்வதை அதிகரித்துக் கொள்வதற்கு கவனம் செலுத்த வேண்டும். மேலும் 25 வயதிற்கு மேற்பட்ட இலங்கையருள் நூற்றுக்கு 25 வீதம் அளவில் தரம் 9 அல்லது 10 வரை மட்டும் கல்வி கற்றவர்கள் என்பது தெளிவாகின்றது. இது சிறந்ததொரு நிலமை அல்ல என்பதால் பொதுவாக கல்வி பெறும் மட்டத்தை மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான வாய்ப்புக்களை விரிவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

## உள்ளகக் குடிப்பெயர்வு

இலங்கையின் தலைநகரம் மேல் மாகாணத்தில் அமையப் பெற்றிருப்பதுடன் அங்கு நிருவாக நிலையங்கள், கைத்தொழில் வலயங்கள், வர்த்தக வலயங்கள் மற்றும் சேவை மத்திய நிலையங்கள் உட்பட பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நகராக்க வசதிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுமிடத்து மேல் மாகாணம் உள்ளக இடப்பெயர்வுக்காக மிகவும் நகரமயமாக்கப்பட்ட மற்றும் கவர்ச்சிகரமான மாவட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆகையால் இந்த மாகாணம் மேலும் அதிக எண்ணிக்கையான இடப்பெயர்வாளர்கள் வருகைதரக் கூடிய மாகாணமாகக் காணப்படுவதுடன் அந்த மாகாணத்திற்குரிய கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்கள் இலங்கையின் கவர்ச்சிகரமான இடப்பெயர்வின் முடிவிடமாகக் காணப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டின் குடிசனத் தொகைமதிப்புக்ககமைய அந்த மூன்று மாவட்டங்களிலும் அதிக சனத்தொகை அடர்த்தி பதிவாகியுள்ளது. ஆகையால் மேல் மாகாணத்திற்கு சனத்தொகை குடிபெயர்வதைக் குறைப்பதற்கு விசேட வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். மேல் மாகாணத்திற்கு இவ்வாறு அதிக சனத்தொகை தெற்கு, மத்திய, சப்ரகமுவா மற்றும் வடக்கு மாகாணங்களிலிருந்து குடிபெயர்கின்றனர்.

2012 ஆம் ஆண்டில் அதிகமான வெளிநோக்கிய இடப்பெயர்வு (எதிர்க்கணிய தேறிய இடப்பெயர்வு) விதாசாரம் மத்திய, தென், கிழக்கு மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களில் இடம்பெற்றுள்ளது. இதற்குப் பிரதான காரணம் அந்த மாகாணங்களில் தொழிலின்மை, வறுமை, குறைந்தபட்ச விவசாய உற்பத்திகள், போதுமான விவசாய நிலங்கள் இன்மை மற்றும் குறைந்த வருமான நிலமை என்பனவாகும். ஆகையால் மாகாண மட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும். அந்த மாகாணங்களில் கீழ்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், விவசாய உற்பத்திகளை அதிகரித்து மனித வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தித் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் இந்த மாகாணங்களிலிருந்து குடிபெயர்வதனைக் குறைப்பதற்கு மாகாண மட்டத்திலான திட்டமிடல்கள் தொடர்பில் அவதானத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

## தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் சனத்தொகை

இலங்கையில் அதிக தொழிற்படையினர் மற்றும் மக்கள் சென்றிருப்பது மத்திய கிழக்கு நாடுகளுக்காகும். 2012 தொகைமதிப்புக்கமைய (தற்காலிகமாக வெளிநாடு செல்லும்) பெண்களில் நூற்றுக்கு 79 வீதம் மற்றும் ஆண்களில் நூற்றுக்கு 70 வீதம் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத், கட்டார், ஓமான், பஹ்ரேன் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளுக்குச் செல்கின்றனர். ஆகையால் மத்திய கிழக்கு தவிர்ந்த நாடுகளுக்கு அதிக தொழிலாளர்களை அனுப்புவதற்கு தேவையான வேலைத்திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில் அவதானத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

அவ்வாறே இளைஞர் பரம்பரை இவ்வாறு வெளிநாடுகளை நோக்கி படையெடுத்துச் செல்லும் போது அவர்கள் உள்ளடங்கும் குடும்பங்களின் பொறுப்புக்கள் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படும். குறிப்பாக தொழிலுக்காக வெளிநாடு செல்லும் பெண்களின் பிள்ளைகள் மற்றும் வயோதிபர்களின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகின்றது. ஆகையால் பெண்கள் வெளிநாடுகளை நோக்கிப் படையெடுக்கும் மாவட்டங்களில் அவர்கள் குடும்பங்களின் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான முறைமைகளை உருவாக்க வேண்டும்.

மேலும் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் அதிகளவில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் காரணத்தினால் நாட்டின் சில துறைகளில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

## உடலியல் மற்றும் உளவியல் இடர்பாடுகள்

இலங்கையில் 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களில் நூற்றுக்கு 8.7 வீதமானவர்களுக்கு பார்த்தல், கேட்டல், நடத்தல், அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஞாபகத்தில் வைத்திருத்தல் மற்றும் கருத்துக்களை பரிமாரிக்கொள்ளல் போன்ற ஆறு பிரிவுகளுக்குரிய இடர்பாடுகளில் ஒரு இடர்பாடாவது காணப்படுவதாகப் பதிவாகியுள்ளது. அவர்களின் இடர்பாடு காரணமாக வேலைக்குச் செல்வதில் காணப்படும் தடைகளைக் குறைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு கட்டிடங்களை அமைத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## வீட்டு வசதிகள்

வசிப்பதற்காக வீடொன்று இருத்தல் அடிப்படை மனித தேவையாகும். வீடுகளின் தன்மையானது நாடொன்றில் மக்களின் சமூக நிலமையை வெளிக்காட்டும். வீடுகளின் அமைப்பு, அளவு, வசதிகள் மற்றும் அவை அமையப் பெற்றுள்ள இடங்கள் மக்களின் சமூக நிலைமையைப் பாதிக்கும் காரணிகளாகும். இலங்கையிலுள்ள வீடுகளில் பெரும்பாலானவை தனி வீடுகள் என்பதுடன் அவை குடித்தனத் தலைவர் ஒருவருக்குச் சொந்தமானதாகும். இலங்கையிலுள்ள வீடுகளின் தன்மை பெரும்பாலும் நல்ல நிலைக்கு வளர்ச்சியடைந்திருப்பினும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் நிலமை தொடர்பில் மேலும் கவனம் செலுத்த வேண்டுமென்பதுடன் அரசு தற்போது அந்த வீடுகளின் தன்மையை விருத்தி செய்வதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொழும்பு நகரிலுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களால் தற்காலிகப் பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டள்ள வீடுகளுக்குப் பதிலாக வேறு வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றபோது அந்த வீடுகளில் வசிக்கும் மக்களின் ஜீவனோபாய நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறில்லையெனின் புதிய ஜீவனோபாய முறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். புதிய வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் போது அந்த வீடுகளைச் சிறந்த முறையில் பராமரிக்கத் தேவையான அறிவு மற்றும் அயலவர்களுடன் சகவாழ்வுடன் வசிப்பதன் முக்கியத்துவம் தொடர்பாகத் தெளிவூட்டுதல் வேண்டும்.

டெங்கு போன்ற சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காக நாட்டினுள்

கழிவகற்றும் முறைமையினை விருத்தி செய்வது அவசியமாகும்.

வீட்டினைச் சிறந்த முறையில் பராமரித்தல் மற்றும் மின்சாரம் போன்ற ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளவதற்கான செலவுகள் அதிகம் என்பதால் வீடுகளை அமைக்கும் போது அவற்றின் அளவு தொடர்பாக விசேடமாகக் கவனம் செலுத்துதல் வேண்டும். வீடுகளைப் போன்று ஏனைய கட்டிடங்களையும் அமைக்கும் போதும் சுற்றாடலை நேசிக்கும் முறையில் நிருமாணிக்க வேண்டும். தேசிய மின்சார வலையமைப்பின் மூலம் பெரும்பாலான வீடுகளுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுத்தாலும் பிரதேச அடிப்படையில் நோக்குமிடத்து மின்சாரம் இல்லாத பிரதேசங்கள் இன்னும் காணப்படுவதால் அனைவருக்கும் தேசிய வலையமைப்பினூடாக மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையில் காணப்படும் நீர் மூலத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்காக விசேட அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. சுத்தமான குடிநீர் இன்மை காரணமாக பல்வேறு சகாதாரப் பிரச்சினைகளால் தற்போதும் மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருப்பதால் இந்த நீர் மூலத்தினை சுத்தமாகப் பேணுவதற்காகக் கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை உரிய தரத்திற்கமைய வெளியேற்றுவதற்கும் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களை குறைத்துக் கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தி எதிர்கால சந்ததியினருக்காக சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை பாதுகாக்க வேண்டியுள்ளது.

இலங்கையிலுள்ள வீடுகளின் மலசலகூட வசதிகளைக் கவனத்தில் கொண்டால் நூற்றுக்கு 90 வீதத்திலும் அதிகமாக மேம்படுத்தப்பட்ட மலசலகூட வசதிகள் அதாவது வீட்டுக் கூறுக்காக மட்டும் பயன்படுத்தப்படும் நீரடைப்பு மலசல கூடங்கள் இருப்பது தெளிவாகின்றது. இதனைப் பிரதேச அடிப்படையில் நோக்குமிடத்து சில பிரதேசங்களில் இன்னும் பாதுகாப்பற்ற மலசல கூடங்களைப் பயன்படுத்தப்படுவதால் அவற்றை நவீனமயப் படுத்துவதற்குத் தேவையான வசதிகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டியதுடன் மக்களையும் அது தொடர்பாகத் தெளிவுபடுத்த வேண்டும்.

இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் முறையினைப் பார்க்கும் போது பிரதேசத்திற்கமைய பாரியளவில் வேறுபாடு காணப்படுவது தெளிவாகின்றது. பிரதேச ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த வேறுபாட்டினைக் குறைத்துக் கொள்வதற்காக இலங்கையின் சகல பிரதேசங்களிலும் காணப்படும் மக்களுக்குக் குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு அறிவைப் போன்று இணையத் தளத்தினுள் பிரவேசிக்கும் வசதிகளையும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வசதிகளை விரிவுபடுத்தல் மிகவும் அவசியமாகும்.

## உசாத்துணைகள்

De Silva, W.I., 2007, **A Population project of Sri lanka for the Millenium, 2001-2101: Trends and Implications**, Institute for Health Policy, Colombo

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 1986, **குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 1981, பகுதி 3, பொது அறிக்கை**

# நன்றிகள்


- தொகைமதிப்புக்கான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டமைக்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு

- தொகைமதிப்பினைத் திட்டமிடல், நடாத்துதல், இணைப்பாக்கம் செய்தல் மற்றும் தொகைமதிப்புத் தகவல்களை வகைப்படுத்தும் செயற்பாட்டின் போது பல்வேறு மட்டங்களில் பங்களிப்பினை வழங்கிய தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தற்போது திணைக்களத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும்

- களத்தில் தகவல் சேகரிக்கும் கட்டத்தின் போது ஒத்துழைப்பு வழங்கிய நிருவாகக் கட்டமைப்புடன் தொடர்புடைய மாவட்டச் செயலாளர்கள், மேலதிக/ உதவி மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு

- மாவட்ட செயலகத்தின் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுத் தலைவர் மற்றும் ஏனைய பணிக்குழுவினர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள புள்ளிவிபரப் பணிக்குழுவினர்

- தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் சனத்தொகைமதிப்பு மற்றும் மக்களியல் பிரிவில் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்களைப் போன்று அதில் முன்பு கடமையாற்றிய சகல உத்தியோகத்தர்களுக்கும்

- தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவு வகைப்படுத்தும் பிரிவின் அனைத்துப் பணிக்குழுவினருக்கும்

- இவ்வெளியீட்டை அச்சிட்டுத் தந்த தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் அச்சிடல் பிரிவின் சகல பணிக்குழுவினருக்கும்

- நிதி ஒதுக்கீடு மற்றும் தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுத்தந்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்திற்கு (UNFPA)

- உண்மைத் தகவல்களை வழங்கியமைக்கு இலங்கை மக்கள் அனைவருக்கும்

**குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 2012 - பிரதான தேடல்கள்**, என்ற இவ்வெளியீடானது ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியத்தின் ஆதரவுடன், பின்வரும் சனத்தொகை மற்றும் மக்களியற் சிறப்பறிஞர்களின் ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டலுடன், திணைக்களத்தின் சனத்தொகைமதிப்பு மற்றும் மக்களியல் பிரிவுப் பணிக்குழுவினரால் தயாரிக்கப்பட்டது.

1. திரு. எச். ஆர். குணசேகர - தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் முன்னாள் மேலதிகப் பணிப்பாளர் நாயகம், ஆலோசகர் - ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்

2. பேராசிரியர் இந்திரலால் டீ சில்வா - மக்களியல் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர், கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் சிரேஷ்ட ஆய்வாளர், உயர் கற்கை நெறிகள் (NCAS), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC)

3. திரு. ஏ. ஜீ. டபிள்யூ. நாணயக்கார - தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் நாயகம், சிரேஸ்ட ஆய்வாளர், கொள்கைசார் கற்கைகள் நிறுவனம்

4. கலாநிதி (திருமதி) சுனேத்ரா பெரேரா - தலைவர், மக்களியல் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

## வெளியீட்டின் உருவாக்கமும் ஒருங்கமைப்பு நடவடிக்கைகளும்

இவ்வெளியீட்டை உருவாக்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ. ஜே. சத்தரசிங்க அவர்களால் பெறுமதிமிக்க பல கருத்துக்களும் முன்மொழிவுகளும் வழங்கப்பட்டன.

குடிசனத் தொகைமதிப்புப் பரப்பாக்கக் கருத்தரங்கிற்கு இவ்வாறான வெளியீடொன்றை உருவாக்கும் ஆலோசனை, சனத்தொகை மற்றும் மக்களியல் பிரிவுப் பணிப்பாளர் திருமதி ஐ. ஆர். பண்டார அவர்களால் முன்மொழியப்பட்டது. அது மட்டுமன்றி மேற்குறிப்பிடப்பட்ட சிறப்பறிஞர் குழுவினருடனும், ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்துடனும் இணைப்பாக்கம் மற்றும் பிரிவின் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களுக்குப் பங்களிப்பும் வழங்கினார்.

இவ்வெளியீட்டைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள், பிரிவின் புள்ளிவிபரவியலாளர்களான திருமதி. எஸ். ரீ. சீ. கவேஷிக்கா, திரு. எஸ். யூ. பீ. ஜயமகா மற்றும் திருமதி. கே. ஏ. எஸ். பீ. கொடிக்கார ஆகியோரால் மெற்கொள்ளப்பட்டன. புள்ளிவிபர உத்தியோகத்தர்களான திருமதி. ஓ. ஆர். விஜயகுணசிங்க, திருமதி ஐ. ஆர். ஹப்புதந்ரி, திருமதி எல். ஏ. டீ. டீ. பீ. ஜயசேகர மற்றும் புள்ளிவிபர உதவியாளர் திரு. வீ. ரீ. அநுருத்த ஆகியோரால் அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் குறிகாட்டிகள் ஆகியன தயாரிக்கப்பட்டன. குறியீட்டு எழுதுனர்/ தரவு பதியுனர் திரு. ஆர். டீ. எம். பத்மகுமார அவர்களால் வெளியீட்டுக்கான தேசப்படங்கள் மற்றும் அட்டைப்படம் உருவாக்கப்பட்டன.

இவ்வெளியீடு சிரேஷ்ட புள்ளிவிபரவிபரவியலாளர் திரு. சி. தனபாலசிங்கம் மற்றும் புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு. சு. பூங்குன்றன் ஆகியோரால் தமிழாக்கம் செய்யப்பட்டு சிரேஸ்ட புள்ளிவிபரவிபரவியலாளர் திரு. சி. தனபாலசிங்கம் அவர்களின் மேற்பார்வையில் புள்ளிவிபர உத்தியோகத்தர் சு. பூங்குன்றன் அவர்களால் செவ்வையாக்கம் செய்யப்பட்டது.

சனத்தொகை மற்றும் மக்களியல் பிரிவின் குறியீட்டு எழுதுனர்/ தரவு பதியுனர் செல்வி ஹாதியா ரஸீன் அவர்களால் கணினித் தட்டச்சு செய்யப்பட்டு புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு. சு. பூங்குன்றன் அவர்களால் கணினி வடிவமைப்புச் செய்யப்பட்டு அச்சிடலுக்காக வழங்கப்பட்டது.

அச்சகப் பிரிவுத் தலைவர், புள்ளிவிபரவியலாளர் திரு. டீ. சீ. ஏ. பெர்னான்டோ மற்றும் அவரது பணிக்குழுவினரால் இவ்வெளியீடு அச்சிடப்பட்டது.